
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2023 மார்ச் 2 வியாழக்கிழமை
# தினகரன்
THINAKARAN
தினகரன்
1932 - 2022
வரு. 91 இல. 52
Thursday 02, March, 2023
16பக்கங்கள்
50/-




நகை வர்த்தகத்தின் பாதுகாப்பு

## இலங்கை நகை வர்த்தகர் சங்கம் பொலிஸ் மாஅதிபருடன் சந்திப்பு



நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக இடம்பெற்று வரும் அதிகரித்த குற்றச் செயல்கள் தொடர்பாகவும், குற்றச் செயல்களில் ஈடுபடுவோரால் நகை வர்த்தகர்களுக்கு ஏற்படும் அசௌகரியம் சம்பந்தமாகவும் அகில இலங்கை நகை வர்த்தக சங்க நிர்வாகிகள், பொலிஸ் மாஅதிபரைச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளனர். அத்துடன் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களிடமிருந்து 06

பல்வகைப் போக்குவரத்து முறைமை ஆரம்பம்

## மாகும்புர மத்திய நிலையத்தினூடாக சகல பஸ்களும் செல்வது கட்டாயம்

அமைச்சர் பந்துல குணவர்தனவின் ஆலோசனைக்கமைய திட்டம் ஆரம்பம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

"ஹைலெவல்" பாதையில் பயணிக்கும் சகல பயணிகள் போக்குவரத்து பஸ்களும் மாகும்புர பல்வகை போக்குவரத்து மத்திய நிலையத்தினூடாகச் செல்ல வேண்டும் என்ற நடைமுறை இன்று (02) முதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ஹைலெவல் பாதையில் பயணிக்கும் சில பஸ் வண்டிகள், மாகும்புர 06

தொழிற்றுறைக்கு பாரிய சலுகை

## மண்ணெண்ணெய் விலை 50 ரூபாவினால் குறைப்பு

நேற்று நள்ளிரவு முதல் குறைந்தது



**லோரன்ஸ் செல்வநாயகம்**

### புதிய விலை ரூ.305

### தொழில்துறை மண்ணெண்ணெய் விலை 134 ரூபாவால் குறைப்பு

மண்ணெண்ணெயின் விலை நேற்றிரவு முதல் குறைவடைந்துள்ளது. இதற்கிணங்க, ஒரு லீற்றர் மண்ணெண்ணெயின், விலை 50 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. ஒரு லீற்றர் மண்ணெண்ணெயின் புதிய விலை 305.00 ரூபாவாகியுள்ளது.

இதேவேளை, லங்கா கைத்தொழில் மண்ணெண்ணெய் ஒரு லீற்றரின் விலை 464.00 06

போராட்டங்கள், வேலைநிறுத்தங்களால் அரச வங்கிகள் முடங்கினால்

# அரச நிறுவனங்களுக்கு தனியார் வங்கிகளில் வைப்புக் கணக்கு

விஷேட அமைச்சரவைக் கூட்டத்தில் நேற்று தீர்மானம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

மருந்துப் பொருட்கள் உட்பட அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்வதற்கு கடன் கேள்விப்பத்திரம் விநியோகிக்கும் செயற்பாடுகளுக்கு வேலை நிறுத்தங்களால் தடை ஏற்படுமானால், தனியார் துறை வங்கிகளில் வைப்புக்கணக்கை ஆரம்பிப்பதற்காக அமைச்சுக்கள், திணைக்களங்கள் உள்ளிட்ட அரச நிறுவனங்களுக்கு அனுமதி வழங்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

**மருந்துப் பொருட்கள் உட்பட அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்வதற்கு நிதியமைச்சின் முழுமையான அனுமதியை வழங்கவும் தீர்மானம் – அமைச்சர் பந்துல**

நேற்று மாலை நடைபெற்றுள்ள விசேட அமைச்சரவைக் கூட்டத்திலேயே, இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் நிதி அமைச்சின் முழுமையான அனுமதியின் கீழ், மேற்படி வைப்புக் கணக்கை தனியார் வங்கிகளில் ஆரம்பிப்பதற்கு இடமளிப்பது தொடர்பில் அங்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த விசேட அமைச்சரவைக் கூட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நடைபெற்றுள்ளது. 06

## பிரித்தானியாவுக்கான இலங்கை பிரதிநிதியாக கஜன் நியமனம்

நியமனக் கடிதம் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகமவினால் வழங்கி வைப்பு



ஐக்கிய இராச்சியத்தில் தற்போது வசிக்கும் இளம் வர்த்தகரான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கந்தையா கஜன் முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் பிரித்தானியாவுக்கான இலங்கை பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கான நியமனக் கடிதத்தை 06

## வேலைநிறுத்தம் இடம்பெற்றாலும் வங்கிகள் வழமைபோல் இயங்கின

இலங்கை வங்கி, மக்கள் வங்கி தலைவர்கள் தெரிவிப்பு 03

## தகவலறியும் உரிமைச் சட்டம் எம்.பிமாருக்கும் பொருந்தும்


மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**




தகவலறியும் உரிமைச் சட்ட விடயங்கள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் உரித்துடையதென்றும், அந்த வகையில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் தகவல்களை சமர்ப்பிப்பதற்கு அவர்களும் கடமைப்பட்டுள்ளனரெனவும் மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று அறிவித்துள்ளது. சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை 06

## அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி வலுவடைவு



அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் வலுவடைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்ட நாணய மாற்று விகிதத்தின்படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் விலை 353 ரூபாவாகவும், விற்பனை விலை 363 ரூபா 30 சதங்களாகவும் பதிவாகியுள்ளன.

அத்துடன், ஸ்ரேலிங் பவுண் கொள்முதல் விலை 421 ரூபா 81 சதமாகவும், விற்பனை விலை 438 ரூபா 07 சதமாகவும் பதிவாகியுள்ளது.

ஈஸ்டர் தாக்குதல் இழப்பீட்டிலிருந்து விடுவித்தல்;

## மைத்திரி தாக்கல் செய்த மனு நீதிமன்றால் நிராகரிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த மேன்முறையீட்டு மனுவை, 21 ஆயிரம் ரூபாவுக்கு உட்படுத்தி செல்லுபடியற்றதாக்க மேல் மாகாண சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இம்மனு மீதான விசாரணை நேற்று (01) எடுத்துக்கொள்ளப்பட்டது. நீதிபதிகளான சஞ்சீவ மொராயஸ் மற்றும் பிரேங்க் குணவர்த்தன ஆகியோர் 06

## பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை மீள அமெரிக்கா உதவும்


தூதுவர் ஜூலி சங் தெரிவிப்பு

இலங்கை நெருக்கடியான நிலையிலிருந்து மீளும் வரை, அமெரிக்கா துணை நிற்குமென அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார். இந்தோபசிபிக் வலயம் தொடர்பான புதிய அணுகுமுறை குறித்த நூல் வெளியீட்டு விழாவில் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் நடைபெற்ற இந்நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர், அமெரிக்காவின் நெருங்கிய நட்பு நாடுகளில் இலங்கையும் ஒன்று. இந்த வகையில் இலங்கையின் இன்றைய நெருக்கடி நிலைக்கு அமெரிக்கா துணை நிற்குமென்றார்.

இவ்வைபவத்தில், அமெரிக்க இராணுவ மற்றும் தூதரக உயரதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

## சுற்றுலா பயணிகளின் பாதுகாப்புக்கு STF



இலங்கைக்கு வரும் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்புக்காக, விசேட அதிரடிப்படையினர் ஈடுபடுத்தப்பட உள்ளனர். இது தொடர்பான கலந்துரையாடல் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் 06

## மே, மாத போராட்டங்களால் 180 வீடுகள், 100 வாகனங்கள் சேதம்

நீதிமன்றுக்கு அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களம் அறிவிப்பு 06



## மக்களுக்கான உரிமைகளைப் பெற ஒரே குரலில் போராட முன்வரவும்

வடக்கு-கிழக்கு தமிழ் தலைவர்களிடம் மனோ MP வேண்டுகோள் 03

## புலத்கொஹூபிட்டியவில் சிறுத்தையின் சடலம் மீட்பு

தேயிலைத் தோட்டம் ஒன்றில் கண்டுபிடிப்பு

புலத்கொஹூபிட்டிய – மேல் உடுவ பிரதேசத்திலுள்ள தேயிலைத் தோட்டத்தில், சிறுத்தையொன்று வலையில் சிக்கி உயிரிழந்துள்ளது.


உயிரிழந்துள்ள சிறுத்தை சுமார் 05 வயதுடைய 5,1/2 அடி நீளமுள்ளதென புலத்கொஹூபிட்டிய வனவிலங்கு அலுவலகம் 06

## புதிய வரிக்கொள்கைக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள்

40 தொழிற்சங்கங்கள் நேற்று பங்கேற்பு 03

## வெடிபொருட்கள் அகற்றப்படாதுள்ள முகமாலையில் சட்டவிரோத மண் அகழ்வு


நடவடிக்கை எடுக்க மக்கள் கோரிக்கை 03



# லேக்ஹவுஸ் ஸ்தாபகர் டி.ஆர்.விஜயவர்த்தனவின் ஜனனதின பூஜை










படங்கள்: சுதத் நிஷாந்த, ஷான் ரூபஸ்சர



அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் குருநாகல் மாவட்ட சம்மேளனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட தலைமைத்துவ பயிற்சிப்பட்டறை அண்மையில் குருநாகல் நகர 'Blue Sky Hotel' இல் பௌசர் பாரூக் தலைமையில் நடைபெற்றது. இப்பயிற்சி நெறியில் வளவாளர்களாக கொழும்பு பல்கலைக்கழக சமூகவியல் துறை பேராசிரியர் கலாநிதி மஹீஸ், பாராளுமன்ற சிரேஷ்ட ஆய்வாளர் அஜ்வதீன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

## பேராதனைப் பல்கலைக்கழக மாணவி திடீர் மரணம்

*அக்குறணை குறூப் நிருபர்*

பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவியொருவர் நேற்று காலை (1) பேராதனை வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார். இவர் குருநாகல் பிரதேசத்தைச் சேர்ந்த வினோதி டி சில்வா என்ற பேராதனை பல்கலைக்கழக பொறியியல் பீட இறுதி வருட மாணவி என தெரியவருகிறது. பேராதனைப் பொலிஸார் மற்றும் பல்கலைக்கழக நிர்வாகம் என்பன மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மலசேக்கர விடுதியில் தங்கியிருந்த மாணவி சிறிது காலமாக மன அழுத்தத்துக்கு சிகிச்சைகள் பெற்று வந்துள்ளார். நேற்றுமுன்தினம் இரவு (28) நோய் வாய்பட்ட நிலையில் பேராதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.

# இ.தொ.கா வேட்பாளர்கள் மக்கள் பணியை தவறாது செய்ய வேண்டும்

## வேட்பாளர்களுக்கு இ.தொ.கா தலைவர் அறிவுறுத்தல்

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிடும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் வேட்பாளர்களுடன் இ.தொ.காவின் தலைவர் செந்தில் தொண்டமான் ஊவா மாகாணசபையின் கேட்போர் கூடத்தில் நேற்று விசேட கலந்துரையாடலொன்றை மேற்கொண்டார்.

இக்கலந்துரையாடலில், இ.தொ.காவின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான டி.வி.சென்னன், உபதலைவர் அசோக்குமார், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கணேசமூர்த்தி மற்றும் இ.தொ.காவின் உள்ளூராட்சி சபை வேட்பாளர்கள் கலந்துகொண்டனர்.



இதன்போது உரையாற்றிய இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான், உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடைபெறுகிறதோ இல்லையோ அனைவரும் தொடர்ந்து மக்கள் பணியை மேற்கொள்வதை நிறுத்திவிடக்கூடாது. தேர்தலில் வெற்றிபெற்றால் தான் மக்கள் பணியை செய்ய வேண்டுமென்றில்லை. சமூகப்பணிக்கு வந்துவிட்டால் எந்தவொரு சூழலிலும் மக்கள் பணியை தொடர்ந்து செய்ய வேண்டும். தேர்தலில் வெற்றி பெற்றால் தான் பணியாற்றுவேன் என்பது ஒரு சுயநல அரசியலாகும். மக்கள் சேவைதான் எமது மூலாதாரம்.

தேர்தல் நடைபெறுமா? இல்லையா? என்ற குழப்ப நிலை நீடிப்பதால் மக்கள் பணியில் ஓய்வெடுத்துவிட்டு தேர்தல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் மீண்டும் மக்களை சந்திக்க செல்லாம் என்ற நிலைப்பாட்டில் இ.தொ.கா வேட்பாளர் எவரேனும் இருந்தால் மீண்டும் வேட்புமனுக்களை தாக்கல் செய்யும் நிலைமை ஏற்படும். அவர்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்படாது.

இன்றைய பொருளாதார நெருக்கடியான சூழலில் மக்களுடன் முன்னின்று அர்ப்பணிப்புடன் செயற்படுவதே இ.தொ.காவின் பிரதான நோக்கமாகுமென அவர் தெரிவித்தார்.

# அமரர் தேசமான்ய இரத்தினசாமி அன்பழகனின் மறைவு மலையக சமூகத்துக்கு பேரிழப்பாகும்

## கண்டி தமிழ் வர்த்தக சங்க பொதுச்செயலாளர் எஸ். பரமேஸ்வரன்

*மாவத்தகம தினகரன் நிருபர்*



கண்டி வர்த்தக சங்கத்தின் தலைவர் அமரர் தேசமான்ய இரத்தினசாமி அன்பழகனின் மறைவு மலையக சமூகத்துக்கு ஈடு செய்ய முடியாத பெரும் பேரிழப்பாகும் என கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் பொதுச்செயலாளர் எஸ். பரமேஸ்வரன் தெரிவித்தார்.

கண்டி வர்த்தக சங்கத்தின் தலைவர் அமரர் தேசமான்ய இரத்தினசாமி அன்பழகன் தனது 66 ஆவது வயதில் இயற்கை மரணம் எய்தினார்.

அவர் குறித்து விடுத்துள்ள அனுதாபச் செய்தியிலேயே கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் செயலாளர் எஸ். பரமேஸ்வரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

தமிழ் வர்த்தக சங்கத்தின் ஆர். அன்பழகன் தமிழ் வர்த்தக சங்கத்தில் இணைந்து தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களிடையே சமூக மேம்பாட்டுக்காகவும் சமூக நல்லிணத்துக்காகவும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு பெரும் சமூகப் பங்காற்றினார். கல்வி மேம்பாட்டுக்காக ஆற்றிய பணி அளப்பரியது.

இவர் விசேடமாக கண்டி இந்து சீனியர் பாடசாலையின் கட்டட நிர்மாணப் பணிகளுக்காகவும், திகன இரஜவெல தேசிய பாடசாலை மற்றும் மலையகத் தமிழ் மொழிப் பாடசாலைகளின் கல்வி மேம்பாட்டுக்காகவும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து சேவையாற்றியவர். அடுத்தவர்களுக்கு கொடுத்து உதவுவதில் உயர்ந்த மனம் படைத்தவர்.

இவர் கட்டட நிர்மாணப்பொருள் வியாபாரத்தில் ஆளுமைமிக்கவர். சமூகப்பற்றுமிக்கவர். எல்லாவற்றுக்கும் மேலாக மனித நேயமிக்க ஒரு சிறந்த சமூகச் செயற்பாட்டாளர். அவர் வர்த்தகத் துறையின் மூலம் பெற்றுக் கொண்ட விருதுகளும் பாராட்டுகளும் குறிப்பிடத்தக்கவை. இப்படிச் சமூகத்துக்காக தியாகத்தோடு பல அரும்பணியாற்றி வந்த தேசமான்ய அமரர் ஆர். அன்பழகனின் மரணம் எமது சங்கத்திற்கும் கண்டி. வாழ் சிங்கள, முஸ்லிம், தமிழ் ஆகிய அனைத்து பல்லின சமூகத்திற்கும் பெரும் பேரிழப்பாகும்.

இவரது இறப்பால் துயறும் அவரது குடும்பத்தினர்கள் ,அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# சிறுத்தை தாக்கி தொழிலாளி படுகாயம்: பொகவந்தலாவையில் சம்பவம்

*நோட்டன் பிரிட்ஜ் நிருபர்*

பொகவந்தலாவ டியன்சின் தோட்டப்பகுதியில் முதலாம் இலக்க தேயிலை மலையில் தொழில் புரிந்து கொண்டிருந்த ஆண் தொழிலாளி ஒருவர் மீது சிறுத்தை பாய்ந்து தாக்கியதில் தொழிலாளி பலத்த காயங்களுடன் பொகவந்தலாவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முற்பகல் இடம்பெற்றதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

பொகவந்தலாவ பெருந்தோட்ட நிர்வாகத்துக்குட்பட்ட பொகவந்தலாவ டியன்சின் தோட்ட முதலாம் இலக்க தேயிலை மலையில் கிருமிநாசினி தெளிக்கும் தொழிலில் ஈடுபட்டு கொண்டிருந்த டியன்சின் தோட்டத்தைச் சேர்ந்த 30 வயதுடைய ஸ்ரீரில் என்ற ஆண் தொழிலாளியே இவ்வாறு காயங்களுக்குள்ளாகியுள்ளதாக தெரியவருகின்றது. தேயிலை மலையில் மறைந்திருந்து சிறுத்தை தாக்கியுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

இதேவேளை காயங்களுக்குள்ளான ஆண் தொழிலாளியை பொகவந்தலாவ மாவட்ட வைத்தியசாலையிலிருந்து டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுப்பி வைத்துள்ளதாக பொகவந்தலாவ மாவட்ட வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி ஏ.எஸ்.கே.ஜெயசூரிய தெரிவித்தார்.

## முன்னாள் பொலிஸ் மாஅதிபர் பூஜித் ஜயசுந்தரவின் மனு தள்ளுபடி

முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பாலசிறிசேன கட்டாய விடுமுறையில் தம்மை அனுப்பியதை எதிர்த்து, முன்னாள் பொலிஸ் மாஅதிபர் பூஜித் ஜயசுந்தர சமர்ப்பித்த அடிப்படை உரிமை மீறல் மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

விசாரணையின் போது, பூஜித் ஜயசுந்தரவின் சட்டத்தரணிகள் மனுவை வாபஸ் பெறுவதாக கேட்டுக்கொண்டமைக்கமைய, நீதிமன்றம் இந்த மனுவை தள்ளுபடி செய்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர், தம்மை கட்டாய விடுப்பில் அனுப்பும் மைத்திரிபால சிறிசேனவின் முடிவு, தனது அடிப்படை உரிமைகளை மீறுவதாகக் கூறி பூஜித இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார்.

## 03 வருடங்களில் 330 புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி திட்டங்கள் அமுல்

### 2023 முதல் 2026 வரை நடைமுறைப்படுத்த பேச்சு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

மின்சார சபை மற்றும் வலுசக்தி அதிகார சபை ஆகியன இந்த வருடம் முதல் 2026ஆம் ஆண்டு வரை, நான்கு வருடங்களுக்கென, 330 புதுப்பிக்கத்தக்க மின்சக்தி திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளது.

அத்துடன், அரசாங்க நிறுவனங்களில் அனுமதியை பெற்றுக்கொள்ளக்கூடிய திட்டங்களை விரைவுபடுத்தவும் அனுமதி கிடைக்காத திட்டங்களுக்காக தற்போது வழங்கப்பட்டுள்ள தற்காலிக அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக எரிசக்தி மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவித்துள்ளார்.

புதுப்பிக்கத்தக்க மின்சார உற்பத்தி திட்டத்தை நடைமுறைப்படுத்த தேவைப்படும் ஏனைய அரச நிறுவனங்களின் அனுமதிப்பத்திரம் மற்றும் அங்கீகாரத்தை பெறவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



இவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்ட அனுமதிப்பத்திரத்தை காலநீடிப்புச் செய்தல் ஆகிய நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனைகளை வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மின்சக்தி எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர மற்றும் அரசாங்க நிறுவனங்களின் தலைவர்கள், பிரதிநிதிகள் பங்கேற்ற விசேட பேச்சுவார்த்தையொன்று நேற்று எரிசக்தி மின்சக்தி அமைச்சில் நடைபெற்றது. இதன்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் மின்சக்தி எரிசக்தி அமைச்சு, மின்சார சபை, சுற்றாடல் அதிகார சபை, வனஜீவராசிகள் திணைக்களம், கமநலசேவைகள் திணைக்களம், பெந்தோட்டை கைத்தொழில் அமைச்சு, நீர்ப்பாசன அமைச்சு, கடற்றொழில் அமைச்சு, வீதி அபிவிருத்தி அதிகார சபை உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தவக்கால சிந்தனை



### உயர்ந்த தர்மம்

(மத்தேயு 7: 7 – 12)

தவக்காலத்தின் முதலாம் வாரத்தில் பயணிக்கின்றோம். இன்றைய நற்செய்தி வாசகம் வாழ்க்கையின் மிக முக்கியமான தத்துவம் ஒன்றை எமக்கு எடுத்துரைக்கின்றது.

எப்போதுமே நாம் எமக்கு கிடைக்க வேண்டியவை பற்றி மட்டுமே சிந்திக்கின்றோம். ஆனால் எம்மால் பிறருக்கு கிடைக்க வேண்டியது தொடர்பில் சிந்திப்பது மிகவும் குறைவு.

“பிறர் உங்களுக்கு என்ன செய்யவேண்டுமென விரும்புகிறீர்களோ அதனையே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்”என்பது நற்செய்தி தருகின்ற அதியுன்னத அழைப்பாகும். அதுமட்டுமல்லாது ‘இறைவாக்கும் திருச்சட்டமும் இதுவே’ என்றும் பறைசாற்றுகிறது.

மானிடராய் பிறந்த எவருமே தமக்கு அடுத்தவர் தீங்கு நினைக்க வேண்டும், தீங்கிழைக்க வேண்டுமென எண்ணுவது கிடையாது. நாலு பேரைக்குறித்து நல்லவற்றை எண்ணுதல், நாலுபேரைக்குறித்து நல்லவற்றை பேசுவது, நாலுபேருக்கு நல்லவற்றை செய்துவிடல் இதைத் தவிர மானிடப்பிறப்பின் பயன் ஏதுமுண்டோ?

மானிட வாழ்வில் தனக்கு அடுத்தவரால் நல்லது நிகழவேண்டுமென எண்ணுவதுபோல நம்மால் அடுத்தவருக்கும் நல்லது நடக்கவேண்டுமென எண்ணுவது உயர்ந்த தர்மமில்லையா?

இதனையே தவக்கால சிந்தனையாக இந் நாள் தந்து நிற்கின்றது. இத் தவக்காலத்தில் அடுத்தவர் வாழ்வினை தவறான வார்த்தைகளால் சிதைத்துவிடாமல் பார்த்துக் கொள்வோம். அடுத்தவர் வாழ்விற்கு நம்மால் என்ன நன்மையான செயல்கள் புரியலாம் என்பதைக்குறித்து அதிக அக்கறை எடுத்துக்கொள்வோம்.

மானிட வாழ்வானது இவ்வையகத்தில் ஒருமுறை மட்டும் கிடைக்கின்ற அழகிய தருணமாகும். அவ்வாறு ஒருமுறை மட்டும் கிடைக்கின்ற வாழ்வினை வாழ்வாங்கு வாழ்ந்து அடுத்தவருக்கு நல்லது புரிந்திட திட சங்கற்பம் பூணுவோம்.

அருட்தந்தை நவாஜி...

## மைத்திரி, தயாசிறிக்கு எதிராக இடைக்கால தடையுத்தரவு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேக்கர ஆகியோருக்கெதிராக, மேல் மாகாண சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவை பிறப்பித்துள்ளது.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் வகித்த பதவியிலிருந்து அவரை நீக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை இரத்துச்செய்யும் வகையில், இந்த இடைக்கால தடையுத்தரவு மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, சிவில் மேன்முறையீட்டு சிவில் நீதிமன்றத்தில் தாக்கல்செய்துள்ள மனுமீதான தீர்ப் பின்போதே, நீதிபதிகளான 06

## பொருளாதார நெருக்கடிக்கு ஐ.தே.கட்சி காரணமில்லை

### கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜயவர்த்தன

(லோரன்ஸ் செல்வநாயகம்)



நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதற்கு ஐக்கிய தேசியக் கட்சி காரணமல்ல. முன்னாள் ஜனாதிபதி ஆலோசகர்களின் தவறான தீர்மானங்களே நாட்டின் இன்றைய வீழ்ச்சிக்குக் காரணமென ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் இளைஞர் மாநாடு கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. இங்கு இளைஞர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, நாட்டில் பொருளாதார நெருக்கடியை ஐக்கிய தேசியக் கட்சி கொண்டுவரவில்லை. எனினும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொருளாதார நெருக்கடி நிலைக்கு தீர்வுகாண்பதற்காக பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றார்.

பெரும்பாலும் அடுத்த மாதம் சர்வதேச நாணய நிதியத்தின் கடனைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்படும். அதனையடுத்து மேலும் பல நாடுகள் இலங்கைக்கு ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு தயாராகி வருகின்றன. அவ்வாறான உதவிகள் கிடைக்கும்போது, நாட்டின் பொருளாதார நிலை படிப்படியாக மாற்றமடையும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தேர்தல் ஒத்திப்போடப்பட்டமை சபையில் 9, 10 திகதிகளில் விவாதம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)



உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திப்போடப்பட்டுள்ளமை தொடர்பில் இரண்டு நாள் விவாதம் எதிர்வரும் 09 மற்றும் 10 ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தில் நடைபெறவுள்ளது. பாராமன்ற விவகாரங்கள் தொடர்பான தெரிவுக்குழு இத்தீர்மானத்தை எடுத்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, மேற்படி பாராளுமன்ற தெரிவுக்குழு அமர்வின் போது உள்ளூராட்சி சபை தேர்தலை ஒத்திப்போடப்பட்டுள்ளமை தொடர்பில் இரண்டு நாள் விவாதத்தை வழங்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். அதற்கிணங்கவே, தெரிவுக்குழுவு இந்தத் தீர்மானம் எடுத்துள்ளது.

உள்ளூராட்சி சபை தேர்தல் ஒத்திப்போடப்பட்டதால் நாட்டில் பெரும் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன. அதுதொடர்பில் விரிவான பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பது முக்கியமாகுமென்றும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார். இதனையடுத்தே மேற்படி விவாதத்தை சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதமாக, முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற விவகாரங்கள் தொடர்பான தெரிவுக்குழுவின் கூட்டம் நேற்றைய தினம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவின் தலைமையில் பாராளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்றது. இதன்போதே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## அமைச்சர் ஜீவன் நேற்று புதுடில்லி பயணமானார்



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நீர்வழங்கல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான், நேற்று (01) இந்தியா பயணமானார்.

பூகோள காலநிலை, பொருளாதாரம் தொடர்பில் இந்தியாவின் புது டெல்லியில் இன்று (02) நடைபெறும் (Raisina Dialogue) மாநாட்டில் கலந்துகொள்வதற்காக அவர் அங்கு பயணமானார். இந்த மாநாடு தவிர, நாளை (03) நடைபெறவுள்ள விசேட கலந்துரையாடலிலும் அமைச்சர் கலந்துகொள்ள வுள்ளார்.

இதற்கமைய, எதிர்வரும் (04) வரை அமைச்சர் இந்தியாவில் தங்கியிருப்பார். இந்தியா செல்லும் இலங்கை குழுவுக்கு வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தலைமை தாங்குகிறார். இன்று மார்ச் (02) முதல் (04) இம் மாநாடு நடைபெறவுள்ளமை குறிப்பிடதக்கது.



அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் கொழும்பு மற்றும் கண்டி மாவட்ட பள்ளிவாசல்கள் பெட்ரேசன் இணைந்து அண்மையில் பாகிஸ்தானில் ஏற்பட்ட வெள்ள நிவாரணத்திற்காக சேகரித்த ரூ. 1,062,9464.00 நிதி காசோலையை உயர்ஸ்தானிகரிடம் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் உமர் பாருக் புர்க்கியிடம் அண்மையில் வெளிநாட்டு அமைச்சர் அலி சப்ரி முன்னிலையில் அமைச்சில் வைத்து கையளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் உலமா சபைத் தலைவர் அஷ்ஷெய்க் றிஸ்வி முப்தி, செயலாளர் அஷ்ஷெய்க் அர்கம் நூர்ஆமித், உபதலைவர் அஷ்ஷெய்க் ஒமர்டீன், உதவிச் செயலாளர் எம்.எஸ்.எம். தாசிம், உட்பட உலமாக்கள் இணைந்து இதனை பாகிஸ்தான் உயர்ஸ்தானிகரிடம் கையளித்தனர். (படம்: அஷ்ரப் ஏ சமட்)

## வெடிபொருட்கள் அகற்றப்படாதுள்ள முகமாலையில் சட்டவிரோத மண் அகழ்வுகளை தடுக்க கோரிக்கை

(யாழ்.விசேட நிருபர்)

முகமாலை பிரதேசத்தில் நில கண்ணிவெடிகள் மற்றும் அபாயகரமான வெடிபொருட்கள் உள்ள பிரதேசங்களில் சட்ட விரோத மணல் அகழ்வுகள் இடம்பெறுவதாகவும், அத்துமீறி நுழையும் சிலரின் இந் நடவடிக்கைகளுக்கு எதிராக,நடவடிக்கை எடுக்குமாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். முகமாலைப் பகுதி, யுத்த காலத்தில் யுத்த சூனிய பிரதேசமாக அறிவிக்கப்பட்டிருந்தது. இங்கு, அதிகளவில் கண்ணி வெடிகள் மற்றும் அபாயகரமான வெடிபொருட்கள் காணப்படுகின்றன.

யுத்தம் முடிவடைந்து 14 வருடங்கள் கடந்தும், தற்போதும் அங்கு வெடிபொருட்களை அகற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பகுதிகளுக்குள் பொதுமக்கள் நுழையத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இப்பகுதிகள் அபாயகரமான பகுதியாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், சட்டவிரோதமான முறையில் இப் பிரதேசத்துக்குள் நுழையும் மணல் கொள்ளையர்கள், தனியார் காணிகளுக்குள் மணல் அகழ்வுகளில் ஈடுபடுகிறனர். இதனால்,மணல் அகழப்படும் தனியார் காணிகளுக்குள் பாரியளவினால் பள்ளங்கள் உருவாகியுள்ளன.

அதேவேளை சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுபவர்களால், வெடி பொருட்களை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள பணியாளர்களும் பல சிரமங்களை எதிர்கொண்டு 06



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலினின் 70 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, விஜிபி குழுமத்தின் தலைவரும் விஜிபி உலக தமிழ் சங்கத் தலைவருமான செவாலியர் முனைவர் வி ஜி சந்தோசம் முதல்வரின் இல்லத்துக்கு நேரில் சென்று, பூங்கொத்து வழங்கி வாழ்த்தியபோது.

## புதிய வரிக்கொள்கைக்கு எதிராக ஆர்ப்பாட்டம்; 40 தொழிற்சங்கங்கள் நேற்று பங்கேற்றன

### மக்களுக்கு பெரும் அசௌகரியம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

அரசாங்கத்தின் புதிய வரிக் கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் துறைமுகம், பெற்றோலியம், மின்சாரசபை மற்றும் வங்கிகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் தொழிற்சங்கங்கள் நேற்றைய தினம் சுகவீன விடுமுறையை அறிவித்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டன.

அதற்கிணங்க, மேற்படி துறைகளைச் சேர்ந்த சுமார் 40 தொழிற்சங்கங்கள் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன. நீர், வங்கிகள், ரயில்வே, பல்கலைக்கழகங்கள், டெலிகொம் உள்ளிட்ட துறைகளின் தொழிற்சங்கங்களும் இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளில் இணைந்துகொண்டன. நேற்றைய இந்த தொழிற்சங்க நடவடிக்கைகளால் மேற்படி நிறுவனங்களில் சேவைகளைப் பெற்றுக் கொள்ள வருகை தந்திருந்த மக்கள், பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கினர்.மேலும்சிகிச்சைகளுக்காக ஆஸ்பத்திரிகளுக்கு வந்திருந்த நோயாளிகளும் 06

## மக்களுக்கான உரிமைகளைப் பெற ஒரே குரலில் ஒன்றுபட முன்வரவும்

### வட, கிழக்கு கட்சிகளுக்கு மனோ எம்.பி கோரிக்கை



வடக்கு கிழக்கு தமிழ் தலைவர்களிடம் மனோ MP வேண்டுகோள் வடக்கு, கிழக்கில் வாழும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் தலைவர்கள், மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க ஒரே குரலில், ஆட்சியாளர்களை வலியுறுத்த வேண்டுமென தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தனியார் வானொலி ஒன்றின் நேர்காணல் நிகழ்ச்சியில் வடக்கு, கிழக்கு அரசியல் நிலவரம் குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே, அவர் 06

## வேலை நிறுத்தத்தின் போதும் வங்கிச் சேவைகள் வழமை போல்

நாடளாவிய ரீதியில் நேற்று வேலை நிறுத்தம் நடைபெற்ற போதும், அரச வங்கிகளின் செயற்பாடுகளுக்கு எவ்வித தடைகளும் ஏற்படவில்லையென மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

நாடு முழுவதுமுள்ள ஏடிஎம் மற்றும் சிடிஎம் இயந்திரங்கள் செயற்பட்டதுடன், ஏடிஎம் இயந்திரங்களுக்கு போதுமான அளவு பணம் வைப்பில் இடப்பட்டிருந்ததாகவும் அவர்கள் 06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 243.03 | 254.04 |
| கனடியன் டொலர் | 263.67 | 274.49 |
| யூரோ | 378.70 | 393.57 |
| ஜப்பான் யென் | 2.6449 | 2.7490 |
| சிங்கப்பூர் டொலர் | 266.34 | 276.85 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 431.16 | 446.41 |
| சுவிஸ் பிராங்க் | 382.78 | 399.95 |
| அமெரிக்க டொலர் | 359.00 | 368.52 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 959.24 | கட்டார் ரியால் | 99.07 |
| குவைத் டினார் | 1,179.31 | சவூதி ரியால் | 96.40 |
| ஓமான் ரியால் | 939.32 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.46 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் மாசி மாதம் 18ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஷஃபான் பிறை 09

### குறள் தரும் சிந்தனை



மிகல்மேவல் மெய்ப்பொருள் காணார் இகல்மேவல்
இன்னா அறிவி னவர்

பகை உணர்வு கொள்ளும் தீய அறிவுடையவர்கள் வெற்றிக்கு வழிகாட்டும் உண்மைப் பொருளை அறிய மாட்டார்கள்.

## நாட்டு நலனில் தொழிற்சங்கங்கள் கொண்டுள்ள தார்மிகப் பொறுப்பு

அரசாங்கத்தின் புதிய வரிக்கொள்கைக்கு ஆட்சேபனைகளும் எதிர்ப்புக்களும் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் பல தொழிற்சங்கங்கள் ஆர்ப்பாட்டங்களையும் வேலைநிறுத்தங்களையும் அவ்வப்போது முன்னெடுத்த வண்ணமுள்ளன.

சுகாதாரம், துறைமுகம், மின்சாரம், பெற்றோலியம், நீர்வழங்கல், கல்வி மற்றும் வங்கிகள் உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 40 இற்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் நேற்றும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டன.

இந்த புதிய வரிக்கொள்கைக்கு எதிரான இத்தொழிற்சங்க நடவடிக்கைகளின் விளைவாக வழமை போன்று சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் மக்கள் பலவித அசௌகரியங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் முகம்கொடுத்தனர். வங்கிகளில் சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியாது வாடிக்கையாளர்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பும் துரதிர்ஷ்ட நிலைக்கும் உள்ளாகினர்.

ஆனால் இத்தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்த தொழிற்சங்கங்கள் ஒரு விடயத்தை தெளிவாகப் புரிந்து கொள்ளத் தவறியுள்ளன. அதுதான் சமூக ஆர்வலர்களின் கருத்தாகும். அதாவது நாட்டுக்கு புதிய வரிக்கொள்கையை அறிமுகப்படுத்தி இருப்பது அரசாங்கம், மக்கள் அல்லர்.

அதனால் அவ்வரிக்கொள்கைக்கு எதிராக ஆட்சேபனை தெரிவிப்பதாயின் அது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் முதலில் கலந்துரையாடலை மேற்கொண்டிருக்க வேண்டும். அதன் ஊடாக இவ்விடயத்திற்கு நியாயமான தீர்வைப் பெற்றுக்கொள்ள முயற்சி செய்ய வேண்டும். அதுவே நியாயமானதும் ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான நடவடிக்கையாகும்.

இதைவிடுத்து மக்களைப் பணயக்கைதிகள் போன்று பயன்படுத்தலாகாது. அப்பாவி மக்களை அசௌகரியங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் உள்ளாக்கும் வகையில் தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் ஊடாக இவ்விடயத்திற்கு நியாயமான தீர்வைப் பெற்றுக் கொள்ளவும் முடியாது. இவ்விதமான தொழிற்சங்க நடவடிக்கைகள் ஏற்றுக்கொள்ளக் கூடியனவோ நியாயப்படுத்தக் கூடியவையோ அல்ல.

இது தொடர்பில் மனசாட்சியுடன் நடந்து கொள்ளத் தொழிற்சங்கங்கள் தவறலாகாது. அதேநேரம் மக்களை நெருக்கடிகளுக்கும் அசௌகரியங்களுக்கும் உள்ளாக்கும் நோக்கில் அறிமுகப்படுத்தப்பட்டதல்ல இவ்வரிக் கொள்கை. இதனை ஜனாதிபதி ஏற்கனவே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

சுதந்திரத்திற்குப் பின்னர் முன்னொரு போதும் கண்டிராத பொருளாதார நெருக்கடிக்கு உள்ளான நாட்டை மீட்டெடுப்பதற்காகப் பல்வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு திட்டமாகவே இவ்வரிக்கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

கடந்த வருடம் நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்தது. அந்நெருக்கடி கடந்த ஏப்ரல் முதல் ஜுலை வரை தீவிர நிலையை அடைந்திருந்தது. நாட்டின் தலைமைப் பதவியை ஜுலை பிற்பகுதியில் ஏற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு முன்னுரிமை அளித்து நடவடிக்கைகளை முன்னெடுக்கலானார். அதன் பயன்களைக் குறுகிய காலப்பகுதிக்குள் நாட்டு மக்களால் தெளிவாக உணர முடிந்துள்ளது. என்றாலும் இப்பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களும் அழுத்தங்களும் நாட்டில் முற்றாக நீங்கியதாக இல்லை. அந்தளவுகக்கு மிகக்கடுமையான பொருளதாதார நெருக்கடியையே நாடு எதிர்கொண்டது.

அதனால் பொருளாதார நெருக்கடியில் இருந்து முழுமையாக மீட்சி பெறுவதற்கான முயற்சிகளுக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டு இருக்கின்றது. அவற்றில் ஒரு திட்டமாகவே இவ்வரிக் கொள்கையும் அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கின்றது. அந்த வகையில் நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தியதே இவ்வரிக்கொள்கை. இதற்கு ஆட்சேபனை தெரிவிக்கப்படுமாயின் நாடு மீண்டும் தீவிர பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்படுவதைத் தவிர்க்க முடியாது.

அதேநேரம் இவ்வரிக்கொள்கைக்கு ஆட்சேபனை தெரிவிப்பதாயின் இந்நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான மாற்று யோசனைகள் தான் எவை? அவற்றை தொழிற்சங்கங்கள் முன்வைக்க வேண்டும். கடந்த வருடம் முகம்கொடுத்த பொருளாதார நெருக்கடியின் தீவிர நிலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ள போதிலும், அதன் தாக்கங்களும் நெருக்கடிகளும் இன்னும் முழுமையாக நீங்கவில்லை என்பதை மறந்து விடலாகாது.

அதனால் இந்நெருக்கடியில் இருந்து மீட்சி பெறும் முயற்சிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். அதனை அடிப்படையாகக் கொண்ட வேலைத்திட்டங்களுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்க வேண்டும். அதற்கான பொறுப்பு நாட்டின் அனைத்துப் பிரஜைகளுக்கும் உள்ளது. அவர்களில் தொழிற்சங்கங்கங்களின் அங்கத்தவர்களும் அடங்குகின்றனர்.

ஆகவே நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி செயற்பட வேண்டிய பொறுப்பு தொழிற்சங்கங்களுக்கும் உள்ளது. அதனை தொழிற்சங்சங்கள் மறந்துவிடலாகாது. அது நாட்டின் மறுமலர்ச்சிக்காக அளிக்கப்படும் பாரிய பங்களிப்பாகவும் அமையக் கூடியதாகும்.

editor.tkn@lakehouse.lk

# மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான பஞ்சரத பவனி எதிர்வரும் திங்கட்கிழமை



இவ்வருடம் தை மாதம் 29 ஆம் நாள் (பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதி) கொடியேற்றத்துடன் ஆரம்பமான மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான மாசிமகத் திருவிழா விசேட பூஜை வழிபாடுகளுடன் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. எதிர்வரும் 5 ஆம் திகதி மகேஸ்வர பூஜையும், 6 ஆம் திகதி பஞ்சரதபவனியும், 8 ஆம் திகதி தீர்த்தோற்சவமும், 9 ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான தெய்வீகத் திருப்பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள சகல உதவிகளையும், ஒத்தாசைகளையும், ஆலோசனைகளையும் தொடர்ந்து வழங்கி வரும் ஆலய பரிபாலனசபை உறுப்பினர்களுக்கும், மாத்தளைவாழ் இந்து, பௌத்த பெருமக்களுக்கும், உலகெங்கும் பரந்து விரிந்து வாழும் அம்பிகை அடியார்களுக்கும், இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மாசி மகோற்சவத்தை முன்னிட்டு மாத்தளை மாநகரம் விழாக்கோலம் பூண்டு வரும் இவ்வேளையில், இம்முறை இலங்கையின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் அதிகமான அம்பிகை அடியார்களின் வருகையை எதிர்பார்த்து இருப்பதால் பாதுகாப்பு ஒழுங்குகள், சுகாதார, போக்குவரத்து வசதிகள், சுற்றுசூழல் மேம்பாடு, குடிநீர் வசதிகள் உட்பட அனைத்து ஏற்பாடுகளையும் சம்பந்தப்பட்ட துறைசார்ந்த அதிகாரிகளுடன் ஆலய நிர்வாக சபையினர் தொடர்பு கொண்டு பூர்த்தி செய்துள்ளனர்.

குறிப்பாக மாத்தளை மாநகரசபையும், மாவட்ட செயலகமும், பொலிஸ் திணைக்களமும் பக்தர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் வழங்கி வருகின்றன.

அன்பின், அருளின், கருணையின் இரக்கத்தின் அடையாளமாகத் திகழும் எங்கள் மாத்தளை அன்னை முத்துமாரியின் மாசி மக (2023) சகல உற்சவங்களிலும் கலந்து, அம்பிகையின் அருளையும், நீண்ட ஆயுளும் குறைவற்ற செல்வமும் பெற்று சகல சௌபாக்கியத்துடன் வாழ அம்பிகையை வேண்டி நிற்கின்றோம்.

2014 இல் இருந்து 2018 வரை தேவஸ்தானத்தின் அங்கத்தவராகவும் பொருளாளராகவும் இதயசுத்தியுடனும், பக்திபூர்வமாகவும், தூய்மையாகவும், அர்ப்பணிப்புடன் பணியாற்றிய எனக்கு 2020 முதல் தற்போது வரை தேவஸ்தான தலைவராக பணியாற்றுவதற்கு பாக்கியம் கிடைத்தமை அன்னையின் பெரும் பேறாக கருதுகின்றேன்.

காசியில் விசாலாட்சியாகவும், காஞ்சியில் காமாட்சியாகவும், மதுரையில் மீனாட்சியாகவும் குடிகொண்டருளும் அன்னை, மாத்தளையில் முத்துமாரியாக அமர்ந்து அருள் புரிவது நாம்கொண்ட பேறாகும்.

வாருங்கள் மாத்தளை ஸ்ரீ முத்து மாரி அம்பிகையின் வடம் பிடிப்போம்! வளமான வாழ்வு பெறுவோம்!



சேதுராமன் சர்வானந்தா
பரிபாலனசபைத் தலைவர், மாத்தளை
ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்

# மலையக மக்களின் உரிமைகள் விடயத்தில் பிரித்தானியாவுக்கு தார்மிக பொறுப்பு உள்ளது

## வெளிவிவகார துணை பணிப்பாளரிடம் மனோ கணேசன் எம்.பி வலியுறுத்தல்



மலையகத் தமிழர்களின் பிரதான எதிர்பார்ப்பு இந்நாட்டின் தேசிய நீரோட்ட அரசியல் வரைபுக்கு உள்ளே முழுமையான பிரஜைகளாக வேண்டும் என்பதாகும். சட்டப்படி நாடற்றோர் இன்று இல்லை. எல்லோருமே பிரஜைகள். ஆனால், நமது மக்கள் முழுமையான பிரஜைகள் இல்லை. பிரிட்டன் இலங்கை அரசுடனான தமது நல்லுறவுகளை பயன்படுத்தி எமது கனவை நனவாக்க உதவ வேண்டும்" என தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவர் மனோ கணேசன் எம்.பி தெரிவித்துள்ளார்.

கொழும்பில், வெஸ்ட்மின்ஸ்டர் இல்லத்தில் நிகழ்ந்த சந்திப்பின் போது பிரித்தானிய வெளிவிவகார துணை பணிப்பாளர் மாயா சிவஞானம், பிரிட்டன் உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன், அரசியல் அலுவலர் ஜோவிடா அருளானாந்தம் மற்றும் த.மு.கூ தலைவர் மனோ கணேசன், இ.தொ.கா பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் ஆகியோர் கலந்து கொண்ட சந்திப்பின் போது மனோ கணேசன் எம்.பி இதனைத் தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய தரப்பினரிடம், மனோ கணேசன் எம்.பி மேலும் கூறியதாவது:

"பிரித்தானிய ஆட்சியாளர்களால் தென்னிந்தியாவின் தமிழகத்திலிருந்து 200 வருடங்களுக்கு முன்னர் தோட்டங்களில் தொழில் செய்வதற்கென்று மக்கள் கொண்டு வரப்பட்டனர். அன்று முதல் எமது மக்கள் உலகம் கண்டிராத கடுமையான உழைப்பின் மூலம் இன்றுவரை மிகப்பெரிய ஏற்றுமதி தொழில் துறையாக இருக்கின்ற பெருந்தோட்டங்களால் வருமானத்தை அரசுக்கு பெற்றுக் கொடுத்து வருகின்றனர். பெரும் நெடுஞ்சாலைகளையும், பாரிய ரயில் பாதைகளையும், கொழும்பு துறைமுகத்தையும் அமைத்து சிலோன் என்ற இலங்கையை உருவாக்கியுள்ளார்கள். இதற்கு பிரதியுபகாரமாக 1948 இல் எமது மக்களின் குடியுரிமைதான் பறிக்கப்பட்டது. வாக்குரிமைதான் பறிக்கப்பட்டது. நமது மக்கள் பலவந்தமாக 1964 இல் சிறிமா_சாஸ்திரி இலங்கை, இந்திய ஒப்பந்தம் மூலம் நாடு கடத்தப்பட்டார்கள்.

1972 இல் குடியரசு ஆகும்வரை, இலங்கையில் பிரித்தானிய அரசாட்சிக்கு பதில் சொல்லும் மகாதேசாதிபதியே ஆட்சியில் இருந்தார். 1948 இன் சோல்பரி அரசமைப்பின் 29 ஆம் பிரிவும் எம்மை காப்பாற்றவில்லை. ஆகவே இன்றைய பிரிட்டிஷ் அரசாங்கம் இலங்கை மலையக தமிழரின் மீது பாரிய தார்மீக பொறுப்பையும், கடமையும் கொண்டுள்ளது.

இலங்கை அரசுக்கும், இந்திய அரசுக்கும் எமது பிரச்சினைகளை கையாளும் பொறுப்பை முழுமையாக விட்டு விட முடியாது. தேசிய நீரோட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படாத காரணத்தால், நாம் ஒதுக்கப்படுகிறோம்.எமக்கு பிரிட்டிஷ் உதவியும் தேவை. பிரிபடாத ஒரே இலங்கைக்குள் எமது சமூக அரசியல் அபிலாஷைகளை அடையவும், கடந்த காலங்களில் இழந்த உரிமைகளை பெறவும் நாம் பாடுபடுகிறோம்.

ஒட்டுமொத்த இலங்கையில் மிகவும் பின்தங்கிய நலிந்த பிரிவினராக மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் இருக்கின்றார்கள். ஐ.நா மனித உரிமை ஆணையகத்தின் நவீன கொத்தடிமை தொடர்பிலான விசேட அறிக்கையாளர், ஐ.நா நிறுவனங்கள், உலக வங்கி, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவை முன்வைத்துள்ள கணிப்பீடுகளின்படி, இந்த துன்பகரமான உண்மைகள் உலகறியச் செய்யப்பட்டுள்ளன. ஆகவே பிரிட்டிஷ் அரசு விசேட ஒதுக்கீட்டுத் திட்டங்களின் அடிப்படையில் பெருந்தோட்ட மக்களுக்கு உதவிட வேண்டும்.

நாங்கள் இந்நாட்டில் முழுமையான பிரஜைகள் ஆவதற்கு உதவுங்கள். நம் நாட்டிற்கு நீங்கள் வாழ்வாதார உதவிகள் வழங்கும் போது, இலங்கையில் மிகவும் பின்தங்கிய நலிந்த பிரிவினரான, பெருந்தோட்ட பாமர மக்களுக்கு அவை கிடைகின்றனவா என கேள்வி எழுப்புங்கள். எமக்காக இலங்கை அரசுடன் பேசுங்கள். நாம் இல்லாமல் இலங்கை முழுமையடையாது என்பதை மனதில் கொள்ளுங்கள்."

இவ்வாறு மனோ கணேசன் எம். பி தெரிவித்தார்.

# ஸ்டாலின் நீண்ட ஆயுள், ஆரோக்கியத்துடன் வாழ்வதற்கு வாழ்த்துக் கூறிய பிரதமர் மோடி



தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலின் நேற்று தனது 70 ஆவது பிறந்தநாள் விழாவை கொண்டாடினார். அவருக்கு பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள் வாழ்த்துத் தெரிவித்தனர். பிரதமர் நரேந்திர மோடி சார்பில் டெல்லியில் இருந்து பிறந்தநாள் வாழ்த்து வந்து சேர்ந்தது.

பிரதமர் மோடி மாத்திரமன்றி, ஆளுநர் ஆர்.என். ரவி, தே.மு.தி.க நிறுவன தலைவர் விஜயகாந்த், மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன், பா.ம.க நிறுவனர் ராமதாஸ், தலைவர் அன்புமணி ராமதாஸ் உட்பட ஏராளமானவர்கள் முதல்வர் ஸ்டாலினுக்கு பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

ஸ்டாலின் நேற்றுக் காலையிலேயே சென்னை மெரினாவில் உள்ள அண்ணா, கருணாநிதி மற்றும் வேப்பேரியில் உள்ள பெரியார் நினைவிடம் சென்று மரியாதை செலுத்தினார். மேலும் கோபாலபுரத்தில் உள்ள தாயார் தயாளு அம்மையாரிடம் நேரில் சென்று வாழ்த்துப் பெற்றார். ஸ்டாலினுக்கு அரசியல் கட்சித் தலைவர்கள் பலரும் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தனர்.

பிரதமர் நரேந்திர மோடி முதல்வர் ஸ்டாலினுக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுபற்றி அவர் தனது ட்விட்டர் பக்கத்தில்,"தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு பிறந்தநாள் வாழ்த்துகள். நீண்ட ஆயுளுடன், ஆரோக்கியத்துடன் வாழ வாழ்த்துகிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன் தனது ட்விட்டர் பக்கத்தில், "முதல்வர்களில் முதன்மையானவராகவும், தமிழ்நாட்டை அடக்கியாளத் துடிப்பவர்களின் கனவைத் தகர்ப்பவராகவும் திகழும் திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவர், தமிழ்நாட்டின் முதல்வர், என் மனதிற்கினிய நண்பர், தளபதி மு.க ஸ்டாலின் நீடுழி வாழ இந்தப் பிறந்தநாளில் வாழ்த்துகிறேன்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

# பணம் அச்சிடல் தொடர்பான கட்டுக்கதைகள்

(நேற்றைய தொடர்)

மத்திய வங்கி வெளிநாட்டுச் செலாவணியைத் திரட்டும் போது, மத்திய வங்கி பொருளாதாரத்திற்குப் புதிய பணத்தை வழங்குகின்றது. இதனடிப்படையில் வர்த்தக வங்கிகளுடன் அல்லது அரசாங்கத்துடன் மத்திய வங்கி மேற்கொள்கின்ற வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களை மாற்றுவதுடன் நாட்டின் பண இருப்புக்களைப் பாதிக்கின்றன. இருப்பினும், அத்தகைய பண இருப்பின் அதிகரிப்பு தேவையான பண அளவிற்கு அப்பால் காணப்படும் பட்சத்தில் நாட்டில் நாணய விரிவாக்கத்தினை விளைவற்றதாக்கும் பொருட்டு அரச பிணையங்களை அதன் கையிருப்பிலிருந்து விற்பனை செய்வதன் மூலம் மத்திய வங்கி அத்தகைய விஞ்சியளவிலான பண இருப்பினை ஈர்த்தெடுக்க முடியும்.

முன்னர் கூறியது போன்று, மத்திய வங்கி உள்நாட்டுச் சொத்துக்களையும் திரட்ட முடியும். மத்திய வங்கி உள்நாட்டுச் சொத்துக்களைத் திரட்டுகின்ற சில மூலங்கள் காணப்படுகின்றன. வங்கிகளுக்கு வங்கியாளராக, மத்திய வங்கி வங்கிகளுக்கு கொடுகடன் வசதிகளை வழங்க முடியும் என்பதுடன் அது நிகழும் பட்சத்தில், பொருளாதாரத்திற்குப் புதிய பணத்தை வெளியிடுவதன் மூலம் மத்திய வங்கி உள்நாட்டு சொத்துக்களைத் திரட்டுகின்றது. அரசாங்கத்திற்கான வங்கியாளராக, மத்திய வங்கி அரசாங்கத்திற்கும் கொடுகடனை வழங்க முடியும்.

தற்போது, மத்திய வங்கி அரசாங்கத்திற்குக் கொடு க டனை வழங்குவதற்கு இரண்டு முறைகள் காணப்படுகின்றன. நாணய விதிச் சட்ட த்தின் பிரகாரம் எதிர்வரவுள்ள ஆண்டிற்கான ஒப்புதலளிக்கப்பட்ட தேசிய வரவுசெலவுத் திட்டத்திற்கமைய மதிப்பிடப்பட்ட அரச வருவாயின் உயர்ந்தபட்சம் 10 சதவீதம் வரை மத்திய வங்கி அரசாங்கத்திற்கு முற்பணங்களை வழங்க முடியும். இதற்கமைய, அரசாங்கம் தனது வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தில் அதன் வருமான மதிப்பீடுகளை அதிகரிக்கின்ற போதெல்லாம், அரசாங்கத்திற்குக் கொடுகடன் வசதிகளை வழங்கி அரசாங்கத்தினால் கோரப்படுகின்றவாறு புதிய பணத்தை வெளியிடுவதற்கு மத்திய வங்கி சட்டத்தினால் கட்டுப்படுத்தப்படுகின்றது. மத்திய வங்கி முதலாந்தர சந்தையிலிருந்து குறுங்கால அரச பிணையங்களையும் (திறைசேரி முறிகளை மாத்திரம்) கொள்வனவு செய்ய முடியும். மத்திய வங்கியினால் முதலாந்தர சந்தையிலிருந்து அரச பிணையங்களைக் கொள்வனவு செய்வதானது பொருளாதாரத்திற்குப் புதிய பணத்தை நிரம்பல் செய்கின்ற முக்கியமானதொரு வழியாகக் காணப்படுவதுடன் இதன் விளைவாக மத்திய வங்கியின் வசமுள்ள அரச பிணையங்கள் அதிகரிக்கின்றன.

மத்திய வங்கி தொடர்புடைய ரூபா பெறுமதியினை அரசாங்கக் கணக்கில் வரவு வைப்பதுடன் அரசாங்கம் அதன் செலவினங்களுக்கு நிதியளிப்பதற்கு இதனைப் பயன்படுத்துகின்றது. மாறாக, மத்திய வங்கியின் இருப்புக்களிலிருந்து ஏதேனும் அரச பிணையத்தின் முதிர்ச்சியொன்று காணப்படும் போது, அரசாங்கம் அவ்வரச பிணையங்களின் பெறுமதியை மத்திய வங்கிக்கு மீளச்செலுத்த வேண்டும். இதன் விளைவாக, தளப் பண இருப்பு குறைக்கப்படுகின்றது. அதேபோன்று, வர்த்தக வங்கிகள் மத்திய வங்கியிடமிருந்து பெற்றுக்கொண்ட ஏதேனும் கடன்களை மீளச்செலுத்தினால், அது மத்திய வங்கியின் உள்நாட்டுச் சொத்துக்களைக் குறைப்பதுடன் அதன்மூலம் மத்திய வங்கி ஏற்கனவே பொருளாதாரத்திற்கு வழங்கியிருந்த தளப் பண இருப்பைக் குறைக்கின்றது.

மத்திய வங்கியானது அதன் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் ஊடாக பொருத்தமான சந்தைத் திரவத்தன்மை நிலையொன்றினைப் பேணும் பொருட்டு உள்நாட்டுப் பணச் சந்தையில் செல்வாக்குச் செலுத்துவதுடன் அதுவும் பண இருப்பைப் பாதிக்கின்றது. இதற்கமைய, சந்தைக்குத் திரவத்தன்மையினை வழங்கும் பொருட்டு திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் என்பவற்றை உள்ளடக்கிய அரச பிணையங்களை இரண்டாந்தரச் சந்தையிலிருந்து மத்திய வங்கி கொள்வனவு செய்கின்ற போது, அது மத்திய வங்கியின் உள்நாட்டுச் சொத்து க்களை அதிகரிப்பதுடன் அதன்மூலம் பொருளாதாரத்திற்குப் புதிய பணத்தை வழங்குகின்றது. இது நாட்டின் ரூபா பண இருப்பை அதிகரிக்கின்றது.

அதேவேளை, நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 39இன் படி, சட்டபூர்வமாக குறித்துரைக்கப்பட்ட இலாபப் பகிர்ந்தளிப்புச் செய்முறையைப் பின்பற்றி ஒவ்வொரு நிதியாண்டிற்கும் பின்னர் 60 நாட்களுக்குள் மத்திய வங்கி அதன் பகிர்ந்தளிக்கக்கூடிய இலாபத்தினை அரசாங்கத்திற்கு மாற்ற வேண்டும். இத்தகைய இலாபப் பகிர்ந்தளிப்புக்கள் பொருளாதாரத்திற்குப் புதிய பண வெளியீட்டினையும் தோற்றுவிக்கின்றன.

(நாளை தொடரும்)



ஜனக எதிரிசிங்ஹ
பணம் மற்றும் வங்கித்தொழில் பிரிவின்
தலைவர்/சிரேஷ்ட பொருளியலாளர்
பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

# சட்டத்தின் ஆட்சிக்கோ, சட்டத்தரணிகளுக்கோ சிக்கல் ஏற்படும் வகையில் ஜனாதிபதி ஒருபோதுமே செயற்பட்டது கிடையாது!

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் 28.02.2023 அன்று நடைபெற்ற தொழில் வல்லுனர்கள் சந்திப்பில் தொழில் வல்லுநர்கள் கேட்ட கேள்விகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன பதில் வழங்கினார். அத்துடன் அவர் ஊடக அறிக்கை ஒன்றையும் வெளியிட்டார்.

பத்திரிகையொன்றில் வெளியிடப்பட்ட அறிவிப்பு தொடர்பில் வஜிர அபேவர்தனவின் கருத்து தொடர்பாக சிறிகொத்தவில் நடைபெற்ற தொழில் வல்லுநர்கள் சந்திப்பில் கலந்து கொண்ட நிபுணர் ஒருவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

இது தொடர்பில் வஜிர அபேவர்தன எம்.பி வெளியிட்ட அறிக்கை வருமாறு:

"ஜனாதிபதி அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து எடுக்கப்பட்டது."

சட்டத்தின் ஆட்சிக்கோ, சட்டத்தரணிகளுக்கோ சிக்கல் ஏற்படும் வகையில் ஜனாதிபதி ஒருபோதும் செயற்பட்டதில்லை. மேலும் சட்டத்தரணிகள் சங்கம் கூறியது போல், நீதிமன்றத்தின் முன்வரும் எந்தவொரு வழக்குக்கும் சட்டத்தரணிகளின் உதவியைப் பெறுவது அரசியலமைப்பின்படி அடிப்படை உரிமை என்பதை நாங்கள் அனைவரும் ஒப்புக்கொள்கிறோம்.

ஆனால் இலங்கையில் உள்ள சில நீதிமன்றங்களில் சட்டத்தரணிகளின் வழக்கு என்றால், அந்த நீதிமன்றத்தில் எந்த ஒரு சட்டத்தரணியும் இல்லாத போது, வெகுதொலைவில் இருந்து சட்டத்தரணிகளை அழைத்து வர வேண்டிய வழக்குகள் எண்ணற்றவை என்று சொல்லலாம். எப்படியிருந்தாலும், இதைப் பற்றி நாம் விவாதம் செய்ய வேண்டிய தில்லை. சட்டத்தின் ஆட்சியை நாம் அனைவரும் ஒரே குரலில் பாதுகாக்க வேண்டும். அதை வலியுறுத்த வேண்டும்.

இருப்பினும், இன்னொன்றையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது, உலகின் எந்தவொரு குடிமகனும் பிறப்பால் எதிலோ சொந்தமாக இருக்கிறார். ஒரு நிறம், ஒரு மொழி, ஒரு மதம் சார்ந்தது என்பது இயற்கையான விஷயம். எனவே, எந்தவொரு நபரும் கட்சி சார்பற்றவர் என்று சொல்வது கடினம். பிறப்பால் எதையோ சேர்ந்தவன்.



இலங்கையிலும், உலகிலும் உள்ள ஒவ்வொரு அமைப்பும், அரசியல் கட்சிகள் இருந்தாலும் இல்லாவிட்டாலும், அரசியல் நோக்கங்களுக்காக நிற்கும் பல்வேறு அமைப்புகள் இருப்பதை நாம் காண்கிறோம். அவற்றை அரசுசாரா நிறுவனங்கள் என்கிறோம். அப்படி இருந்தும் அது எங்கோ சொந்தமாகிறது. அதுதான் உலக இயல்பு.

இலங்கையில் உள்ள சில அரசியல் கட்சிகள் தெரிந்தோ தெரியாமலோ சில அமைப்புகளைச் சேர்ந்தவை என எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியும். அது தவறல்ல. அவர்கள் சில அமைப்புகளை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள். தெரிந்தோ தெரியாமலோ பொருளாதார ரீதியில் நிற்கிறார்கள்.

ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எப்போதும் இலங்கையுடன்தான் நின்றார். அவர் இலங்கையுடன்தான் வெற்றியும் தோல்வியும் அடைந்தார். இப்போதும் இலங்கையுடன்தான் நிற்கிறார். ஆனால் இந்நாட்டில் உள்ள சில அமைப்புகள், சில தனிநபர்கள் மற்றும் சில அரசியல் கட்சிகள் மற்றைய நாடுகளுடன் நிற்கின்றன. அதனால், அவர்கள் பல்வேறு பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஆளாகியுள்ளனர். நாம் அனைவரும் மிகவும் கவனமாக பணி செய்ய வேண்டும்.

நாம் சுதந்திரம் பெற்று 75 ஆண்டுகள் ஆகின்றது. 125 இற்கும் மேற்பட்ட அனைத்தின அரசியல் தலைவர்கள் எமது ஒற்றுமையின்மையினாலும் இனவாதத்தினாலும் கொல்லப்பட்டுள்ளனர். ஒன்று சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஒன்று அவர்கள் விஷம் வைத்து கொல்லப்பட்டுள்ளனர். அல்லது குண்டுவெடிப்பில் இறந்ததுள்ளார்கள். குண்டுவெடிப்பில் தப்பிய ஒரு சிலர் மட்டுமே எஞ்சியுள்ளனர். இவற்றை மிகக் கவனமாகப் பார்த்து பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

பாராளுமன்றத்தில் நாம் வெளியிடும் அறிக்கைகள் தொடர்பில் எமக்குக் கிடைக்கும் எந்தவொரு தகவலையும் வெளியிட எங்களுக்கு உரிமை உள்ளது. அது சரியோ தவறோ, கேட்பவர்களும், கவனிப்பவர்களும் சிந்தித்து செயற்பட வேண்டும்.பொருளாதாரம் வீழ்ச்சியுற்ற வேளையிலேயே

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றுள்ளார். டீசல், பெற்றோல், எரிவாயு தட்டுப்பாட்டை நீக்கி நாட்டை சரியான பாதையில் கொண்டு சென்று எதிர்கால சந்ததியினருக்கு பாதையை அமைக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செயற்படுகின்றார். அவ்வாறான நிலையில் அவரைப் போன்ற தலைவரை பாதுகாத்து செயற்பட வேண்டும். அது நம் அனைவரின் பொறுப்பு என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

**சிறிகொத்தவில் 28.02.2023 அன்று நடைபெற்ற தொழில் வல்லுனர்களுடனான சந்திப்பு தொடர்பாக வஜிர அபேவர்தன எம்.பி அறிக்கை**

பாராளுமன்ற உறுப்பினர்,
முன்னாள் அமைச்சர்
**வஜிர அபேவர்தன**
தவிசாளர் ஐக்கிய தேசிய கட்சி

# 'நாட்டியச் செல்வம்' ஸ்ரீசண்முக சுந்தரம் அவர்களின் வருகையினால் நம்நாட்டு கலைஞர்களுக்கு உத்வேகம்

**கலாநிதி ராகினி திருக்குமரன்**

ஒரு தாய்க்கு இரண்டு பிள்ளைகள் இருப்பார்களாயின் அவர்கள்தான் இந்தியத் தமிழர்களும், இலங்கைத் தமிழர்களும். எமக்கான உறவுப் பாலம் மிக நீண்ட வரலாறு கொண்டது. வணிகத்தால் மட்டுமன்றி கலைகளாலும் உறவுப் பாலத்தை இறுகப் பற்றி வைத்திருக்கின்றோம். அவ்வாறான நிலையில் இந்தியாவிலிருந்து வருகை தந்திருக்கும் கலைஞன் 'நாட்டியச் செல்வம்' ஸ்ரீசண்முக சுந்தரம் அவர்களின் வருகை எமக்கு மகிழ்ச்சி அளிக்கிறது.

இலங்கையைப் பொறுத்தளவில் இன்று பெரும்பாலான ஆண் நடனக் கலைஞர்கள் பரத நாட்டியத் துறையிலே பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்கள். முன்பு ஆண் நடனக் கலைஞர்கள் நடனம் பயில்வதற்குத் தயக்கம் காட்டிய நிலையில், தற்கால சூழல் பெரிய மாற்றத்தைக் கண்டுள்ளது எனலாம். அவர்களுக்கான வரவேற்பும், சமூப் பார்வையும் உன்னத நிலையில் இருக்கின்றன. இந்த நிலையில் ஓர் ஆண் நடனக் கலைஞராகத் தங்களின் வருகை நம் நாட்டுக் கலைஞர்களுக்கு உற்சாகத்தையும், உத்வேகத்தையும் கொடுப்பதாய் அமையும்.










எமது நாட்டின் பரத நாட்டிய பாடத்திட்டத்தில் பெண்களுக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்துத் தயாரிக்கப்பட்ட நிலையில், புதிதாக வெளிவர இருக்கும் கலைத்திட்டமானது ஆண்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்துத் தயாரிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்காகவே சிறப்பான உருப்படிகளும் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டுள்ளன.

கலை என்பது பாட்டுப் பாடுவதோ, நடனமாடுவதோ என்று வரையறுப்பதற்கில்லை. அழகுற உருவாக்கப்படுபவை, வெளிப்படுத்தப்படுபவை எல்லாமே கலைகள்தான். வீட்டில் நன்றாகச் சமையல் செய்யக்கூடிய பாட்டி முதற்கொண்டு உள்ளத்தை அழகுற வைத்திருப்பவர்கள் அனைவரும் கலைஞர்கள்தான்.

உள்ளத்தை அழகாக வைத்திருப்பதென்பது சாதாரண விடயமன்று. அகம் அழகாக இருக்கும்போது அந்த அகத்தின் வெளிப்பாட்டை முகத்தில் காண்கிறோம்.

இன்றைய காலகட்டத்தில் எமது நாட்டில் நாளுக்கு நாள் வாழ்வியல் சுமை ஏறிக் கொண்டே போகின்றது. ஏதோ ஒரு வகையில் மனஇறுக்கத்திற்கு உள்ளாகின்றோம். எனவே இதிலிருந்து விடுபட வேண்டுமானால் கலைகளை நாடித்தான் செல்ல வேண்டும். எனவே கலையினூடாக சிறப்பான வாழ்க்கையினை வாழ்வதோடு, ஆரோக்கியமான சமுதாயத்தையும் கட்டியெழுப்புவோம்.

**எச்.எச்.விக்ரமசிங்க...**

# சீனாவில் இருந்தே உலகுக்கு கொரோனா வைரஸ் பரவியது

## உறுதிப்படுத்தியது அமெரிக்காவின் எஃப்.பி.ஐ!

உலகில் பல இலட்சக்கணக்கான மக்களின் உயிரைப் பறித்த கொரோனா என்ற கொடிய வைரஸ் தொற்று சீனாவின் வூஹான் மாகாணத்தில் இருந்தே முதன்முதலாகப் பரவியது என அமெரிக்காவின் எஃப்.பி.ஐ. இயக்குநர் கிறிஸ்டோபர் ரே உறுதிபடுத்தி இருக்கிறார். கொரோனா வைரஸ் கடந்த 2019 ஆம் பரவத் தொடங்கியதில் இருந்தே இந்த குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

சீனாவில் கடந்த 2019 ஆம் ஆண்டு கொரோனா வைரஸ் தொற்று வேகமாக பரவத் தொடங்கியது. அந்த நாட்டில் ஏராளமான மக்களை பாதித்து உயிர்களை பறித்த அந்த வைரஸ் இந்தியா உட்பட மற்ற உலக நாடுகளையும் மிகப்பெரிய அளவில் பாதித்தது.

சீனாவில் முதன்முதலில் இந்த கொரோனா வைரஸ் வூஹான் நகரத்தையே தாக்கியதாகவும், அங்குள்ள ஆய்வு கூடம் ஒன்றில் இந்த வைரஸ் குறித்து ஆராய்ச்சியாளர்கள் பரிசோதனை செய்துகொண்டு இருந்தபோது அது வெளியே கசிந்து பெரும் பாதிப்பை ஏற்படுத்தியதாகவும் கூறப்பட்டது.



அமெரிக்கா உட்பட மேற்கத்திய நாடுகள் பல இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தன. சிலர் இதனை 'சீனா வைரஸ்' என்றே அழைக்கத் தொடங்கினர். சீனா அரசாங்கம் இதற்கு மறுப்புத் தெரிவித்து வந்தது. இந்த நிலையில் அமெரிக்காவின் எஃப்.பி.ஐ. விசாரணை அமைப்பு இது தொடர்பான தீவிர விசாரணையில் இறங்கியது. இந்த நிலையில் சீனாவின் ஊஹானில் உள்ள ஆய்வுகூடத்தில் கொரோனா வைரஸின் மூலக்கூறுகள் கண்டுபிடிக்கப்பட்டதாக எஃப்.பி.ஐ. இயக்குநர் கிறிஸ்டோபர் ரே உறுதிப்படுத்தி இருக்கிறார் என எஃப்.பி.ஐ. யின் அதிகாரபூர்வ ட்விட்டர் பக்கத்தில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

இதுகுறித்து எஃப்.பி.ஐ. இயக்குநர் கிறிஸ்டோபர் ரே கருத்துத் தெரிவிக்கையில் "இதற்கு எஃப்.பி.ஐ, சற்று காலம் எடுத்துக் கொண்டது. தற்போது சீனாவில் உள்ள வூஹான் நகரில் அமைந்து இருக்கும் ஆய்வகத்தில் ஏற்பட்ட கசிவின் காரணமாகவே கொரோனா வைரஸ் வெளி உலகிற்கு பரவி இருப்பதை கண்டுபிடித்து உள்ளோம் என்றார்.

# 'உடற்பயிற்சி செய்வோம் உடல் ஆரோக்கியம் பேணுவோம்' அக்கரைப்பற்றில் 12 ஆம் திகதி விளையாட்டுப் போட்டிகள்

'உடற்பயிற்சி செய்வோம், உடல் ஆரோக்கியம் பேணுவோம்' எனும் தொனிப்பொருளில் கடந்த ஏழு வருடங்களாகத் செயற்பட்டுவரும், அக்கரைப்பற்று வோர்க்கஸ் யூனியன் வருடாந்தம் நடத்தும் விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள் இம்மாதம் 12 ஆம் திகதி நடைபெறவுள்ளன. அதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித்தினம் இன்று 02 ஆம் திகதியாகும்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் நிகழ்வு, அக்கரைப்பற்று நீர்ப்பூங்காவில் நடைபெற்றது. அக்கரைப்பற்று வோர்க்கஸ் யூனியன் தலைவர் எம்.எச்.ஜெய்னுதீன், ஆலோசகர்கள் சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.எல். ஏ.றஸீட், எம்.சி.கலீலுர்ரஹ்மான், விளையாட்டு குழுத் தலைவர் டொக்டர் வை.பி.ஹம்ஸா, உப தலைவர்; எம் .எப்.நளீர், செயலாளர் எம்.எச். சாக்கீர், பொருளாளர் யூ.எல்.ஆகிர் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டு விளக்கமளித்தனர்.

ஆரோக்கிய வாழ்வை விரும்பும் முக்கியஸ்தர்கள் பலர் நீர்ப்பூங்காவில் காலையிலும், மாலையிலும் ஒன்றுசேர்ந்து உடற்பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். பயிற்சிக்கு சமுமளிப்பவர்களிடம் தகுதி, தராதரம், அந்தஸ்து பார்க்கப் படுவதில்லை. இனம், மதம், மொழி, அரசியல், பிரதேச, பால் வேறுபாடு பார்ப்பதுமில்லை. வித்தியாகம், வேறுபாடுகளின்றி ஒரு தாய் பெற்ற பிள்ளைகள் போன்று உடற்பயிற்சிகளில் ஈடுபட்டு ஆரோக்கியம் பெற்று வருகின்றனர்.

அக்கரைப்பற்று மாநகர சபையினால் சிறப்பாக நிர்வாகிக்கப்பட்டு வரும் நீர்ப்பூங்காவுக்கு வருகை தருபவர்கள் அதனை மிக இலகுவில் மறந்து விடுவதில்லை. அழகிய மனங்கவர் விசாலமான அமைதிப் பிரதேசம், இரம்மியமான இயற்கை நிறைந்த சூழல். இங்கு கட்டணம் எதுவும் அறவிடப்படுவதுமில்லை.

கொழும்பு சுதந்திர சதுக்கத்திற்கு அடுத்தபடியாக அக்கரைப்பற்று நீர்ப்பூங்காவையே குறிப்பிட முடியம் என சுட்டிக்காட்டப்படுகின்றது. இங்கு பயிற்சி பெறுபவர்கள், தங்களுடன் மாத்திரம் அதனை மட்டுப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. மாறாக சமூகத்திலுள்ள ஏனையவர்களையும் உள்ளீர்க்கும் நல்ல முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். அதன் பயனாக கடந்த 2021ஆம் ஆண்டு முதன்முறையாக போட்டி நிகழ்வுகள் அறிமுகப்படுத்தப்பட்டு நடைபெற்று வருகின்றன.

## விண்ணப்ப முடிவுத் திகதி இன்று

பிரதி வருடம் மார்ச் 12ஆம் திகதி நடைபெறும் போட்டிகள் இம்முறை மூன்றாவது வருடமாக நடைபெறுகின்றன. மு.ப 6.00 மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்வுகள் மு.ப 11.00 மணிக்கு நிறைவு பெறவுள்ளன. போட்டிகளில் ஆண், பெண் இருபாலரும் கலந்து கொள்ளலாம். வயது

அடிப்படையிலும் போட்டிகளில் பங்கேற்க முடியும். போட்டி நடைபெறும் தினத்தன்று பிரதேசத்திலுள்ள சிரேஷ்ட பிரஜைகள் 30 பேர் அதிதிகளாக கலந்து சிறப்பிக்கவுள்ளனர். அதிதிகள் பங்குபற்றும் தனியான போட்டி நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

12 ஆம் திகதி போட்டிகளில் சுமார் 400 பேர் பங்குபற்றுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படவுள்ளதுடன், போட்டிகளில் பங்கேங்கும் அனைவரும் விஷேட பரிசு வழங்கி கௌரவிக்கப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

போட்டியாளர்கள் தங்களது விண்ணப்பங்களை இன்று 02ம் திகதிக்குப் பிந்தாமல் சமர்ப்பிக்க முடியும்.








### அங்கத்தவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கான போட்டிகள்

இலகு ஓட்டம் 5000 மீற்றர் (18 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள்), சிரேஷ்ட பிரஜைகளுக்கான நடைப் போட்டி 1500 மீற்றர். (60 வயதுக்கு மேற்பட்டவர்கள், ஆண்களுக்கான நடைப்போட்டி 2000 மீற்றர் (வயதெல்லை 40_59), ஆண்களுக்கான நடைப்போட்டி 2000 மீற்றர் (வயதெல்லை 20_39), பெண்களுக்கான நடைப்போட்டி 1000 மீற்றர் (20 வயதிற்கு மேற்பட்டவர்கள்), பெண்களுக்கான நடைப்போட்டி 1000 மீற்றர் (வயதெல்லை 12_19), ஆண்களுக்கான நடைப்போட்டி 1000 மீற்றர் (வயதெல்லை 12_19), சிறுவர்களுக்கான ஓட்டப்போட்டி 500 மீற்றர் (11 வயதிற்குக் கீழ்),

### பொதுமக்களுக்கான போட்டிகள்:

பெண்களுக்கான நடைப்போட்டி 1000 மீற்றர் (20 வயதிற்கு மேற்பட்டவர்கள்), ஆண்களுக்கான நடைப்போட்டி 1500 மீற்றர் (20 வயதிற்கு மேற்பட்டவர்கள்), ஆண்களுக்கான நடைப்போட்டி 1000 மீற்றர் (19 வயதிற்குக் கீழ்)

### அதிதிகள் மற்றும் அனுசரணையாளர்களுக்கான போட்டிகள்:

நடைப்போட்டி 500 மீற்றர், சிரேஷ்ட பிரஜைகளுக்கான நடைப் போட்டி 1500 மீற்றர் (60 வயதுக்கு மேற்பட்டவர்கள்.

பின்வரும் இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

0772288963, 0779451173, 0774865657, 0777771187

**முகம்மட் றிஸான்...**
(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

## மத்திய தென்னகும்புர வை.எம்.எம்.ஏ
# பொதுச்செயலாளர் நாகூர் பிச்சை நேற்று காலமானார்

கண்டி, மத்திய தென்னகும்புர வை.எம்.எம்.ஏ. இயக்க பொதுச் செயலாளர் (ரவூப்) நாகூர் பிச்சை நேற்று (01) அன்னாரின் தென்னகும்புர இல்லத்தில் காலமானார். அன்னாரின் ஜனாஸா நேற்று கண்டி முஸ்லிம் பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. கண்டி, தென்னக்கும்புர மத்திய முஸ்லிம் வாலிப சங்க ஸ்தாபக பொதுச் செயலாளராக கடந்த 50 வருடங்களுக்கு மேலாக சமூக, சமய, கல்வி, பொருளாதார, மற்றும் துறைகளிலும் தன்னிகரற்ற சேவையாற்றினார். அன்னாரின் ஜனாஸாவில் பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

# பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கு இன்று பிறந்த நாள்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

பிரதமர் தினேஷ் குணவர்தன இன்று தமது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

தேசிய வீரரான அமைச்சர் பிலிப் குணவர்தன மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் குசுமா குணவர்தன தம்பதிகளின் இரண்டாவது புதல்வராக 1949 மார்ச் 02 ஆம் திகதி பிறந்துள்ள தினேஷ் சந்ர ரூபசிங்க குணவர்தன மக்கள் ஐக்கிய முன்னணியின் இளைஞர் அமைப்பு மூலமாக அரசியலில் பிரவேசித்து, 1973 ஆம் ஆண்டு முதல் மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவராகவும் செயற்பட்டுள்ளார்.

கொழும்பு றோயல் கல்லூரியில் கல்வி கற்றுள்ள அவர், அமெரிக்காவின் ஒரிகன் மற்றும் நெதர்லாந்தின் நியன்ரோட் ஆகிய பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி கற்றுள்ளார்.

1983 ஆம் ஆண்டு இடம்பெற்ற மகரகம இடைத்தேர்தலில் மக்கள் ஐக்கிய முன்னணியின் சார்பில் போட்டியிட்டு பாராளுமன்றத்திற்கு பிரவேசித்தார்.

எதிர்க்கட்சி உறுப்பினராக மக்கள் உரிமைகளை வென்றெடுப்பதற்கும் மக்கள் எதிர்ப்பு சட்டங்களை மீளப்பெறுவது தொடர்பிலும் பாராளுமன்றத்திலும் வெளியிலும் அர்ப்பணிப்புள்ள நடவடிக்கைகளை மேற்கொண்டவராக அவர் திகழ்கின்றார்.



## தனியார் பாதுகாப்பு முகவரகங்களின்
# பதிவு, புதுப்பித்தலுக்கான கட்டணங்கள் அதிகரிப்பு
## ஜனாதிபதியினால் வர்த்தமானி வெளியீடு

லோரன்ஸ் செல்வநாயகம்



தனியார் பாதுகாப்பு முகவர் நிலையங்களுக்கான பதிவுகளை புதுப்பிப்பதற்கான கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. கட்டண அதிகரிப்பு தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்படி வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

அதன்படி, நிறுவனமொன்றை முதற்தடவையாக பதிவுசெய்வதற்காக இதுவரை நடைமுறையிலிருந்த 15,000 ரூபா கட்டணம் இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் 35,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. புதிய கட்டணமாக 50,000 ரூபா அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஏற்கனவே இருந்த பதிவுகளை புதுப்பிப்பதற்கான கட்டணம் ஏற்கனவே 10,000 ரூபாவாக இருந்துள்ளது. அது 15,000 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 25,000 ரூபாவாக்கப்பட்டுள்ளது.

தனியார் பாதுகாப்பு முகவர் நிறுவனங்களின் அனுமதிப்பத்திரங்கள் காலாவதியாகும் போது அதன் முதல் மாதத்துக்கான தாமதக் கட்டணமான 10,000 ரூபாவும் அனுமதிப்பத்திரம் காலதாமதமாகி 31 90 நாட்களுக்கிடையிலான கட்டணம் 25,000 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, 90 நாட்களைக் கடந்துள்ள தாமதக் கட்டணம் 35,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் இந்த அனைத்து திருத்தங்களும் கடந்த மாதம் 20 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வர்த்தமானிப் பத்திரம் வெளியிடப்பட்டுள்ளது.

# மே மாத போராட்டங்களால் 180 வீடுகள், 100 வாகனங்கள் சேதம்
## நீதிமன்றுக்கு அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களம் அறிவிப்பு

நாட்டில் கடந்த 2022ஆம் ஆண்டு மே மாதம் இடம்பெற்ற போராட்டத்தின் போது, 180 வீடுகளும், 100 வாகனங்களும் சேதமாக்கப்பட்டதாக அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களம் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளது.

எனினும், இதனால் எந்த உயிர்ச் சேதமும் ஏற்படவில்லையென அறிவிக்கப்பட்டுள்ளதாக பிரதி இராசாயன பகுப்பாய்வாளர் பீ.ஜீ.மடவல தெரிவித்துள்ளார்.

அத்துடன் அப்போதைய பிரதமரின் இல்லத்துக்கு தீ வைப்பதற்காக, எச்சந்தர்ப்பத்திலும் எரிபொருள் பயன்படுத்தப்படவில்லையென்பது தெரியவந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கச்சதீவு ஆலய திருவிழா சகல ஏற்பாடுகளும் பூர்த்தி
## யாழ்.மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரன் அறிவிப்பு

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா தொடர்பான சகல ஏற்பாடுகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு விடுத்த விசேட அறிவிப்பிலேயே அவர்,இதனைத் தெரிவித்தார்.

2023ஆம் ஆண்டுக்கான கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா, யாழ். மாவட்டச் செயலாளரது ஒருங்கிணைப்பில் யாழ். ஆயர் இல்லம், இலங்கை கடற்படை,நெடுந்தீவு பிரதேசசெயலகம் உள்ளிட்ட சகல திணைக்களங்களின் முழுமையான ஒத்துழைப்புடன் ஆரம்பமாகும்.இவ்விழா,இரு தினங்கள் (03) வெள்ளிக்கிழமையும் (04) சனிக்கிழமையும் இடம்பெறும். கச்சதீவு உற்சவத்தில் கலந்து கொள்ளும் பக்தர்களுக்கு உணவு,சிற்றுண்டி மற்றும் பயண ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. ஏற்கனவே,மார்ச் 04 ஆம் திகதி கச்சதீவு உற்சவத்தில் கலந்து கொள்ளும் பக்தர்களுக்கான காலை உணவு மாத்திரம் இலங்கை கடற்படையினர் வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் மாவட்ட செயலாளர் தெரிவித்தார்.

# சிறுமியை துஷ்பிரயோகம் செய்த மத குரு,தாக்குதலில் உயிரிழப்பு

(அக்குறணை குறூப் நிருபர்)

மத அனுஷ்டானத்துக்கு வந்த சிறுமியை பாலியல் துஷ்பிரயோம் செய்த மத குரு ஒருவர், உறவினர்களின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்ததாகத் தெதிவிக்கப்படுகிறது. இச்சம்பவம் ஹெட்டிப்பொல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. பாதிக்கப்பட்ட சிறுமியின் உறவினர்களே,இந்த மத குருவை தாக்கியுள்ளனர்.இதில்,காயமடைந்த மத குரு,குருநாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தார்.

ஹெட்டிப்பொல பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றில், இம்மத குரு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஹெட்டிப்பொல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.



கல்கிசை படோவிட்ட ஸ்ரீ கருமாரி அம்மன் ஆலய அறநெறி பாடசாலை மாணவர்கள் நடத்திய சிவராத்திரி கலைநிகழ்வுகள் ஆலயத்தில் அண்மையில் இடம்பெற்றன.
தகவல் யதுஷா ரவித்தியாகராஜா

## சுற்றுலா பயணிகளின் பாதுகாப்புக்கு...

டிரான் அலஸ், சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ மற்றும் அதிகாரிகளுடன் அமைச்சில் நடைபெற்றது.

நாட்டின் சுற்றுலாத்துறையை மேலும் மேம்படுத்தும் முயற்சியாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கிராம மக்கள் மற்றும் முச்சக்கர வண்டி சாரதிகள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு அண்மையில் ஏற்பட்ட அசௌகரியங்களை கருத்திற்கொண்டு இந்ததீர்மானம்எடுக்கப்பட்டுள்ளது.

## புலத்கொஹுபிட்டியவில்...

தெரிவித்துள்ளது. இது தொடர்பான அறிக்கையை கேகாலை நீதவான் நீதிமன்றத்தில் பதிவு செய்த பின்னர், பிரேத பரிசோதனை நடத்தப்பட்டுள்ளது.

## இலங்கை நகை வர்த்தகர் சங்கம்...

நகை வர்த்தக நிறுவனங்களைப் பாதுகாப்பது பற்றியும், அகில இலங்கை நகை வர்த்தக சங்க நிர்வாகிகள், பொலிஸ் மாஅதிபரின் கவனத்துக்கு கொண்டு வந்தனர்.

பொலிஸ் மாஅதிபர் சீ.டி.விக்கிரமரத்னவை, அகில இலங்கை நகை வர்த்தக சங்க நிர்வாகிகள் அவரது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

## மைத்திரி, தயாசிறிக்கு... 03ஆம் பக்கத் தொடர்

ப்ரேங்க் குணவர்தன, எம்.வி. சமன் மொறாயஸ் ஆகிய நீதிபதிகள் உள்ளடங்கிய நீதிபதிகள் இந்த இடைக்கால தடையுத்தரவை பிறப்பித்தனர்.

## வெடிபொருட்கள்... 03ஆம் பக்கத் தொடர்

வருகின்றனர். மேலும், சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுகையில், வெடி பொருட்கள் ஏதேனும் வெடிக்கும் பட்சத்தில், அகழ்வில் ஈடுபடுபவர்கள் அவயங்களை இழக்க வேண்டி ஏற்படும். சில வேளைகளில் உயிரை இழக்கவும் நேரிடும்.

எனவே, அபாயகரமான பகுதிகளுக்குள் ஊடுருவி மணல் அகழ்வில் ஈடுபடுபவர்களை கட்டுப்படுத்த, உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## வேலை நிறுத்தத்தின்... 03ஆம் பக்கத் தொடர்

தெரிவித்தனர். மேலும், பண வைப்பு மற்றும் ரசீது செலுத்துதல் சேவைகளும் வழமைபோன்று எதுவித பாதிப்புமின்றி செயல்படுத்தப்பட்டதாகும் அவர்கள் தெரிவித்தனர்.

நேற்று மேற்கொள்ளப்பட்ட அடையாள வேலை நிறுத்தத்தால், பொதுமக்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் பாதிப்படையவில்லை. இருந்தாலும், எதிர்காலத்தில் இவ்வாறான அடையாள வேலை நிறுத்தங்களை தடுக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படுமெனவும் வங்கி நிர்வாகிகள் மேலும் தெரிவித்தார்.

சில வங்கிக் கிளைகளில் குறைவான பணியாளர்களே சேவையில் ஈடுபட்டிருந்தனர். இந்நிலையிலும் வங்கி நடவடிக்கைகள் தடையின்றி நடைபெற்றன.

அத்துடன், நாடு முழுவதும் அமைந்துள்ள வங்கிகளின் நடவடிக்கைகள் தடைப்பட்டதாக எவ்வித தகவல்களும் கிடைக்கப்பெறவில்லை எனவும் தெரிவித்தனர்.

## மக்களுக்கான... 03ஆம் பக்கத் தொடர்

மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அதில் அவர் குறிப்பிட்டதாவது,

அரசியலமைப்பின் "13ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள மாகாண சபை உள்ளிட்ட அதிகாரங்கள் அனைத்தையும் முதலில் முழுமையாக நடைமுறைப்படுத்திவிட்டு, தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வைப் பெற பேச்சுவார்த்தை மேசைக்கு வாருங்கள்.

நாங்கள் பேசத் தயாராக இருக்கின்றோம். வடக்கு,கிழக்கு அரசியல் தலைவர்கள் தங்களது மக்களின் பிரச்சினைகள் தொடர்பில், ஒரே குரலில், அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும்.

அரசியல் கட்சிகளின் இறுதி இலக்கு வேறாக இருந்தாலும், ஆரம்பப் பயணம் ஒன்றாக இருக்க வேண்டுமென்றும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

## புதிய வரிக்கொள்கைக்கு... 03ஆம் பக்கத் தொடர்

பெரும் கஷ்டங்களை எதிர்நோக்க நேர்ந்ததையும் காணமுடிந்தது.

இதன்படி டாக்டர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் தபால் ஊழியர்கள் ஆகியோரும் நேற்றைய இந்த தொழிற்சங்கப் போராட்டம் மற்றும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஒத்துழைப்பு வழங்கினர். அவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் கறுப்பு பட்டி அணிந்து கடமைக்கு சமூகமளித்திருந்தனர்.

இவர்கள் மதிய உணவுக்கான ஓய்வு நேரத்தில் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இதனால் நேற்றைய தினம் பெருமளவிலான உத்தியோகத்தர்கள் கறுப்பு உடைகளுடனே கடமைக்கு சமூகமளித்திருந்தனர்.

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தமது எதிர்ப்பை மட்டும் வெளியிடுவதாக, அச்சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் டாக்டர் சமில் விஜேசிங்க தெரிவித்தார். அதேவேளை, ரயில்வே திணைக்கள தொழிற்சங்கங்களும் மேற்படி எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மாகும்புர மத்திய நிலையத்தினூடாக...

பல்வகை போக்குவரத்து மத்திய நிலையத்தினூடாக பயணிக்காததால், பொதுமக்களும் மற்றும் சாரதிகளுக்கும் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இதனை கவனத்திற் கொண்டு போக்குவரத்து பெருந்தெருக்கள் மற்றும் ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன வழங்கிய ஆலோசனைகமைய நேற்றைய தினம் முதல் இந்த புதிய திட்டம் செயல்படுத்தப்படுகின்றது.

பல்வகை போக்குவரத்து மத்திய நிலையத்தின் முன்பாக உள்ள பாதையில் முறையற்ற விதத்தில், பஸ்களை நிறுத்தி பயணிகளை ஏற்றிச் செல்லல் மற்றும் இறக்கிவிடல் காரணமாக காணப்பட்ட பாரிய நெரிசல், இதனால், நீங்கியுள்ளதோடு பயணிகள் முகம் கொடுத்து வந்த அபாய நிலைமையும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

மாகும்புமற பல்வகை போக்குவரத்து மத்திய நிலையத்தில் பிரயாணிகள் மற்றும் பஸ்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் முறையாக வழங்கப்பட்டுள்ளன.இதனால் மக்களுக்கு மிகவும் சொகுசான, பாதுகாப்பான பயணத்தை மேற்கொள்ள முடிந்துள்ளது.

இவ்விதிகளை மீறுபவர்களை அடையாளம் காண்பதற்காக நடமாடும் பரிசோதகர்கள் அணியும் மற்றும் போக்குவரத்து பொலிஸாரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். சட்டங்களை மீறும் பஸ்கள் தொடர்பாக உடனடியாக சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவுள்ளது.

இதேவேளை, ஹைலெவல் வீதியில் பயணிக்கும் பஸ் வண்டிகள் மாகும்புர பல்வகை போக்குவரத்து மத்திய நிலையமூடாக பயணிப்பதற்கான திட்டமொன்றை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த முறைமை மிக சாத்தியமானதாக முன்னெடுக்கப்படுவதாகவும் போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் நிலான் மிரண்டோ தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தனவின் பணிப்புரையின் கீழ், நேற்று இந்த பல்வகை போக்குவரத்து முறைமை நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

அதிகளவு பயணிகளை ஏற்றிச் சென்ற பஸ்வண்டிகள் தவிர்ந்த ஏனைய அனைத்து பஸ் வண்டிகளும் இந்த மத்திய நிலையமூடாகவே நேற்று பயணித்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு நகரை அண்டிய பகுதிகளில் நிலவும் போக்குவரத்து நெருக்கடி நிலையால்,பொது மக்கள் வாகன உரிமையாளர்களும் நீண்டகாலமாக பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இந்நெருக்கடியை நீக்கும்வகையிலும் எரிபொருளை மீதப்படுத்தும் வகையிலும் அத்துடன் மாசுகளற்ற விதத்தில் பிரயாணிகளினதும் வாகனங்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கிலேயே இந்த புதிய பல்வகைப் போக்குவரத்து முறைமை நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

## அரச நிறுவனங்களுக்கு தனியார்...

வேலைநிறுத்தப் போராட்டம் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறும் சந்தர்ப்பங்களில் அரச வங்கிகளூடாக கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளமுடியாமற் போனால், கடன் பத்திரம் விநியோகித்தல் உள்ளிட்ட நிதி விடயங்கள் அனைத்தும் சீர்குலைவதற்கு சந்தர்ப்பம் உள்ளமை தொடர்பில் இந்த விசேட அமைச்சரவைக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

வேலைநிறுத்தப் போராட்டம் இடம்பெறும் சந்தர்ப்பங்களில் அரச வங்கிகளின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டு மருந்து மற்றும் அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்வதற்கு கேள்விப்பத்திரம் திறக்க முடியாத நிலை ஏற்படலாம்.

இந்நிலையில், நிதியமைச்சின் அனுமதியுடன் திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்கள் அரச நிறுவனங்கள் உள்ளிட்ட நிறுவனங்களுக்கு

இந்த முறைமையில் தனியார் வங்கிகளில் வைப்புக் கணக்குகளை ஆரம்பிப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்துள்ள யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் பந்துலகுணவர்தன மேலும் தெரிவித்துள்ளார்.

## மண்ணெண்ணெய் விலை 50...

ரூபாவிலிருந்து 330.00 ரூபாவாக குறைந்துள்ளது. இதன் விலை,134.00 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இப்புதிய விலைகள் நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வருவதாகவும் கூட்டுத்தாபனம் தெரிவித்தது. எவ்வாறெனினும் பெற்றோல், டீசல் உட்பட ஏனைய எரிபொருட்களின் விலைகளில் எவ்வித மாற்றங்களும் மேற்கொள்ளப்படவில்லை.

## பிரித்தானியாவுக்கான இலங்கை...

இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம அண்மையில் வழங்கி வைத்தார். வடக்கு, கிழக்கில் முதலீடுகளை முன்னெடுத்து அபிவிருத்தி செய்யும் நோக்கில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. பிரித்தானிய சபோல்க் பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகம் தொடர்பில் முதுகலை பட்டப்படிப்பை நிறைவு செய்துள்ள இவர், வணிகம் மற்றும் தொழில்நுட்பத்தில் மிகுந்த அர்ப்பணிப்புடன் தனது திறன்களை வெளிப்படுத்தி வருகிறார். வணிக அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம் தொடர்பில் நீண்ட அனுபவமுள்ள கஜன், பல்வேறு திட்டங்களின் மூலம் இலங்கையில் நிலையான வளர்ச்சியை அடைய வேண்டும் என்பதில் தீவிர ஆர்வம் காட்டி வருகிறார். இங்கிலாந்து உட்பட உலகில் ஏனைய நாடுகளிலிருந்து முதலீட்டாளர்களை ஈர்க்கும் அவாவுடன், அவர் செயற்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்து கெயார் இன்டர்நேஷனல் வணிகத்தின் முகாமையாளரான இவர், பல்வேறு கலாசார அமைப்புகளின் ஸ்தாபகராகவும் பிரதான நிறைவேற்று அதிகாரியாகவும் பணியாற்றி வருகிறார்.இவர், இலங்கை நொதர்ன் கெம்பஸின் பிரதான நிறைவேற்று அதிகாரியுமாவார்.

## தகவலறியும் உரிமைச் சட்டம்...

சமர்ப்பித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியலை விடுவிக்கக்கோரி தகவல் ஆணைக்குழு மூலம் வழங்கப்பட்டுள்ள தீர்மானத்தை உறுதி செய்து, சம்பத் அபயகோன் மற்றும் பீ.குமாரன் ரத்னம் ஆகியோர் உள்ளடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் குழாம் நேற்று இந்த தீர்ப்பை வெளியிட்டுள்ளது.

தீர்ப்பை வழங்கிய பின்னர் அது தொடர்பில் கருத்து தெரிவித்த மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சம்பத் அபயகோன்,

பாராளுமன்ற உறுப்பினர்களும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட நபர்களே, அவர்கள் மக்களாலேயே பராமரிக்கப்படுகின்றனர். அவர்களும் தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளியிடுவது சட்டத்தின் மூலம் கட்டாயமானதாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறு சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளியிடாமலிருப்பது சட்டத்தின் முன்னிலையில் குற்றமாகும் என்பதை தெளிவுபடுத்தியுள்ள நீதிபதி, அந்த குற்றத்துக்காக குற்றவாளியாகும் நபர், ஒரு வருடத்துக்கு குறையாத சிறைத்தண்டனை அல்லது ஆயிரம் ரூபாவுக்கு குறையாக தண்டப்பணம் அல்லது அந்த இரண்டு தண்டனைகளுக்கும் உட்படுத்தப்படுவார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். 2018ஆம் ஜூன் (21) ஊடகவியலாளரான சாமர சம்பத் பாராளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு கடிதமொன்றின் மூலம் தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை சமர்ப்பித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின்

பெயர்ப் பெட்டியை தமக்கு வழங்குமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார். எனினும், பாராளுமன்ற செயலாளர் நாயகம் இதனை நிராகரித்தார். இதற்கு எதிராக ஊடகவியலார் சாமர சம்பத் தகவல் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்திருந்தார். அந்த முறைப்பாட்டை விசாரணை செய்த தகவல் ஆணைக்குழு, முறைப்பாட்டாளர் கோரியுள்ள தகவல்களை விடுவிக்க வேண்டுமென பாராளுமன்ற தகவல் அதிகாரிக்கு உத்தரவு பிறப்பித்திருந்தது. அந்த தீர்மானத்திற்கு எதிராக பாராளுமன்ற செயலாளர் நாயகம், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு ஒன்று தாக்கல் செய்தார். இது தொடர்பிலே நேற்று மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் குழு தீர்ப்பை அறிவித்தது.

## மைத்திரி தாக்கல் செய்த...

அடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இம்மனு,விசாரிக்கப்பட்டது. இதன்போதே, அவர்கள் இந்த உத்தரவை பிறப்பித்தனர். உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட நபர்கள், நட்டஈட்டைக் கோரி தமக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த சகல வழக்குகளையும் நிராகரித்து, அந்த வழக்குகளிலிருந்து தம்மை விடுவிக்குமாறு,முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்படி மனுவை தாக்கல் செய்திருந்தார். போதியளவு புலனாய்வுத் தகவல்கள் கிடைத்திருந்தும், உயிர்த்த ஞாயிறு தாக்குதலை தடுப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளாதமை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட தரப்பினர்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.இது தொடர்பில், பாதிக்கப்பட்டவர்களால் 108 வழக்குகள் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சம்மாந்துறையில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் அடையாளம்

**ஒலுவில் விசேட நிருபர்**

சம்மாந்துறை சுகாதார வைத்தியதிகாரி பிரிவில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்திய கலாநிதி ஐ.எல். எம்.றிபாஸ் தெரிவித்தார்.

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் மீண்டும் டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் அண்மைக்காலமாக டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டு வருவதாகவும் இது தொடர்பாக பொதுமக்கள் மிக அவதானமாக செயற்பட வேண்டுமெனவும், அவர் தெரிவித்தார்.

ஒவ்வொரு சுகாதார வைத்தியதிகாரி பிரிவுகள் தோறும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்புப் குழுவினர், டெங்கொழிப்பு செயலணி, சமூக மட்டத் தலைவர்கள்



ஆகியோர் ஒவ்வொரு வீடு வீடாகச் சென்று டெங்கு நோய் தொடர்பாக மக்களுக்கு விழிப்பூட்டல் செய்து வருவதாகவும், அவர் கூறினார்.

டெங்கு நுளம்புகள் பரவுவதற்கு ஏதுவான வெற்றுக்காணிகளை வைத்திருப்பவர்கள், இரண்டு வார காலத்துக்குள் துப்புரவு செய்ய வேண்டுமெனவும் தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், அவர் தெரிவித்தார்.

# திருமலை பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு

**தம்பலகாமம் குறூப் நிருபர்**



திருகோணமலை அலஸ்தோட்டம் மாதுமை அம்மாள் வித்தியாலயம், அன்புவழிபுரம் கலைமகள் வித்தியாலயம், பெருந்தெரு விக்னேஸ்வரா வித்தியாலயம் ஆகியவற்றில் விசேட கல்விப் பிரிவில் கற்கும் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு, நேற்று புதன்கிழமை (01) அவ்வப் பாடசாலைகளில் சிறப்பாக நடைபெற்றது. மாணவர்களின் செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்கும் அவர்களை நல்ல முறையில் வழிகாட்டுவதற்கும் சமுதாயத்தில் நல்லதொரு நிலைமையை அடைவதற்கும் சமூக சேவைகள் திணைக்களத்தினால் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த நிகழ்வில் சமூக சேவைகள் திணைக்களத்தின் மாவட்ட இணைப்பாளர் த.பிரணவன், சமூக சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.கௌரிசாந்தன், மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் உறுப்பினர்கள், பாடசாலை அதிபர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# கஞ்சாவுடன் கைதானவருக்கு விளக்கமறியல் உத்தரவு

**பாலமுனை தினகரன் நிருபர்**

அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீரா நகர் பிரதேசத்தில் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட ஒருவரை எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் பொலிஸார், மீரா நகர் பிரதேசத்துக்குச் சென்று இந்நபரைக் கைது செய்ததுடன், அவரிடமிருந்து 620 மில்லி கிராம் கஞ்சாவையும் கைப்பற்றியுள்ளனர். இவரை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நேற்று புதன்கிழமை (01) ஆஜர்படுத்திய போதே, இவ்விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.


## பகிரங்க ஏலவிற்பனை

ஓரியன்ட் பினான்ஸ் பீஎல்சீ நிறுவனத்திற்குரிய அனைத்து தங்க கடன் சேவை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட தங்க கடனுடன் தொடர்புடைய 2023/02/28 திகதிக்கு காலாவதியாகி இதுவரை மீட்கப்படாத அனைத்து தங்க நகைகளும் 2023/03/23 மற்றும் 2023/03/24 ஆகிய திகதிகளில் மு.ப. 10.00க்கு கீழுள்ள விலாசத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

ஓரியன்ட் பினான்ஸ் பீஎல்சீ,
(PB1079/PQ)
இல. 19, புகையிரத வீதி, நுகேகொடை.
தொலைபேசி: 0117 577 577


## த ஸ்டான்டர்ட் கிரெடிட் ஃபினான்ஸ் லிமிட்டட்

**கம்பனியின் பதிவு இல - PB 123**

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவுகளுக்கு அமைவாக கம்பனி கலைப்பு அறிவித்தலும் கலைப்பாளர் நியமனம் பற்றிய அறிவித்தலும்

| | |
|---|---|
| கம்பனியின் பெயர் | : த ஸ்டான்டர்ட் கிரெடிட் ∴பினான்ஸ் லிமிட்டட் |
| பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி | : இல. 277, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 |
| நீதிமன்றம் | : வர்த்தக உயர் நீதிமன்றம் மேல் மாகாணம் கொழும்பு (குடியியல்) |
| வழக்கு இல | : CHC/34/2020/CO |
| நீதிமன்ற கட்டளைத் திகதி | : 08.02.2023 |
| கோரிக்கை தாக்கல் செய்த திகதி | : 07.10.2020 |
| கம்பனி கலைப்பாளரின் பெயர் முகவரி | : Gerard Jeevananthan David Liquidator C/o SJMS Associates Level 03, No. 11, Castle Lane Colombo 4 |
| நியமன திகதி | : 08-02-2023 |

## அறிவித்தல்

**மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு**

**கிழக்கு மாகாணம் கிழக்கு மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் மாகாண ஆயுர்வேத ஆணையாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல் – 2023**

கிழக்கு மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் மாகாண ஆயுர்வேத ஆணையாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக நாடளாவிய ரீதியில் இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவையின் நிருவாக சேவையின் தரம் I அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி 21.03.2023 ஆகும்.

அனைத்து விண்ணப்பதாரிகளும் விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கு முன்னர் கீழ் குறிப்பிட்டுள்ள கிழக்கு மாகாண சபையின் இணையத் தளத்தில் மேலதிக தகவல்கள் மற்றும் தகைமைகளை பரீட்சிக்குமாறும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். முறையாக பூர்த்திசெய்யப்படாது சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

**www.ep.gov.lk → Exams & Results → Recruitment Exams**

**மூ.கோபாலரெத்தினம், செயலாளர்,**
**மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,**
**கிழக்கு மாகாணம்**

**28.02.2023**


## விஷேட அறிவித்தல்

### RDB ATM சேவை

வாடிக்கையாளர்களாகிய உங்களுக்கு சிறந்த சேவையினை வழங்குவதற்காக 2023 மார்ச்சு 02 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணி முதல் 2023 மார்ச்சு 05 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணி வரை எமது **RDB ATM** இயந்திரங்களில் விஷேட பராமரிப்பு வேலைகள் மேற்கொள்வதன் காரணமாக **ATM** வாடிக்கையாளர் சேவைகளை மேற்கொள்ள முடியாது என்பதனால் உங்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு எமது மிகுந்த கவலையை தெரிவித்துக்கொள்கின்றோம்.

• 2023 மார்ச்சு 03 அதிகாலை 3.00 மணிமுதல் உங்களுக்கு தேவையான கொடுக்கல் வாங்கல் சேவைகளுக்கு **Lanka Pay** நிறுவனத்துடன் தொடர்புடைய ஏனைய எந்தவொரு வங்கி **ATM** இயந்திரங்களிலும் எவ்வித தடங்கல்களும் இன்றி உபயோகிக்க முடியும் என்பதை தயவுடன் கருத்திற் கொள்ளவும்.

ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேச அபிவிருத்தி வங்கி
RDB Regional Development Bank
HOTLINE 011 2 425 262
www.rdb.lk


## தேசிய லொத்தர் சபை

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய்க்கிழமை 2023.02.28
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம்: 5045
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 41,314,514.00
ஆங்கில எழுத்து: B
வெற்றி இலக்கங்கள்: 9 4 5 8 5 8

**மெகா பவர்**
சீட்டிழுப்பு இலக்கம்: 1393
அடுத்த மெகா சுப்பர் பரிசு: ரூ. 303,871,962.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து: N
சுப்பர் இலக்கம்: 11
வெற்றி இலக்கங்கள்: 02 31 53 79

**ராசி சுப பலன்** (Handahana)
சீட்டிழுப்பு இலக்கம்: 354
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 2,665,311.00
வெற்றி இலக்கினம்: மேஷம்
வெற்றி இலக்கங்கள்: 13 31 52 53
விசேட இலக்கினம்: மேஷம்

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம்: 1075
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 85,606,875.20
ஆங்கில எழுத்து: L
வெற்றி இலக்கங்கள்: 10 26 61 72

**கொவிசெத** (Govisetha)
சீட்டிழுப்பு இலக்கம்: 3287
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 82,753,408.00
ஆங்கில எழுத்து: S
வெற்றி இலக்கங்கள்: 15 21 54 55

**ஜாதிக சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம்: 1500
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 10,073,484.80
வெற்றி இலக்கினம்: ரிஷபம்
வெற்றி இலக்கங்கள்: 7 9 0 8 1 8


## மீட்கப்படாத தங்க ஆபரணங்கள் மீதான ஏல விற்பனை

| கிளை | அடகு வைக்கப்பட்ட கால வரையறை | ஏலம் விடப்படும் இடம் மற்றும்திகதி |
|---|---|---|
| அனுராதபுரம், பொலன்னறுவை, தம்புத்தேகம,மதவாச்சி, அரலகங்வில, கலென்பிந்துனுவெவ, நொச்சியாகம, பதவி, பராக்கிரமபுர, கெக்கிராவ, தலாவ,வவுனியா, யாழ்ப்பாணம், நானாட்டான், கிளிநொச்சி, மன்னார் | 31.12.2021 | 23-03-2023 (வியாழக்கிழமை) SDB வங்கி இல234, கண்டி வீதி வவுனியா |
| திருகோணமலை, கல்முனை, மட்டக்களப்பு, அம்பாறை, மூதூர், பொத்துவில், கலவாஞ்சிக்கொடி, சம்மாந்துறை, உஹன, கந்தளே, அக்கரைப்பற்று, ஹிங்குரான | 31.12.2021 | 24.03.2023 (வெள்ளிக்கிழமை) SDB வங்கி, கிழக்கு பிராந்திய அலுவலகம், இலக்கம் 47, புகையிரத நிலைய குறுக்கு வீதி, மட்டக்களப்பு |
| மொனராகலை, பதுளை, சியம்பலாண்டுவ, புத்தல, பண்டாரவளை, இரத்தினபுரி, எம்பிலிபிட்டிய | 31.12.2021 | 27.03.2023 (திங்கட்கிழமை) SDB வங்கி, இலக்கம் 15, H K T கட்டிடம், பல்லேகம, எம்பிலிபிட்டிய |
| மாத்தளை, கண்டி, ரிகில்லகஸ்கட, தம்புள்ளை, கம்பளை, பிலிமத்தலாவ, ஹதரலியத்த, நுவரெலியா, கலேவெல, சிலாபம், குருநாகல், குளியாப்பிட்டிய, கிரியுல்ல, மாஹோ, வென்னப்புவ, ஆனமடுவ, வாரியபொல, நாரம்மல, கேகாலை, ருவன்வெல்ல, வரகாபொல, ரம்புக்கன, தெரணியகல | 31.12.2021 | 28.03.2023 (செவ்வாய்க்கிழமை) SDB வங்கி, இலக்கம்342, பிரதான வீதி, கேகாலை |
| 1வது கொழும்பு நகரம், பத்தரமுல்ல, ஹொரண, கிருலப்பனை, தெமட்டகொட, களுத்துறை, மத்துகம, மொரட்டுவ, கடுவெல, அளுத்கம, மஹரகம, மாலபே, தெஹிவளை, பிலியந்தலை, பாணதுறை, கிரிபத்கொட, நீர்கொழும்பு, கம்பஹா, மஹாபாகே,ஏகல, அக்குரஸ்ஸ, அம்பலாந்தோட்டை, அம்பலாங்கொட, மாத்தறை , காலி,தல்கஸ்வல, அங்குனகொலபெலஸ்ஸ, எல்பிட்டிய,யக்கலமுல்ல, கட்டுவன, திஸ்ஸமஹாராம | 31.12.2021 | 29.03.2023 (புதன்கிழமை) SDB வங்கி, மேற்கு 1 பிராந்திய அலுவலகம், இலக்கம் 210∴1யு, கடுவெல வீதி, பத்தரமுல்ல |

ஏலத்தில் விடும் நிகழ்வு மு.ப 10.30 மணிக்கு ஆரம்பமாகும்

(இந்நிகழ்வை இரத்து செய்வதற்கு, ஒத்தி வைப்பதற்கு அல்லது ஏலத்தில் விடும் நிகழ்வில் ஏதேனும் மாற்றங்கள் செய்வதற்கு மற்றும் ஏலம் இடம்பெறும் இடத்தில ஏதேனும் மாற்றங்களை முன்னறிவித்தல் இன்றி மேற்கொள்வதற்குரிய சகல உரிமையும் வங்கியையே சாறும்.)

முகாமையாளர் அடகு
இல 12 எட்மன்டன் வீதி
கிருலப்பனை, கொழும்பு 06 ,இலங்கை.
தொலைபேசி 011 5411 411 / 011 283 2500

SDB வங்கி

சனச அபிவிருத்தி வங்கி பி எல் சி,இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையினால் விஷேடமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
( Fitch Rating BB+ [lka] (Stable), ICRA Rating [SL] BBB (Stable), Reg. No: PB62PQ )



## எல் பீ பினான்ஸ் பி.எல்.சி பகிரங்க ஏலவிற்பனை

எல் பீ பினான்ஸ் பி.எல்.சி நிறுவனத்தில் வைத்து தங்கக் கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பின்வரும் இடங்களில் கீழ்க்காணும் திகதிகளில் காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| ஏலவிற்பனைத் திகதி | | முகவரி |
|---|---|---|
| 01/03/10/17 | ஏப்ரல் 2023 | இல. 755/1, பன்னிப்பிட்டிய வீதி, பத்தரமுல்ல. |
| 01/03/10/17 | ஏப்ரல் 2023 | இல. 91, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு 06. |
| 01/03/10/17 | ஏப்ரல் 2023 | இல. 92, ஸ்டான்லி திலகரட்ன மாவத்தை, நுகேகொடை. |
| 01/03/10/17 | ஏப்ரல் 2023 | இல. 434, ஈ.டபிள்யூ.பெரேரா மாவத்தை, கோட்டே வீதி, பிட்டகோட்டே. |
| 01/03/10/17 | ஏப்ரல் 2023 | இல. 595, ஹைலெவல் வீதி, கங்கொடவில, நுகேகொடை. |
| 01/03/10/17 | ஏப்ரல் 2023 | இல. 61/2, கண்டி வீதி, திஹாரிய. |
| 01/03/10/17 | ஏப்ரல் 2023 | இல. 594/3, கண்டி வீதி, நிட்டம்புவ. |
| 01/03/10/17 | ஏப்ரல் 2023 | இல. 19, பிரதான வீதி, கேகாலை. |
| 01/03/10/17 | ஏப்ரல் 2023 | இல. 1B, பௌத்தாலோக மாவத்தை, கம்பஹா. |
| 01/03/10/17 | ஏப்ரல் 2023 | இல. 81, கண்டி வீதி, வரகாபொல. |
| 01/03/10/17 | ஏப்ரல் 2023 | இல. 282, அநகாரிக தர்மபால மாவத்தை, மாத்தறை. |
| 01/03/10/17 | ஏப்ரல் 2023 | இல. 13, ஸ்டேசன் வீதி, மாத்தறை. |
| 01/03/10/17 | ஏப்ரல் 2023 | இல. 66, திஸ்ஸ வீதி, தங்காலை. |
| 01/03/10/17 | ஏப்ரல் 2023 | இல. 138 D/1, அம்பாந்தோட்டை வீதி, அம்பலாந்தோட்டை. |
| 01/03/10/17 | ஏப்ரல் 2023 | இல. 83, தெனியாய வீதி, அக்குரெஸ்ஸ. |
| 01/03/10/17 | ஏப்ரல் 2023 | இல. 2, எச்.வி.கட்டிடம், தெல்லாவ வீதி, நெலுவ. |
| 01/03/10/17 | ஏப்ரல் 2023 | இல. 149, பிரதான வீதி, தெனியாய. |
| 01/03/10/17 | ஏப்ரல் 2023 | இல. 65/A, ஸ்ரீ சத்தர்ம மாவத்தை, மாளிகாவத்தை, கொழும்பு 10. |
| 01/03/10/17 | ஏப்ரல் 2023 | இல. 282, நாகலாகம் வீதி, கொழும்பு 14. |
| 01/03/10/17 | ஏப்ரல் 2023 | இல. 52/17, கொதட்டுவ புதிய நகரம், கொதட்டுவ. |
| 01/03/10/17 | ஏப்ரல் 2023 | இல. 21, புனித ஜோசப் வீதி, கொழும்பு 14. |
| 01/03/10/17 | ஏப்ரல் 2023 | இல. 371/1, டாம் வீதி, கொழும்பு 12. |
| 01/03/10/17 | ஏப்ரல் 2023 | இல. 551, தெமட்டகொட வீதி, கொழும்பு 09. |
| 01/03/10/17 | ஏப்ரல் 2023 | இல. 149, கே பி கிறிஸ்டி பெரேரா மாவத்தை, கொழும்பு 13. |
| 01/03/10/17 | ஏப்ரல் 2023 | இல. 197, செட்டியார் தெரு, கொழும்பு 11. |
| 01/03/10/17 | ஏப்ரல் 2023 | இல. 256, புதிய நகரம், தம்புத்தேகம. |
| 01/03/10/17 | ஏப்ரல் 2023 | ரஜரட்ட கட்டிடம், பிரதான வீதி, கதுருவெல, பொலன்நறுவை. |
| 01/03/10/17 | ஏப்ரல் 2023 | இல. 137, பிரதான வீதி, அனுராதபுரம். |
| 01/03/10/17 | ஏப்ரல் 2023 | இல. 514/A, புதிய நகரம், அனுராதபுரம். |
| 01/03/10/17 | ஏப்ரல் 2023 | இல. 219, புத்தளம் வீதி, நொச்சியாகம. |
| 01/03/10/17 | ஏப்ரல் 2023 | இல. 26, கண்டி வீதி, மதவாச்சி. |
| 01/03/10/17 | ஏப்ரல் 2023 | இல. 38, குருநாகல் சந்தி, தம்புளை. |
| 01/03/10/17 | ஏப்ரல் 2023 | பிரதான வீதி, மெதிரிகிரிய. |
| 01/03/10/17 | ஏப்ரல் 2023 | இல. 15, தலாவ வீதி, கெக்கிராவ. |
| 01/03/10/17 | ஏப்ரல் 2023 | இல. 24, சிலாபம் வீதி, ஆனமடுவ. |
| 01/03/10/17 | ஏப்ரல் 2023 | இல. 96, அகலவத்த வீதி, மத்துகம. |
| 01/03/10/17 | ஏப்ரல் 2023 | இல. 87, பிரதான வீதி, பிட்டிகல. |
| 01/03/10/17 | ஏப்ரல் 2023 | இல. 14, பிரதான வீதி, எல்பிட்டிய. |
| 01/03/10/17 | ஏப்ரல் 2023 | இல. 48, இரத்தினபுரி வீதி, பதுரலிய. |
| 04/11/18/24 | ஏப்ரல் 2023 | இல. 134, பிரதான வீதி, வென்னப்புவ. |
| 04/11/18/24 | ஏப்ரல் 2023 | இல. 106C, குருநாகல் வீதி, புத்தளம். |
| 04/11/18/24 | ஏப்ரல் 2023 | இல. 84, பிரதான வீதி கல்பிட்டிய. |
| 04/11/18/24 | ஏப்ரல் 2023 | இல. 356, பிரதான வீதி, நீர்கொழும்பு. |
| 04/11/18/24 | ஏப்ரல் 2023 | இல. 40A, கொழும்பு வீதி, சிலாபம். |
| 04/11/18/24 | ஏப்ரல் 2023 | இல. 110, சிலாபம் வீதி, கொச்சிகடை. |
| 04/11/18/24 | ஏப்ரல் 2023 | இல. 57, வெயாங்கொட வீதி, மினுவாங்கொட. |
| 04/11/18/24 | ஏப்ரல் 2023 | இல. 229/1, கடவத்த வீதி, கனேமுல்ல. |
| 04/11/18/24 | ஏப்ரல் 2023 | இல. 69, கிரஉல்ல வீதி, திவுலபிட்டிய. |
| 04/11/18/24 | ஏப்ரல் 2023 | இல. 107, சென் ஜோசப் வீதி, நீர்கொழும்பு. |
| 04/11/18/24 | ஏப்ரல் 2023 | இல. 75A, சிலாபம் வீதி, மாரவில. |
| 04/11/18/24 | ஏப்ரல் 2023 | இல. 434, பேஸ்லைன வீதி, அவரிவத்த, கட்டுநாயக்க. |
| 04/11/18/24 | ஏப்ரல் 2023 | இல. 661/A, தேவத்த வீதி, ராகம. |
| 04/11/18/24 | ஏப்ரல் 2023 | இல. 6/1/1, பழைய நீர்கொழும்பு வீதி, ஜா-எல. |
| 04/11/18/24 | ஏப்ரல் 2023 | இல. 39, கொழும்பு வீதி, கந்தானை. |
| 04/11/18/24 | ஏப்ரல் 2023 | இல. 18, எலகந்த, ஹெந்தல, வத்தளை. |
| 04/11/18/24 | ஏப்ரல் 2023 | இல. 17, ஸ்டேசன் வீதி, ஹெந்தல சந்தி, வத்தளை. |
| 04/11/18/24 | ஏப்ரல் 2023 | இல. 350/16, கொழும்பு வீதி, தெல்கொட. |
| 04/11/18/24 | ஏப்ரல் 2023 | இல. 484, அவிசாவளை வீதி, கடுவளை |
| 04/11/18/24 | ஏப்ரல் 2023 | இல. 722, வராகொட வீதி, விஹாரை சந்தி, களனி. |
| 04/11/18/24 | ஏப்ரல் 2023 | இல. 44, மாகொல வீதி, கிரிபத்கொட. |
| 04/11/18/24 | ஏப்ரல் 2023 | இல. 175, கண்டி வீதி, கிரிபத்கொட. |
| 04/11/18/24 | ஏப்ரல் 2023 | இல. 136/12H, கண்டி வீதி, கடவத்தை. |
| 04/11/18/24 | ஏப்ரல் 2023 | இல. 145, மலே வீதி, கொழும்பு 02. |
| 04/11/18/24 | ஏப்ரல் 2023 | இல. 66, காலி வீதி, கல்கிசை. |
| 04/11/18/24 | ஏப்ரல் 2023 | இல. 11, கல்தெமுல்ல வீதி, மொரட்டுவ. |
| 04/11/18/24 | ஏப்ரல் 2023 | இல. 20, தர்மபால மாவத்தை, கொழும்பு 03. |
| 04/11/18/24 | ஏப்ரல் 2023 | இல. 245, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10. |
| 04/11/18/24 | ஏப்ரல் 2023 | இல. 54, டி.எஸ்.சேனாநாயக்க மாவத்தை, பொரளை. |
| 04/11/18/24 | ஏப்ரல் 2023 | இல. 197, டீன்ஸ் வீதி, கொழும்பு 10. |
| 04/11/18/24 | ஏப்ரல் 2023 | இல. 556, 558, மருதானை வீதி, கொழும்பு 10. |
| 04/11/18/24 | ஏப்ரல் 2023 | இல. 239, கிருல வீதி, நாரஹேன்பிட்டி. |
| 04/11/18/24 | ஏப்ரல் 2023 | இல. 129, பழைய காலி வீதி, மொரட்டுவ. |
| 04/11/18/24 | ஏப்ரல் 2023 | இல. 68, ஹொரண வீதி, பிலியந்தலை. |
| 04/11/18/24 | ஏப்ரல் 2023 | இல. 28, தெஹிவளை வீதி, பொரலஸ்கமுவ. |
| 04/11/18/24 | ஏப்ரல் 2023 | இல. 227, டி சொய்ஸா வீதி, மொரட்டுமுல்ல, மொரட்டுவ. |
| 06/12/19/25 | ஏப்ரல் 2023 | இல. 118A, கொழும்பு வீதி, குருநாகல். |
| 06/12/19/25 | ஏப்ரல் 2023 | இல. 103A, கொழும்பு வீதி, குருநாகல். |
| 06/12/19/25 | ஏப்ரல் 2023 | இல. 21, தம்புளை வீதி, குருநாகல். |
| 06/12/19/25 | ஏப்ரல் 2023 | இல. 12, பிரதான வீதி, குளியாப்பிட்டி. |
| 06/12/19/25 | ஏப்ரல் 2023 | இல. 31, குருநாகல் வீதி, கலேவெல. |
| 06/12/19/25 | ஏப்ரல் 2023 | இல. 35, சரசவி கட்டிடம், பிரதான வீதி, நாரம்மல. |
| 06/12/19/25 | ஏப்ரல் 2023 | இல. 835/2A, தலங்கம வடக்கு, மாலபே. |
| 06/12/19/25 | ஏப்ரல் 2023 | இல. 365, ஹைலெவல் வீதி, கொட்டாவ. |
| 06/12/19/25 | ஏப்ரல் 2023 | இல. 76, ஹைலெவல் வீதி, ஹோமகம. |
| 06/12/19/25 | ஏப்ரல் 2023 | இல. 419, கோட்டே வீதி, ராஜகிரிய |
| 06/12/19/25 | ஏப்ரல் 2023 | இல. 69, தெஹிவளை வீதி, மஹரகம. |
| 06/12/19/25 | ஏப்ரல் 2023 | இல. 227/A, ஹைலெவல் வீதி, வத்தேகெதர, மஹரகம |
| 06/12/19/25 | ஏப்ரல் 2023 | இல. 124/A, துட்டுகெமுனு வீதி, கொஹுவல. |
| 06/12/19/25 | ஏப்ரல் 2023 | இல. 165, தர்மபால மாவத்தை, கொழும்பு 07. |
| 06/12/19/25 | ஏப்ரல் 2023 | இல. 50/12, கொடகம வீதி, அத்துருகிரிய. |
| 06/12/19/25 | ஏப்ரல் 2023 | இல. 04, பாணந்துறை வீதி, பண்டாரகம. |
| 06/12/19/25 | ஏப்ரல் 2023 | இல. 18, கெசெல்வத்த, பாணந்துறை. |
| 06/12/19/25 | ஏப்ரல் 2023 | இல. 508, காலி வீதி, பாணந்துறை. |
| 06/12/19/25 | ஏப்ரல் 2023 | இல. 103, பாணந்துறை வீதி, ஹொரண. |
| 06/12/19/25 | ஏப்ரல் 2023 | இல. 534, காலி வீதி, வாத்துவ. |
| 06/12/19/25 | ஏப்ரல் 2023 | இல. 334, பிரதான வீதி, களுத்துறை தெற்கு. |
| 06/12/19/25 | ஏப்ரல் 2023 | இல. 358/D, மத்துகம வீதி, தர்கா நகர். |
| 06/12/19/25 | ஏப்ரல் 2023 | இல. 175/A, காலி வீதி, பேருவளை. |
| 06/12/19/25 | ஏப்ரல் 2023 | இல. 358, காலி வீதி, அளுத்கம. |
| 06/12/19/25 | ஏப்ரல் 2023 | இல. 84A, காலி வீதி, தெஹிவளை. |
| 06/12/19/25 | ஏப்ரல் 2023 | இல. 124, காலி வீதி, தெஹிவளை. |
| 06/12/19/25 | ஏப்ரல் 2023 | இல. 224, காலி வீதி, வெள்ளவத்தை. |
| 06/12/19/25 | ஏப்ரல் 2023 | இல. 269, பிரதான வீதி, அத்திடிய. |
| 06/12/19/25 | ஏப்ரல் 2023 | இல. 275/75, பேராசிரியர். ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07. |
| 06/12/19/25 | ஏப்ரல் 2023 | இல. 676, காலி வீதி, கொழும்பு 03. |
| 06/12/19/25 | ஏப்ரல் 2023 | இல. 51A, டபிள்யூ.ஏ.சில்வா மாவத்த, கொழும்பு - 06 |
| 06/12/19/25 | ஏப்ரல் 2023 | இல. 150, பிரதான வீதி, காலி. |
| 06/12/19/25 | ஏப்ரல் 2023 | இல. 96/2, காலி வீதி, அம்பலாங்கொட. |
| 06/12/19/25 | ஏப்ரல் 2023 | இல. 598 E, ஹிரிம்புர வீதி, கராபிட்டிய. |
| 08/15/20/26 | ஏப்ரல் 2023 | இல. 56, 57, எட்வின் விக்ரமரட்ன சொப்பிங் கம்பிளெக்ஸ், புதிய நகரம், |
| 08/15/20/26 | ஏப்ரல் 2023 | மஹியங்கனை. |
| 08/15/20/26 | ஏப்ரல் 2023 | இல. 44/1, புதிய பேருந்து தரிப்பிட வீதி, மொனராகலை. |
| 08/15/20/26 | ஏப்ரல் 2023 | இல.10/2, இலங்கை வங்கிக்கு எதிரே, புதிய நகரம், தெஹியத்தகண்டிய. |
| 08/15/20/26 | ஏப்ரல் 2023 | இல. 226, டி எஸ் சேனநாயக்க வீதி, கண்டி |
| 08/15/20/26 | ஏப்ரல் 2023 | இல. 14, புதிய நகரம், திகன |
| 08/15/20/26 | ஏப்ரல் 2023 | இல. 153, மடவல வீதி, கட்டுகஸ்தோட்டை. |
| 08/15/20/26 | ஏப்ரல் 2023 | இல. 251, பிரதான வீதி, மாத்தளை. |
| 08/15/20/26 | ஏப்ரல் 2023 | இல. 55, லோவர் வீதி, பதுளை. |
| 08/15/20/26 | ஏப்ரல் 2023 | இல. 167, பிரதான வீதி, பண்டாரவளை. |
| 08/15/20/26 | ஏப்ரல் 2023 | இல. 3, நுவரெலியா வீதி, வெலிமடை. |
| 08/15/20/26 | ஏப்ரல் 2023 | இல. 26, வங்கி வீதி, பதுளை. |
| 08/15/20/26 | ஏப்ரல் 2023 | இல. 71, ராணி எலிசபெத் மாவத்தை, நுவரெலியா. |
| 08/15/20/26 | ஏப்ரல் 2023 | இல. 473, நுவரெலியா வீதி, புஸ்ஸல்லாவ |
| 08/15/20/26 | ஏப்ரல் 2023 | இல. 22, நுவரெலியா வீதி, கம்பளை. |
| 08/15/20/26 | ஏப்ரல் 2023 | இல. 115, கொட்டுகொடெல்ல வீதி, கண்டி. |
| 08/15/20/26 | ஏப்ரல் 2023 | இல. 13A, கண்டி வீதி, கெலிஓயா. |
| 08/15/20/26 | ஏப்ரல் 2023 | இல. 52, தன்பார் வீதி, ஹட்டன். |
| 08/15/20/26 | ஏப்ரல் 2023 | இல. 175, பிரதான வீதி, மஸ்கெலியா. |
| 08/15/20/26 | ஏப்ரல் 2023 | இல. 66, நாவலபிட்டிய வீதி, கம்பளை. |
| 08/15/20/26 | ஏப்ரல் 2023 | இல. 298, கொழும்பு வீதி, பிலிமத்தலாவ. |
| 08/15/20/26 | ஏப்ரல் 2023 | இல. 73, கொத்மலை வீதி, நாவலபிட்டி. |
| 08/15/20/26 | ஏப்ரல் 2023 | இல. 230, கண்டி வீத, மாவனல்ல. |
| 08/15/20/26 | ஏப்ரல் 2023 | இல. 530, அளுத் மாவத்தை சாலை, கொழும்பு 15. |
| 08/15/20/26 | ஏப்ரல் 2023 | இல. 81, மோதர வீதி, கொழும்பு 15. |
| 08/15/20/26 | ஏப்ரல் 2023 | இல. 03, சென் லூசியாஸ் வீதி, கொட்டாஞ்சேனை. |
| 08/15/20/26 | ஏப்ரல் 2023 | இல. 3/729, பாம் வீதி, கொழும்பு 15. |
| 08/15/20/26 | ஏப்ரல் 2023 | இல. 47, கிராண்ட்பாஸ் வீதி, கொழும்பு 14. |
| 08/15/20/26 | ஏப்ரல் 2023 | இல. 04, மணிக்கூட்டு கோபுரம் எதிரே, அம்பாறை |
| 08/15/20/26 | ஏப்ரல் 2023 | MPCS கட்டிடம், பிரதான வீதி, சாய்ந்தமருது - 09. |
| 08/15/20/26 | ஏப்ரல் 2023 | பிரதான வீதி, மட்டக்களப்பு வீதி, கல்முனை. |
| 08/15/20/26 | ஏப்ரல் 2023 | இல. 25, ஹிஜ்ரா சந்தி, கல்முனை வீதி, சம்மாந்துறை. |
| 08/15/20/26 | ஏப்ரல் 2023 | இல. 28, சாகம வீதி, அக்கரைப்பற்று - 08 |
| 08/15/20/26 | ஏப்ரல் 2023 | பிரதான வீதி, பொத்துவில். |
| 08/15/20/26 | ஏப்ரல் 2023 | இல. CC/44, பிரதான வீதி, மத்திய முகாம் 03, அம்பாறை. |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | இல. 24/A, பிரதான வீதி, ஹங்வெல்ல. |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | இல. 25, யட்டியாந்தோட்ட வீதி, அவிசாவளை |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | இல. 141/A, கொலன்னாவ வீதி, கொலன்னாவ. |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | இல. 25A, பிரதான வீதி, எஹெலியகொட. |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | இல. 49, சேனாநாயக்க மாவத்தை, இரத்தினபுரி. |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | இல. 34, பிரதான வீதி, திஸ்ஸமஹாராமய |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | இல. 21, புதிய நகர வீதி, எம்பிலிபிட்டிய. |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | இல. 19, தனயம் பிவிசும் மாவத்தை, பலாங்கொட. |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | இல. 275, சென்ரல் வீதி, திருகோணமலை. |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | இல. 252B, மற்றும் 252/1, கண்டி வீதி திருகோணமலை. |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | இல. 175, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு. |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | இல. 71/A, பிரதான வீதி, ஆரையம்பதி. |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | இல. 50/2, பிரதான வீதி, கிண்ணியா. |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | பிரதான வீதி, 10 ஆம் பிரிவு, கொக்கட்டிச்சோலை |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | சந்தைக்கு எதிரே, பிரதான வீதி, வாழைச்சேனை |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | பிரதான வீதி கிரண். |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | பாடசாலைக்கு எதிரே, வைத்தியசாலை வீதி, களுவாஞ்சிக்குடி. |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | சந்தைத் தொகுதிக்கு எதிரே, பிரதான வீதி, செங்கலடி |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | பிரதான வீதி, அட்டாளைச்சேனை |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | பிரதான வீதி, திருக்கோவில் - 01 |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | இல. 151,153, புன்னக்குடா வீதி, ஏறாவூர் 3, ஏறாவூர். |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | திருகோணமலை வீதி கண்டலடி, வாகரை. |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | இல. 114, பிரதான வீதி, கந்தளாய். |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | இல. E 20/3/3, திருகோணமலை வீதி, சேருநுவர. |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | பிரதான வீதி வவுணதீவு |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | இல. 69, பிரதான வீதி, அச்சுவேலி. |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | இல. 136, கண்டி வீதி, சாவகச்சேரி. |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | இல. 440, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | இல. 111, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | இல. 406, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | இல. 10, பருத்தித்துறை வீதி, நெல்லியடி. |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | இல. 187, பிரதான வீதி, மன்னார். |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | இல. 497, கண்டி வீதி, கிளிநொச்சி. |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | இல. 32B, 2ஆம் குறுக்குத் தெரு, வவுனியா. |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | 1ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு. |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | P.W வீதி, முல்லைத்தீவு. |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | இல. 55, கே கே எஸ் வீதி, சுன்னாகம். |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | இல. 171, யாழ்ப்பாணம் வீதி, மானிப்பாய். |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | இல. 95, பலாலி வீதி, திருநெல்வேலி |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | பிரதான வீதி, மல்லாவி |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | இல. 266, தெல்லிப்பளை வீதி, வட்டு தென்மேற்கு, வட்டுக்கோட்டை |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | இல 3, 5 வல்லை வீதி சங்கானை. |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | இல 126, 128 பிரதான வீதி, பருத்தித்துறை. |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | இல 06, பருத்தித்துறை வீதி, கோப்பாய். |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | கண்டி வீதி, கொடிகாமம். |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | 575, K.K.S வீதி, தெல்லிப்பளை கிழக்கு, தெல்லிப்பளை |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | எண்.12, வார்டு எண்.06, பிரதான வீதி, பேசாலை, மன்னார் |

எந்தவொரு முன்னறிவித்தலுமின்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளிப் போடவோ எல்பீ பினான்ஸ் பீஎல்சி நிறுவனத்துக்கு உரிமம் உள்ளது.

LB FINANCE
உதவி பொது முகாமையாளர் - தங்கக் கடன் பிரிவு
275Æ75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

# கிழக்கின் குரல்



## காத்தான்குடியில் கடந்த 2 மாதங்களில் 29 டெங்கு நோயாளர்கள் அடையாளம்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்



மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி சுகாதார அலுவலகப் பிரிவில் கடந்த இரண்டு மாதங்களில் 29 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக, அப்பிரிவு சுகாதார வைத்திய அதிகாரி, வைத்தியர் யு.எல்.நசிர்தீன் தெரிவித்தார்.

காத்தான்குடி பிரதேச செயலகத்தில் அப்பிரதேச செயலாளர் யு.உதயசிறிதர் தலைமையில் நேற்று புதன்கிழமை (01) நடைபெற்ற பிரதேச மட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் போதே, அவர் இதனைக் கூறினார்.

கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி வரையான காலப்பகுதியிலேயே இவர்கள் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், புதிய காத்தான்குடி கிழக்கு 167 பி கிராம உத்தியோகத்தர் பிரிவிலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், தெரிவித்தார். இந்நிலையில், காத்தான்குடியில் மிகவும் மும்முரமாக டெங்கு ஒழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், மேலும் இரு வாரங்களுக்கு டெங்கு ஒழிப்பு நடவடிக்கை தொடரும். இந்த நடவடிக்கைக்காக பிரதேச செயலாளரினதும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களினதும் அதிகூடிய ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும், அவர் தெரிவித்தார்.

காத்தான்குடி பிரதேச செயலாளர் யு.உதயசிறிதர் தலைமையில் அப்பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்காக வழங்கி வரும் ஒத்துழைப்புக்கு காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி நன்றி தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் காத்தான்குடி பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளர் எம்.எஸ். சில்மியா உட்பட நிர்வாக உத்தியோகத்தர்கள், சமுர்த்தி முகாமையாளர்கள், திணைக்களங்களின் அதிகாரிகள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

அக்கரைப்பற்று நீதிமன்ற தீ வைப்பு விவகாரம்

## 3 சந்தேக நபர்களுக்கு மீண்டும் விளக்கமறியல்

ஒலுவில் விசேட நிருபர்

அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்ற ஆவணக் காப்பகத்தை தீயிட்டு எரித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 3 சந்தேக நபர்களுக்கும் மீண்டும் விளக்கமறியல் வழங்கப்பட்டுள்ளது.

இவர்களை எதிர்வரும் 14ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு, அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவான் தெசீபா ரஜீவன் நேற்று முன்தினம் (28) உத்தரவிட்டுள்ளார்.

கடந்த டிசெம்பர் 21ஆம் திகதி அதிகாலையில் நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்கு வைக்கப்பட்ட தீயினால், நீதிமன்றத்தின் வழக்குப் பதிவேட்டு அறை மற்றும் திறந்த நீதிமன்றம் உள்ளிட்ட பல பிரிவுகளிலுமுள்ள ஆவணக் கோப்புகள் முற்றாக எரிந்துள்ளன.

இது தொடர்பாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் போது, நீதிமன்றத்துக்கு அருகிலுள்ள வீடுகளில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு சி.சி.ரி.வி. கெமராப் பதிவுகளில் 3 பேர் முகத்தை மூடியவாறு நீதிமன்ற வளாகத்தில் உள்நுழைந்து கட்டடத்துக்கு தீ வைத்து விட்டு தப்பியோடும் காட்சி பதிவாகியிருந்தது.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொள்வதற்கு விசேட பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டு, விசாரணை மேற்கொண்டு வந்த நிலையில், சந்தேகத்தின் பேரில் அக்கரைப்பற்று கோளாவில் பிரதேசத்தைச் சேர்ந்த 28, 24, 19 வயதுடைய இச்சந்தேக நபர்கள் மூவரும் கல்முனை, பெரியநீலாவணை பிரதேசத்தில் மறைந்திருந்த வேளையில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு வருகின்றனர்.

இதேவேளை, இச்சந்தேக நபர்களின் தொலைபேசி உரையாடல் விபரம், வங்கிக் கணக்கறிக்கை விபரம் ஆகியவற்றை நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## மருதமுனையில் 'ஆயத்' நூல் வெளியீட்டு நிகழ்வு

மருதமுனை தினகரன் நிருபர்

கவிஞரான மருதமுனை ஜமீல் எழுதிய 'ஆயத்' கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு மருதமுனை மருதூர்க்கனி நூலகத்தின் மர்ஹூம் மருதூர் பாரி நினைவரங்கில் நடைபெறவுள்ளது.

மருதமுனை புதுப்புனைவு பதிப்பகத்தின் ஏற்பாட்டிலும் உதவிக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி சத்தார் எம்.பிர்தௌஸ் தலைமையிலும் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், முன்னிலை அதிதியாக எழுத்தாளர் எம்.எம்.நௌஸாத் கலந்துகொள்ளவுள்ளார்.

ஓய்வுநிலை ஆசிரியர் ஆபூபக்கர் நஜீம் ரூபவ், எழுத்தாளர் ஜமால்தீன் நௌபாஸ் ஆகியோர் சிறப்புப் பிரதிகளைப் பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

நூல் அறிமுகத்தை கவிஞர் ஏ.எம். குர்ஷத் ரூபவ், நூல் மீதான வியாக்கியானத்தை பேராசிரியர் எஸ்.எம்.ஐயூப் ரூபவ், கவிஞர் சிறாஜ் மஷ்ஹூர் ரூபவ், கவிஞர் லலித கோபன் ரூபவ், கவிஞர் சித்தி றபீக்கா ரூபவ், வாசகர் தபீப் இஸ்மா ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

நிகழ்ச்சித் தொகுப்பை கவிஞர் எம்.எம்.விஜிலி நடத்தவுள்ளதாக, ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வில் அனைவரையும் அன்புடன் கலந்து கொள்ளுமாறு, மருதமுனை புதுப்புனைவு பதிப்பகம் அன்புடன் அழைக்கின்றது.

## அஷ்ரப் நகரில் வைத்தியசாலை அமைக்க முஷாரப் எம்.பி. ஏற்பாடு

ஒலுவில் விசேட நிருபர்



ஒலுவில், அஷ்ரப் நகரில் பிரதேச வைத்தியசாலை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென, பாராளுமன்ற உறுப்பினர், சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் தெரிவித்தார்.

அஷ்ரப் நகருக்கு கடந்த திங்கட்கிழமை (27) விஜயம் செய்த முஷாரப் எம்.பி., மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்தார். இதன்போது, மக்கள் முன்வைத்த கோரிக்கைக்கமைய பிரதேச வைத்தியசாலையை நிறுவுவதற்கு சுகாதார அமைச்சருடன் கலந்துரையாடி மிக விரைவில் வைத்தியசாலை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

இதேவேளை, அஷ்ரப் நகரில் காட்டு யானைகளின் தொல்லையைக் கட்டுப்படுத்துவதற்காக யானை வேலி அமைப்பதற்கும் மையவாடிக்கான நிலம் இல்லாமையினால், அதற்கான நிலத்தை ஒதுக்குவதற்கும் நடவடிக்கை எடுப்பதாகவும், அவர் தெரிவித்தார்.

அஷ்ரப் நகர் அக்ஸா பாடசாலைக்கு சுற்றுமதில் அமைப்பதற்கான நிதியை தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

## சென்னல் கிராமத்தில் நீர் நிரம்பிய குட்டையை மூடுவதற்கு நடவடிக்கை

சவளக்கடை குறூப் நிருபர்



அம்பாறை மாவட்டத்தின் சென்னல் கிராமத்தின் அரபா பள்ளிவாசல் பகுதியில் கல்குவாரியினால் உருவாகிய குட்டையை மூடுவதற்கான நடவடிக்கையை அதிகாரிகள் முன்னெடுத்து வருகின்றனர்.

நீர் நிரம்பிக் காணப்படும் இந்தக் குட்டையில் குளிப்பதற்காக அதே கிராமத்தைச் சேர்ந்த 12 வயதுடைய சிறுவன் ஒருவன் குதித்து உயிரிழந்த சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை (26) இடம்பெற்றுள்ளது.

இந்தக் கிராமத்தில் இதே சம்பவம் இனிமேலும் இடம்பெறக்கூடாது என்பதற்காக, இந்தக் குட்டையை மூடுவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், குட்டையையும் கடந்த திங்கட்கிழமை (27) சென்று அவர்கள் பார்வையிட்டுள்ளனர்.

சம்மாந்துறை பிரதேச சபைத் தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிரின் தலைமையில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா, சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி, வைத்தியர் எம்.எம். கபீர், சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட், பிரதேச சபை உறுப்பினர்களான பீ.எம்.றியாழ், எஸ்.நளீம், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஏ.சி.எம். சஹீல், மேற்பார்வை சுகாதார பரிசோதகர் ஐ.எல்.றாசீக், கிராம சேவை உத்தியோகத்தர் உள்ளிட்டோரைக் கொண்ட குழுவினரே இந்தக் குட்டையைப் பார்வையிட்டுள்ளனர்.

இது தொடர்பாக அந்தக் கிராம மக்களிடம் விசாரித்ததுடன், சுற்றுப்புறச் சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இந்தக் குட்டையை மூடித் தந்தால், தமக்கு பாதுகாப்பாக அமையுமென்று இந்தக் குழுவினரிடம் பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதை மூடுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு சம்மந்தப்பட்ட அதிகாரிகளுடன் உடனடியாகக் கலந்துரையாடுவதற்கு ஏற்பாடு செய்யுமாறு பிரதேச சபைச் செயலாளருக்கு தவிசாளர் பணிப்புரை வழங்கியுள்ளார்.

## இவ்வருட மழையினால் குளங்களில் நீர்மட்டம் உயர்வு

புளியந்தீவு குறூப் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பாரிய நீர்ப்பாசனக் குளங்கள், இவ்வருடம் பெய்த மழையினால் நிரம்பி வழிவதாக, அம்மாவட்ட நீர்ப்பாசனப் பணிப்பாளர் எஸ்.ராஜகோபாலசிங்கம் நேற்று (01) தெரிவித்தார்.

நெற்செய்கைக்குப் பெயர் போன இம்மாவட்டத்தில், வழமையாக சிறுபோகத்திலும் பெரும்போகத்திலும் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் நெற்காணிகளில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.

இந்நிலையில், அனைத்துக் குளங்களும் நிரம்பி வழிவதால், நீர்ப்பாசனம் வழங்குவதில் இடர்பாடு ஏற்படாதெனவும், அவர் தெரிவித்தார்.

## தரம்–5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மூவருக்கு சைக்கிள்கள்

காரைதீவு குறூப் நிருபர்



அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறைக் கல்வி வலயத்திலுள்ள மல்வத்தை கணபதிபுரம் விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் இம்முறை புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மூன்று மாணவர்களுக்கு சைக்கிள்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (28) வழங்கி வைக்கப்பட்டன.

அப்பாடசாலை அதிபர் எஸ்.கிருபைராஜாவின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் உமர் மௌலானா பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

இந்த சைக்கிள்களை அசிஸ்ட் ஆர்.ஆர். அமைப்பின் பிரதிநிதிகளான பொறியியலாளர் ஹென்றி அமல்ராஜ், கலாநிதி வி.சர்வேஸ்வரன் அன்பளிப்புச் செய்தனர்.

இதேவேளை, புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மேலும் 9 மாணவர்களுக்கு சைக்கிள்களை வழங்கவுள்ளதாக, அசிஸ்ட் ஆர். ஆர். அமைப்பின் பிரதிநிதி வி.சர்வேஸ்வரன் தெரிவித்தார்.

## சம்மாந்துறை பிரதேசத்தில் வாசிப்பு மாத பரிசளிப்பு விழா



சவளக்கடை குறூப் நிருபர்

சம்மாந்துறை பிரதேச சபையின் கீழுள்ள நூலகங்கள் இணைந்து ஏற்பாடு செய்த 'அறிவார்ந்த சமூகத்துக்கான வாசிப்பு' எனும் தொனிப்பொருளின்கீழ் தேசிய வாசிப்பு மாதத்தின் பரிசளிப்பு விழா அண்மையில் பிரதேச சபையில் நடைபெற்றது.

இதன்போது, வாசிப்பு மாதத்தையிட்டு பாடசாலை மாணவர்கள் மற்றும் வாசகர்களுக்கிடையில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

சம்மாந்துறை பிரதேச சபைச் செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அப்பிரதேச சபைத் தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

## ஓட்டமாவடியில் 121 பேருக்கு பல்வேறு உதவித்திட்டங்கள்



கல்குடா தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓட்டமாவடிப் பிரதேசத்தைச் சேர்ந்த 100 பயனாளிகளுக்கு 20 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்களும் 15 பேருக்கு 15 ஆயிரம் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்களும் 6 பேருக்கு ஊன்றுகோல்களும் நேற்று (01) வழங்கி வைக்கப்பட்டன.

ஓட்டமாவடிப் பிரதேச செயலாளர் பிரிவில் முதியோர் மற்றும் விசேட தேவையுடையவர்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றும் வகையில் அப்பிரதேச செயலாளர் வி.தவராஜாவின் வழிகாட்டலின் கீழ் தொடர்ச்சியாக பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதன் அடிப்படையில் முதியோர்களுக்கும் விசேட தேவையடையவர்களுக்கும் 39 இலட்சம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள், சுகாதாரப் பொருட்கள் என்பன Help Age Sri Lanka எனும் நிறுவனத்தின் அனுசரணையுடன் ஓட்டமாவடிப் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன.

## கமக்காரர்களுக்கு மரக்கறிக் கன்றுகள்

மூதூர் தினகரன் நிருபர்

மூதூர் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட ஜின்னா நகர், ஆலிம்சேனை கிராமங்களில் கமக்காரர்களுக்கு முஸ்லிம் எயிட் நிறுவனத்தினால், பல்லின மரக்கறிக் கன்றுகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

இம்மரக்கறிக் கன்றுகள் நடுகையில் கமக்காரர்கள் ஈடுபட்டுள்ளதுடன், கமக்காரர்கள் இதற்காக சேதனப்பசளையும் தயாரித்து வருகின்றனர்.

அத்துடன், இம்மரக்கறிச் செய்கைக்குத் தேவையான வழிகாட்டுதலை முஸ்லிம் எயிட் நிறுவனம் வழங்கி வருகின்றது.



கல்முனை கல்வி வலயத்துக்குட்பட்ட கல்முனை அல் அஸ்ஹர் வித்தியாலயத்தில் மாணவத் தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு, அப்பாடசாலை அதிபர் அலி அக்பர் தலைமையில் அப்பாடசாலையில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது, அஹமட் ஹம்தி ஜெஸ்மின், மாணவத் தலைவர்களுக்கான சின்னத்தை பெற்றுக்கொண்டார்.

## நீர் நிரம்பிய குழியில் விழுந்து இளைஞர் பலி

மட்டக்களப்பு சுழற்சி, மண்டூர் தினகரன் நிருபர்கள்

கொக்கட்டிச்சோலையின் வில்லுக்குளம் பகுதியில் நீர் நிரம்பிய குழியில் விழுந்து இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் (28) இரவு உயிரிழந்துள்ளார்.

கல்முனை, இராமகிருஷ்ண மிஷன் பாடசாலை வீதியைச் சேர்ந்த 18 வயதுடைய ரீ.கவிசாந்த் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இளைஞர்கள் இருவர் பயணித்த மோட்டார் சைக்கிள், குழியில் விழுந்த நிலையில், அம்மோட்டார் சைக்கிளின் பின்புற ஆசனத்தில் பயணித்த இளைஞர் நீரில் மூழ்கியுள்ளார்.

இவரை மகிழடித்தீவு ஆதார வைத்தியசாலையில் அனுமதித்த போதும், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

## ஹெரோயினுடன் கைதான ஒருவருக்கு விளக்கமறியல்

பாலமுனை தினகரன் நிருபர்

அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்ட ஒருவரை எதிர்வரும் 14ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு, அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரான்ஸ்போர் வீதியில் ஹெரோயினுடன் இவர் கைது செய்யப்பட்டதுடன், அவரிடமிருந்து 20 மில்லிகிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டது. இந்நிலையில், இவரை நீதிமன்றத்தில் நேற்று புதன்கிழமை (01) முன்னிலைப்படுத்திய போதே, இந்த விளக்கமறியல் உத்தரவு அவருக்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது.




## துணுக்காய் கல்வி வலய

# பாடசாலைகளுக்கு முறையான போக்குவரத்து வசதிகளின்மையால் ஆசிரியர்கள், மாணவர்கள் சிரமம்

பரந்தன் குறூப் நிருபர்



முல்லைத்தீவு மாவட்ட துணுக்காய் கல்வி வலய பாடசாலைகளுக்கான போக்குவரத்து வசதிகள் இன்மையால் ஆசிரியர்கள், மாணவர்கள் அன்றாடம் பெரும் நெருக்கடியை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்விவலயத்தின் கீழ் உள்ள 61 பாடசாலைகளில் 8000 ற்கும் அதிகமான மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

இந்நிலையில் கல்வி வலயத்தின் கீழ் உள்ள கூடுதலான பாடசாலைகள் மிகவும் பின்தங்கிய பகுதிகளில் அமைந்துள்ளன. எனினும் இப்பாடசாலை மாணவர்கள் போதிய போக்குவரத்து வசதிகள் இன்றி பெரும் பாதிப்புகளை எதிர்நோக்கிவருவதாக தெரிவிக்கின்றனர்.

அதாவது துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் மூன்றுமுறிப்பு பனங்காமம் சிறாட்டிகுளம் பாலைப்பாணி விநாயகபுரம் ஆகிய பாடசாலைகளும் துணுக்காய் கல்விக் கோட்டத்தின் கீழ் கோட்டைகட்டியகுளம் பாடசாலை அம்பலப் பெருமாள் குளம் தென்னியன்குளம் பாடசாலை, உயிலங்குளம் பாடசாலை, ஆலங்குளம் பாடசாலை தேறாங்கண்டல், ஐயன்கன்குளம் பழைய முறிகண்டி புத்துவெட்டுவான் அம்பாள்புரம் ஆகிய பாடசாலைகள் உள்ளடங்கலாக சுமார் 27 இற்கும் மேற்பட்ட பாடசாலைகள் எந்தவித போக்குவரத்து வசதிகளும் இன்றி காணப்படுகின்றன. பாடசாலை காலங்களில் ஆசிரியர்கள் தங்கியிருக்கக் கூடிய வசதிகள் இப்பகுதிகளில் இல்லையென சுட்டிக்காட்டப்படுகின்றது. ஏனைய பாடசாலைகள் அமைந்துள்ள பகுதிகளுக்கான போக்குவரத்து வசதிகள் இருந்தாலும் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களுக்கு ஏற்றவகையில் நேர ஒழுங்குகள் இல்லாமையால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

இதனால் எந்தவித போக்குவரத்து வசதிகளும் இல்லாத கிராமங்களில் அமைந்துள்ள சுமார் 27 இற்கும் மேற்பட்ட பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

இதுதொடர்பில் துணுக்காய் வலயக்கல்வி திணைக்களத்தை தொடர்புகொண்டு வினவியபோது மேற்படி வலயத்தின் கீழ் உள்ள 61 பாடசாலைகளில் அதிகளவான பாடசாலைகள் மிகவும் பின்தங்கிய கிராமங்களில் இயங்கி வருகின்றன. இவர்களுக்கான போக்குவரத்து வசதிகள் எதுவும் இல்லாமையால் ஆசிரியர்களும் மாணவர்களும் அன்றாடம் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுவருவதாக அவர் தெரிவித்தார்.

# யாழ். சர்வதேச விமான நிலையத்தில் விரைவில் நிரந்தர விற்பனைத் தொகுதி

கோப்பாய் குறூப் நிருபர்

வடமாகாண சிறு உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை ஊக்குவிக்க யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தில் நிரந்தர விற்பனைத்தொகுதியொன்று விரைவில் அமைத்துக் கொடுக்கப்படுமென வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் (28) செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற உள்ளூர் உற்பத்திகளின் விற்பனைக் கண்காட்சியை பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூர் சிறு உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கும் சிறந்த சந்தை வாய்ப்பினை பெற்றுக்கொடுப்பதற்கும் பல்வேறு வேலைத்திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. எந்தவகையில் வட மாகாண சிறு உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை கொழும்புக்கும் சர்வதேச மட்டத்துக்கு எடுத்துச் செல்வதற்கு யாழ்.சர்வதேச விமான நிலையத்தில் நிரந்தர உற்பத்தி கூடாரத்தை அமைக்க திட்டமிட்டுள்ளோம்.

அதேபோன்று கொழும்பிலுள்ள மது அலுவலகத்திலும் உள்ளூர் உற்பத்தியாளர்களின் உற்பத்திகள் தொடர்பில் விளம்பரப்படுத்தி ஓடர்களை வடக்கிலிருந்து அனுப்பக்கூடிய வகையில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும். மூன்றாவது தடவையாக ஆளுநர் அலுவலகத்துக்கு முன்னால் உள்ளூர் உற்பத்தியாளர்களின் விற்பனைக் கூடங்கள் நிறுவப்பட்டு விற்பனையும் கண்காட்சியும் நடைபெற்று வருகிறது.

அதேபோன்று யாழ்.புதிய பஸ் நிலையம் மற்றும் யாழ்.கலாசார மண்டபம் ஆகிய பகுதிகளிலும் உற்பத்திப் பொருட்களை காட்சிப்படுத்துவதற்கான திட்டங்களை வகுத்து தொடர்ச்சியாக உள்ளூர் உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் மேலும் தெரிவித்தார்.



இலங்கை தமிழரசு கட்சியின் முக்கியஸ்தர் செல்வராசா கஜேந்திரன் நேற்றுமுன்தினம் ரெலோ கட்சியில் இணைந்து கொண்டார். இதனையடுத்து கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதனுடன் எடுத்துகொண்ட படம்.

# வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி

சாவகச்சேரி விசேட நிருபர்

யா/நாவற்குழி மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம் பெறவுள்ளது. பாடசாலை அதிபர் சு.சிவானந்தன் தலைமையில் இடம் பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் ந.காண்டீபனும் சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுநிலை அதிபர் சி.பவளகுமாரன் மற்றும் யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி அலகு போதனாசிரியர் செ.திருமாறனும், கௌரவ விருந்தினர்களாக பாடசாலையின் பிரான்ஸ் பழைய மாணவர் சங்க உறுப்பினர் இ.பக்திவேல் மற்றும் நாவற்குழி பிரதேச முன்பள்ளிகளின் இணைப்பாளர் திருமதி சர்மிளா ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

# வவுனியாவில் டெங்கு நோய் தீவிரம்; 20 இற்கு மேற்பட்டோர் அடையாளம்

வவுனியா விசேட நிருபர்

வவுனியா நகரில் 20ற்கு மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் 100 இடங்களில் டெங்கு நுளம்பு பெருகும் அபாய நிலமை காணப்படுவதாக வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் தெரிவித்துள்ளனர்.

மாவட்டத்தில் அதிகரித்துள்ள டெங்கு நுளம்பின் தாக்கம் தொடர்பில் கேட்ட போதே அவர்கள் இவ்விடயத்தினை தெரிவித்தனர். இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா நகரப்பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்கள், வர்த்தக நிலையங்களைச் சூழவுள்ள பகுதிகள், வடிகான்கள், வர்த்தக நிலையங்கள் அமைந்துள்ள காணி, கடையின் மேற்தளம், மேல்மாடிக்குடியிருப்பு, குளிர்சாதனப்பெட்டியைச் சூழவுள்ள பகுதிகள் போன்ற இடங்களில் நீர்தேங்கி டெங்கு நுளம்பு பெருக்கமடையக் கூடிய அபாய நிலை காணப்படுகின்றது. இதனால் அவற்றை தொடர்ச்சியாக சுத்தமாக நீர் தேங்காதவாறு பராமரிக்க வேண்டும்.

வவுனியா நகரில் 20இற்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். மேலும் பசார் வீதி, மில் வீதி, இறம்பைக்குளம் பகுதி, ஹொரவப் பொத்தான வீதி போன்ற பகுதிகளில் ஏறத்தாழ 4 – 6 வரையான வர்த்தக நிலையங்களில் டெங்கு நோய்க்கான பிரதான குடம்பி அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், ஒரு வர்த்தக நிலையத்தில் நோயாளி ஒருவரும் இனங்காணப்பட்டுள்ளார்.

டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை வைத்திருப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இந்நோய் பரம்பலைக் கட்டுப்படுத்த பொது மக்களினுடைய ஒத்துழைப்பு அவசியமானது. பொது மக்களினுடைய அக்கறையின்மை தான் இந்த நுளம்பு பெருக்கத்திற்கு காரணமாகவுள்ளது.

பல தடவை அறிவுறுத்தல் வழங்கியிருந்தும் அவர்களது கவனயீனம் நுளம்பு உற்பத்தியை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் நோயாளர்கள் உருவாகியுள்ளனர். எனவே தினமும் ஒவ்வொரு குடும்பமும் தமது வீடு, கடை என்பவற்றை சுத்தம் செய்து டெங்கு நுளம்புகளை அழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்.நகரில் வாகன நெரிசலை கட்டுப்படுத்த உடனடி நடவடிக்கை

கோப்பாய் குறூப், யாழ்.விசேட நிருபர்கள்

யாழ்.நகரப்பகுதிகளில் வாகன நெரிசலை தடுப்பதற்கும் வாகனங்களை நிறுத்துவதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்ளும் பொருட்டு யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் எம்.ஆர்.மஞ்சுள செனரத்துடன் யாழ்.வர்த்தக சங்கப்பிரதிநிதிகள் யாழ்.பொலிஸ் தலைமையகத்தில் நேற்றைய தினம் சந்தித்து கலந்துரையாடினர்.

இக்கலந்துரையாடலில், யாழ்.நகரப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கு முன்னால் முறையற்ற விதத்தில் வாகனங்கள் நிறுத்தப்படுவதால் வர்த்தகர்கள் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக வர்த்தக சங்கப் பிரதிநிதிகளால் பொலிஸ்மா அதிபருக்கு சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும் நகர அபிவிருத்தி அமைச்சினால் பெருந்தொகை செலவில் அமைக்கப்பட்ட வாகன தரிப்பிடம் இருக்கும் போது அதனை செயற்படுத்துவதற்கு பொலிஸார் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் கோரிக்கை முன்வைத்தனர்.

இதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த வணிகர் கழக தலைவர் ஜெயசேகரம்,

யாழ்.நகரப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள வாகன தரப்படத்தில் மேலதிக வாகனங்களை நிறுத்துவதற்கு பொலிஸாரின் உதவியை நாடியுள்ளோம்.

வாகன தரிப்பிடத்தில் நீர்வசதிகள் மலசல கூட வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தூர இடங்களிலிருந்து வருகை தரும் வாகனங்கள் தரித்துச் செல்வதற்கும் வசதியாக இருக்கும்.

ஒரு மணித்தியாலத்திற்கு உட்பட்டு நிறுத்தப்படும் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஆட்டோக்களுக்கு எவ்வித மான கட்டணங்களும் அறவிடப்பட மாட்டாது .

அதற்கு மேலதிகமாக நிறுத்தப்படும் மணித்தியாலங்களுக்கு குறைந்த கட்டணத்தை அறவிட எண்ணியுள்ளோம். அதன் விவரங்கள் தொடர்பில் ஊடகங்களில் வெளிப்படுத்தப்படும்.

# முன்னாள் கலாசாலை விரிவுரையாளர் சுவர்ணா நவரட்ணத்துக்கு கௌரவம்



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளர், சமூக சேவையாளர் சாதனைப் பெண் சுவர்ணா நவரத்தினம் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை சமூகத்தினர் பாராட்டி கௌரவிக்கப்பட்டார். கலாசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்ற ஒன்றுக் கூடல் நிகழ்வில் பிரதான உரைஞராக கலந்துகொண்ட அவர், ஆசிரியர்கள் தமது தலைமைத்துவ பண்புகளை எவ்வாறு வளர்த்துக் கொள்வது என்பது தொடர்பில் உரையாற்றினார். உரை நிறைவில் அவர் கலாசாலைக்கு வழங்கிய சேவைகளுக்காகவும் கோப்பாயில் பெண்களுக்காக 'நவமங்கை நிவாசம்' என்ற பெயரில் மனநல காப்பகமொன்றையும் அமைத்து செயற்படுகின்றார். எனவே அவரது சேவையை பாராட்டி ஆசிரியர் கலாசாலை சமூகத்தினரால் அவர் கௌரவிக்கப்பட்டார்.

# இராணுவத்தினரால் வரணி மத்திய கல்லூரி புனரமைப்பு

சாவகச்சேரி விசேட நிருபர்

தென்மராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட வரணி மத்திய கல்லூரி இராணுவத்தினரின் சரீர உதவியுடன் புனரமைக்கப்பட்டு வருகிறது.

பாடசாலை புலம்பெயர் பழைய மாணவர்களின் நிதிப்பங்களிப்புடனும் இராணுவத்தினரின் சரீர உதவியுடனும் பாடசாலையில் வர்ணம் பூசல், வகுப்பறை திருத்தம்,கூரை வேலைகள் உள்ளிட்ட புனரமைப்பு வேலைகள் இடம்பெற்று வருகின்றன. கொடிகாமம் படை முகாமைச் சேர்ந்த சிப்பாய்கள் உதவிகளை செய்துவருகின்றனர்.



அகளங்கன் பக்திப்பாடல்கள் மற்றும் உடுவை.எஸ்.தில்லைநடராசாவின் அட்டைப் படம் தாங்கிய "மாருதி" சஞ்சிகை வெளியீடு நிகழ்வுகள் கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசன் தலைமையில் வவுனியாவில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக உடுவை. தில்லை நடராசா கலந்துகொண்டு விளக்கேற்றினார். அருட்கலைவாரிதி ஸ்தபதி. சண்முகவடிவேல் சஞ்சிகையின் முதல் பிரதியைப்பெற்றுக்கொண்டார். அருகே நிகழ்வுக்கு தலைமை தாங்கிய கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசன் நிற்பதையும் கலந்து கொண்டோரின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# நகர்வலம்



## கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நாளை மாலை இலக்கியக்களம்

எதிர்வரும் 03ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு தமிழ்ச் சங்கத்தில் நடைபெறவுள்ள இலக்கிய களம் நிகழ்ச்சியில் "இசைவாணி வாணி ஜெயராமின் இசைக்கோலங்கள்" எனும் தலைப்பில் தெஹிவளை தமிழ் வித்தியாலய ஆசிரியை திருமதி நீதிமதி யோகராஜன் உரை நிகழ்த்தவுள்ளார்.

சிரேஷ்ட ஒலி, ஒளிபரப்பாளர் எஸ். விஸ்வநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் அனைவரையும் பங்குகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

## துப்பாக்கிச் சூட்டில் அகப்பட்டு பெண் படுகாயம்

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

பொலன்னறுவை ஹண்டிய பகுதியில் காட்டு யானையை இலக்குவைத்து இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பெண் ஒருவர் காயமடைந்து பொலன்னறுவை வைத்தியசாலையில் (28) அனுமதிக்கப் பட்டுள்ளார். பெண்ணின் வீட்டுக்கு அருகாமையில் வைத்தே இலக்குத் தவறி துப்பாக்கிச்சூடு குறித்த பெண்ணை காயத்திற்குள்ளாக் கியுள்ளது. தம்மின்ன ஹண்டியா பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய பெண் ஒருவரே துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய நபர் துப்பாக்கியுடன் கைது செய்யப் பட்டுள்ளார்.

பெரும்போக விவசாயத்தில் ஈடுபடும்;

## அநுராதபுரம் மாவட்ட விவசாயிகளுக்கு அரசு ரூ.10,000 நிவாரண கொடுப்பனவு

அநுராதபுரம் தினகரன் நிருபர்



அநுராதபுரம் மாவட்டத்தில் பெரும்போக விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் 1 இலட்சத்து 28,000 பேருக்கு அரசாங்கம் பத்தாயிரம் ரூபா நிதி நிவாரணமாக வழங்கியுள்ளதாக மாவட்ட பிரதி கமநல அபிவிருத்தி ஆணையாளர் சமிந்த ஏக்கநாயக்க தெரிவித்தார். அதற்காக வேண்டி 1075 மில்லியன் ரூபா நிதியினை அரசாங்கம் வழங்கியுள்ளது. அந்நிதி விவசாயிகளது வங்கிக் கணக்குகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க குறித்த நிதியினை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். அதனால் அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள 22 பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த விவசாயிகள் பெரிதும் நன்மையடைந்துள்ளனர். விவசாய நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காக வேண்டி மேலும் பல நிவாரணங்களை எதிர்வரும் காலங்களிலும் வழங்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

## கெப் வாகனம் மோதி பயணி உயிரிழப்பு

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

அநுராதபுரம் பாதெனிய வீதியில் பயணிகளை ஏற்றிச் செல்ல நிறுத்தப் பட்டிருந்த தனியார் பஸ் ஒன்றுடன் பின்னால் அதிவேகமாக வந்த கெப் வாகனம் ஒன்று மோதியதில் பஸ்ஸின் பின்னால் நின்றுகொண்டிருந்த பயணியொருவர் (27) உயிரிழந்துள்ளார்.

மேற்படி பஸ் வண்டியில், பயணிகள் தங்களது பொருட்களை ஏற்றிக் கொண்டிருந்தபோது அதிவேகமாக வந்த கெப் ரக வாகனம் பஸ்ஸின் பின்னால் நின்ற பயணிகள் மூவரை மோதியபோது ஒருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.


காயமடைந்த ஏனைய இருவரும் தம்புத்தேகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாக தம்புத்தேகம பொலிஸார் தெரிவித்தனர்.

யாழிலிருந்து மரக்கறி வகைகளின் வருகையால்

## தம்புள்ள பொருளாதார மத்திய நிலைய மரக்கறி விலையில் வீழ்ச்சி

திறப்பனை தினகரன் நிருபர்

தம்புள்ள வியாபாரிகள் தெரிவிப்பு



யாழ்ப்பாணம் பகுதியிலிருந்து அதிகளவான மரக்கறி வகைகள் தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்துக்கு வருகை தருவதனால் இக்காலப்பகுதியில் மரக்கறி வகைகளின் விலைகள் கணிசமான அளவு குறைவடைந்து வருவதாக அங்குள்ள வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் கிலோ முந்நூறு ரூபாவிற்கு மேல் விற்பனையாகி வந்த கரட், யாழ்ப்பாண கரட் தாராளமாக சந்தைக்கு வந்ததும், கிலோ ரூ. 65 ரூ. 80 வரையில் இவை குறைவடைந்தும் ஏனைய மேல் நாட்டு மரக்கறி வகைகளின் விலைகளும் குறைவடைந்து வருவதாகவும் அங்குள்ள வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இக்காலப் பகுதியில் சின்ன வெங்காயம், கறி மிளகாய், பீட், தக்காளி, பச்சை மிளகாய், கத்தரி போன்ற மரக்கறி வகைகளும் அதிகளவாக இங்கு வருவதால் இவற்றின் விலைகளும் குறைவடைந்துள்ளன. கடந்த பெப்ரவரி 28 தொடக்கம் அதிகமான மரக்கறி வகைகள் தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்தை நோக்கி அதிகளவில் வருவதாகவும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

## நாட்டுக்காக அனைத்து சாரணர்களும் தமது சேவையை ஆற்ற முன்வரவேண்டும்

தலைமை சாரணர் ஆணையாளர் சட்டத்தரணி பேஸ்ரித் பெர்னாண்டோ



நாட்டுக்காக அனைத்து சாரணர்களும் தமது சேவையை ஆற்ற வேண்டிய கடமை உள்ளது என தலைமை சாரணர் ஆணையாளர் சட்டத்தரணி பேஸ்ரித் பெர்னாண்டோ தெரிவித்தார். சாரணர் இயக்கத்தின் ஸ்தாபகரான பேடன் பவல் சாமியின் 166 ஆவது பிறந்த தின தேசிய கொண்டாட்டங்கள் மாத்தளை கிறிஸ்து தேவ வித்தியாலயத்தில் நடைபெற்றதுடன் அதில் இணைந்து கொண்ட சாரணர் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் இளைஞர் சமுதாயத்தை சரியான பாதையில் இட்டுச் செல்வது அனைத்து சாரணர்களினதும் பொறுப்பாகும் எனவும் அதற்காக அவர்கள் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

அவர்கள் நாட்டுக்காக தங்களாலான பணியை செய்ய வேண்டும் எனவும் தலைமை ஆணையாளர் வலியுறுத்தினார்.

உலக சாரணர் இயக்கத்தின் தொனிப்பொருள் 'சிறந்த உலகத்தை உருவாக்குதல்' என தெரிவித்த அவர், 172 நாடுகளில் 52 மில்லியன் அளவில் சாரணர்கள் உள்ளதாகவும் குறிப்பிட்டார். எந்தவொரு சூழ்நிலையையும் எதிர்கொள்ளும் வகையில் சாரணர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சாரணர் இயக்கத்தை ஆரம்பித்த ராபர்ட் ஸ்டீவன்சன் ஸ்மித் பேடன் பவல் சாமியின் 166 ஆவது பிறந்த தினம் பெப்ரவரி 22 ஆம் திகதியாகும். அதனையொட்டி உலகம் பூராவுமுள்ள சாரணர்கள் பல்வேறு கொண்டாட்டங்களை நடத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

## 405 மில்லி கிராம் ஹெரோயினுடன் பொலிஸ் உத்தியோகத்தர் கைது

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

405 மில்லி கிராம் ஹெரோயினுடன் கனிஷ்ட தரத்திலுள்ள பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை அநுராதபுரம் கோட்ட போதைப்பொருள் பிரிவு குழுவினர் (28) கைது செய்துள்ளனர்.

இவர் அநுராதபுரம் நகர தனியார் வங்கி ஒன்றுக்கு அருகாமையில் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டுள்ள மேற்படி சந்தேக நபரான கான்ஸ்டபில் இரத்திபுரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நீதவான் ஒருவரின் வீட்டுப் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருபவர் என பிரதேசத்திற்கு பொறுப்பான பொலிஸ் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவர் பணிபுரியும் பொலிஸ் நிலையத்தில் அனுமதியின்றி விடுவிப்பு இல்லாமல் பேமடுவ பகுதியில் அமைந்துள்ள அவரது வீட்டுக்கு வந்திருந்தவர் எனவும் பொலிசார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் கோட்ட பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர் குழுவினர் சந்தேக நபர் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## பாதுகாப்பு செயலாளருடன் ரஷ்யத் தூதுவர் சந்திப்பு

ஸாதிக் ஷிஹான்

புதிதாக நியமிக்கப்பட்ட இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் லெவன் எஸ். ட்ஜகார்யன், பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்னவை மரியாதை நிமித்தம் சந்தித்தார்.

கோட்டே, ஸ்ரீ ஜயவர்தனபுர பாதுகாப்பு தலைமையக வளாகத்தில் அமைந்துள்ள இலங்கை பாதுகாப்பு அமைச்சுக்கு முதல் முறையாக விஜயம் செய்த புதிய ரஷ்ய தூதுவர் தலைமையிலான தூதுக்குழுவினரை ஜெனரல் குணரத்ன வரவேற்றார்.

அதனைத் தொடர்ந்து ஜெனரல் கமல் குணரத்ன மற்றும் ரஷ்ய தூதுவர் லெவன் எஸ். ட்ஜகார்யன் ஆகியோருக்கிடையில் பல்வேறு முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் இரு தரப்பு பரஸ்பர விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இலங்கைக்கான ரஷ்ய தூதுவராக நியமிக்கப்பட்ட பின்னர் கடந்த நவம்பரில் இலங்கைக்கு வருகை தந்த ட்ஜகார்யன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கடந்த ஆண்டு நவம்பர் 11ஆம் திகதி தனது நியமனமக் கடிதத்தை கையளித்தார்.

இதேவேளை, பாதுகாப்பு செயலாளர் மற்றும் ரஷ்ய தூதுவருக்கிடையிலான சந்திப்பினை நினைவுகூரும் வகையில் நினைவுச் சின்னங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

இலங்கை பாதுகாப்பு அமைச்சின் இராணுவ இணைப்பு அதிகாரி மற்றும் இலங்கைக்கான ரஷ்ய தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## காலி அக்ஸா மாணவர்கள் 8 பேர் சிறந்த பெறுபேறு



அண்மையில் வெளியான ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் காலி அல் அக்ஸா ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் 8 பேர் சித்தியடைந்து பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளதாக பாடசாலை அதிபர் எஸ்.எஸ்.எம். றிஸ்கி தெரிவித்தார். இதற்கமைய எம்.ஆர். யாஸிர் (173), எஸ்.ஆர்.ஆர். ஆச்சரியன்(163), எம்.எப். இஜாஸ் அஹமட்(157), எம்.ஆர்.எம். ஹபீஸ்(155), எம்.ஆர்.எம். அமீன்(154), எம்.ஏ.எம்.இப்ராஹீம்(154), எம்.எப். அப்துல்லாஹ் (151), எம்.என்.எஸ். டிலக்ஷன் (150) புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

## இரத்தினக்கல் அகழும் பிரதேசங்களில் டெங்கு பரவும் அச்சுறுத்தல்

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

இரத்தினக்கல் அகழ்ந்து கைவிடப்பட்ட குழிகளில் டெங்கு மற்றுமின்றி ஏனைய தொற்று நோய்களும் பரவும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சுகாதாரத் திணைக்களம் மற்றும் பிரதேச பொது சுகாதாரப் பரிசோதகர்களால் இவ்விடயம் குறித்து எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தில் பரவலாக அனுமதிப்பத்திரம் பெற்றும் சட்ட ரீதியற்ற விதத்திலும் குழிகள் தோண்டப்பட்டு இரத்தினக்கல் அகழ்வு இடம் பெறுகிறது. இப்பணிகள் முடிவடைந்த பின் சம்பந்தப்பட்டோர் அலட்சியப்போக்கில் அக்குழிகளை மூடிவிடாது கை விட்டுச்செல்வதால் இப்பாரதூரமான நிலைமை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது .

அத்துடன் கைவிடப்பட்டுள்ள இக்குழிகள் உள்ள பிரதேசங்களில் புதர்கள் காடுகள் வளர்ந்துள்ளமையினால் கிராம தோட்டப்பகுதி மக்கள் இப் பகுதிகளில் நடமாடுகையில் அவற்றில் விழுந்து ஆபத்துக்களை எதிர் கொள்வதாகவும் தெரிவிக்கப் படுகிறது. பொறுப்பு வாய்ந்தவர்கள் இவ்விடயத்தில் அவதானம் செலுத்தி இக்கைவிடப்பட்டுள்ள குழிகளை முடிவிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## புத்தளம் பள்ளிவாசலுக்கு LED மின்குமிழ்கள் வழங்கி வைப்பு

கற்பிட்டி தினகரன் விசேட நிருபர்

புத்தளம் நுரைச்சோலை மஸ்ஜிதுல் ஹுதா (கொலனி) பள்ளிவாசலுக்கு ஒருதொகுதி LED மின் குமிழ்கள் (26) வழங்கி வைக்கப்பட்டன.

சமூக செயற்பட்டாளர் இம்தியாஸின் வேண்டுகோளுக்கிணங்க இலங்கை மற்றும் மலேசிய நட்பு நிதியினால் மேற்படி மின்குமிழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த LED மின்குமிழ்களை உத்தியோகபூர்வமாக வழங்கும் நிகழ்வில் பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவர் முஹம்மது இல்ஹாம், செயலாளர் முஹம்மது முஸம்மில், மௌலவிகளான முஹம்மது பாஹிம், முகம்மது அஸ்லம், முஹம்மது பஸீல் மற்றும் முஹம்மது ஹம்தான் உட்பட சமூக சேவையாளரும், YMMA பேரவையின் புத்தளம் மாவட்ட பணிப்பாளருமான முஜாஹித் நிசார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## பாஸியதுல் நஸ்ரியா மாணவன் சித்தி



பேருவளை, மருதானை களு/ அல் பாஸியதுல் நஸ்ரியா முஸ்லிம் ஆண்கள் பாடசாலை மாணவன் அகீல் அஹ்மட் பர்ஸான் இவ்வருடம் 2023 வெளியான ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 148 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் மொஹமட் பர்ஸான், பாத்திமா நிஸ்ரா தம்பதியினரின் செல்வப் புதல்வராவார்.



நீர்கொழும்பு கல்வி வலய பிரிவிலுள்ள பெரியமுல்ல அல் ஹிலால் மத்திய கல்லூரியிலிருந்து 2022 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுள் 8 மாணவர்கள் குறித்த வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் புள்ளிகளை பெற்று சித்தியடைந்துள்ளனர். சித்தியடைந்த மாணவர்கள் கற்பித்த ஆசிரியர்கள் மற்றும் வகுப் பாசிரியர்களுடன் எடுத்துக்கொண்ட படம். (படம்: நீர்கொழும்பு தினகரன் நிருபர்)

## வெலிகம அறபாவில் இல்ல விளையாட்டு



வெலிகம தினகரன் நிருபர்

வெலிகம அறபா மத்திய கல்லூரியின் (தேசிய பாடசாலை) வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி அண்மையில் கல்லூரி பதீயுத்தீன் மஹ்மூத் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இதில் 'ஜெஸ்மின்' இல்லம் முதலாம் இடத்தைப் பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. இரண்டாம் இடத்தை 'லோட்டஸ்' இல்லமும், மூன்றாம் இடத்தை 'ரோஸ்' இல்லமும் சுவீகரித்துக் கொண்டன.

இறுதி நாள் பரிசளிப்பு நிகழ்வு கல்லூரி அதிபர் எம்.டீ.எம். முதஹ்ஹர் தலைமையில் இடம்பெற்றது. அதிதிகள் வெற்றியீட்டிய வீரர்களுக்கு கிண்ணங்களை வழங்கி வைத்தனர். மாணவர்களது அணிநடை, மாணவிகளது உடற்பயிற்சி கண்காட்சி போன்றனவும் இடம்பெற்றன.

# வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்

ஈ.எச். குரே கட்டிடம் - 411, காலி வீதி, கொழும்பு-03, இலங்கை

தொலைபேசி: +94 11 2371600 l தொலைநகல்: +94 11 2371671

இணையதளம்: www.leco.lk மின்னஞ்சல்: general@leco.lk


LECO

# அறிவித்தல்

## புதிய மின் இணைப்புகள் மற்றும் ஏனைய சேவைகளுக்கு 2023ஆம் வருடத்தில் அனுமதிக்கப்பட்ட கட்டணங்களை அறவிடுதல்

**முன்னுரை**

(01) குறித்த சேவைக்காக பாவனையாளர்களிடமிருந்து அதிகூடிய தொகையாக அனுமதிப்பத்திரதாரரினால் (லெகோ) அறவிடுவதற்கு அனுமதியளிக்கும் கட்டணங்கள் இத்துடன் பிரசுரிக்கப்படுகின்றன.

(02) அனுமதிப்பத்திரதாரரினால் பொதுமக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கு தாக்கல் செய்யப்பட்டு கட்டணங்களை விசாரித்துப் பார்த்த பின் கட்டணங்களை நிர்ணயிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட விதிமுறைகளின் பிரகாரம் அனுமதிக்கப்பட்ட கட்டணங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

(03) இத்துடன் பிரசுரிக்கப்படும் கட்டணங்கள் குறித்த அனுமதிப்பத்திரதாரரினால் வழங்கப்படும் பொதுத் தேவைப்பாட்டிற்கான சேவைக்காக மட்டுமாகும். ஏனைய தேவைப்பாடுகளுக்கான கட்டணங்களை நிர்ணயிப்பதானது, மதிப்பீடுகள் தேவைப்படும் ஒவ்வொரு விடயத்திற்காகவும் வெவ்வேறாக மேற்கொள்ளப்படும் என்பதுடன் இதன்பொருட்டு மின்சார நிறுவனத்தின் 2023ஆம் வருடத்திற்கு இயைபாக ஏற்றுக்கொள்ளப்பட்ட விலைக்கோரல் ஆவணங்களில் காட்டப்படும் அலகுக்கான விலை ஏற்புடையதாகும்.

(04) புதிய சேவை வழங்கல் ஒன்றை வழங்குகையில் அனுமதிப்பத்திரதாரரினால் தற்போது உள்ள ஆதனமொன்றை பயன்படுத்துவதானால் அதன் மதிப்பை சேவை வழங்கலுக்காக பயன்படுத்துவதானது அந்தக் கட்டணத்தை மீள்கொடுப்பனவு செய்யும் விதிமுறையொன்றை அனுமதிப்பத்திரதாரர் செயற்படுத்தியிருந்தால் மட்டுமேயாகும். (வகுதி 7.3 அனுமதிக்கப்பட்ட கட்டணம் அறவிடும் விதிமுறையின் பிரகாரம்)

**சுருக்கங்கள்**

| | | | |
|---|---|---|---|
| A | அம்பியர் | AAC | சகல அலுமினிய கடத்திகள் |
| kV | கிலோ வோற் | B/C | கொத்தணி கடத்திகள் |
| kVA | கிலோ வோற் அம்பியர் | RC Pole | வலுவேற்றப்பட்ட கொங்கிறீட் கம்பங்கள் |
| LV | லோ வோல்டேஜ் | PS Poles | முன் வலியுறுத்தப்பட்ட கொங்கிறீட் கம்பங்கள் |
| MV | மீடியம் வோல்டேஜ் | | |

**1) அங்கீகரிக்கப்பட்ட சேவை இணைப்புக் கட்டணங்கள்**

**கட்டண கட்டமைப்பு**

அ) தற்போதுள்ள விநியோக வலையமைப்பிலிருந்து நிலத்தில் 50 மீற்றர் தூரம் வரை சில்லறை சேவை இணைப்புக்காக பொது அறவீடொன்று ஏற்புடையதாகும்.

ஆ) தற்போதுள்ள விநியோக வலையமைப்பிலிருந்து நிலத்தில் 50 மீற்றருக்கு மேற்பட்ட தூரத்திற்கு தற்போதுள்ள சில்லறை சேவை இணைப்பிற்கு

i) பொது அறவீட்டிற்கான நிலையான கட்டணம்
ii) அதிகரிக்கும் தூரத்திற்கு ஏற்ப மாற்றமடையும் கட்டணம்

இ) மூடப்படாத 11 கி.வோற்றிக்கு குறைந்த கம்பிகள் சகிதம், தற்போதுள்ள விநியோக வலையமைப்பிலிருந்து நிலத்தில் 50 மீற்றர் தூரம் வரை மொத்த சேவை இணைப்புக்காக பொது அறவீடொன்று ஏற்புடையதாகும்.

ஈ) மூடப்படாத 11 கி.வோற்றிக்கு குறைந்த கம்பிகள் சகிதம், தற்போதுள்ள விநியோக வலையமைப்பிலிருந்து நிலத்தில் 50 மீற்றருக்கு மேற்பட்ட தூரம் வரை மொத்த வழங்கலுக்காக (i) பொது அறவீட்டிற்கான நிலையான கட்டணம் (ii) அதிகரிக்கும் தூரத்திற்கு ஏற்ப மாற்றமடையும் கட்டணம் ஏற்புடையதாகும்.

**குறிப்பு:**

1. ''நிலத் தூரம்'' என்பது விநியோக வலையமைப்பில் கம்பியிணைப்பு இடத்திலிருந்து மானி பொருத்தப்படும் இடத்திற்கு வ/ப இலங்கை மின்சார (தனியார்) நிறுவனத்தினால் நிர்ணயிக்கப்படும் கிடையான தூரமாகும்.

1.1 சில்லறை சேவை இணைப்பொன்று **(< 42 kVA)** தற்போதுள்ள விநியோக வலையமைப்பிலிருந்து (குறைந்த மின்னழுத்தம்) நிலத் தூரம் 30 மீற்றர் வரையாகும்.

| தொ. இல. | சேவை இணைப்பு வகை | பொதுவான கட்டணம் (ரூபா) |
|---|---|---|
| 1.1.1 | 30 அம்பியர் சிங்கள் பேஸ் | 32,630.00 |
| 1.1.2 | 30 அம்பியர் திரீ பேஸ் | 71,350.00 |
| 1.1.3 | 63 அம்பியர் திரீ பேஸ் | 79,700.00 |

அட்டவணை 01

**குறிப்பு:**

1. 01ஆம் இலக்க அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பொதுவான கட்டணங்கள், சேவையானது கம்பங்களின் எண்ணிக்கை அல்லது தேவையான ஏனைய நிலையான பொருட்களைப் பொருட்படுத்தாமல் தற்போதுள்ள வலையமைப்பிலிருந்து 50 மீற்றர் நிலத் தூரம் வரை அனைத்து நிலையான வகை சில்லறை சேவை இணைப்புகளுக்கும் ஒரு நிலையான கட்டணமாகப் பயன்படுத்தப்படும்.
2. நிலையான சேவை இணைப்புகளைத் தவிர வேரேதேனும் மேலதிக பொருட்கள் / வேலைகளுக்கு தனித்தனியாக கட்டணம் அறவிடப்படும்.

1.2 சில்லறை சேவை இணைப்பொன்று **(< 42 kVA)** தற்போதுள்ள விநியோக வலையமைப்பிலிருந்து (குறைந்த வோல்டேஜ்) நிலத் தூரம் 50 மீற்றருக்கு மேல்.

| தொ. இல. | சேவை இணைப்பு வகை | பொது அறவீட்டிற்கு சமனான நிலையான கட்டணம் | மாற்றமடையும் அறவீட்டிற்கு 50 மீற்றரை விட அதிகரிக்கும் ஒவ்வொரு நிலத் தூரத்திற்கான கட்டணம் (ரூபா / மீற்றர்) |
|---|---|---|---|
| 1.2.1 | 30 அம்பியர் சிங்கள் பேஸ் | 32,630.00 | 1,050.00 |
| 1.2.2 | 30 அம்பியர் திரீ பேஸ் | 71,350.00 | 1,410.00 |
| 1.2.3 | 63 அம்பியர் திரீ பேஸ் | 79,700.00 | 1,650.00 |

அட்டவணை இல. 02

**குறிப்பு:**

1) 02ஆம் இலக்க அட்டவணை காட்டப்பட்டுள்ள கட்டண அமைப்பு 50 மீட்டருக்கு மேல் உள்ள நிலத் தூரத்திற்கு பொருந்தும்.
2) 50 மீட்டருக்கு அப்பால் உள்ள மேலதிக நிலத் தூரத்திற்கு மாற்றமடையும் கட்டணம் பயன்படுத்தப்படுகின்றது.
3) நிலையான சில்லறை விநியோக சேவை இணைப்புகளைத் தவிர வேறு ஏதேனும் மேலதிக பொருட்கள் / வேலைகளுக்கு தனித்தனியாக அறவிடப்படும்.

1.3 தற்காலிக சேவை இணைப்புகள் (சில்லறை வழங்கல்)

அ) 1.1 மற்றும் 1.2 இலக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையான சேவை இணைப்பு அறவீட்டுக் கட்டணங்களுக்கு புறம்பாக தற்காலிக இணைப்புகளுக்காக தொழிலாளர் கட்டணங்களையும் சேர்த்தல் வேண்டும்.

ஆ) அனுமதிக்கப்பட்ட மேலதிக தொழிலாளர் கட்டணங்கள்

i. தற்காலிக இணைப்புக்கு (சிங்கள் பேஸ்) : ரூபா 5,210.00
ii. தற்காலிக இணைப்புக்கு (திரீ பேஸ்) : ரூபா 5,500.00
iii. சேவை வழங்கலுக்காக பாவிக்கப்படும் சகல சேவை கம்பமொன்றுக்கு : ரூபா 4,150.00
(7.6 மீற்றர் வலுவேற்றப்பட்ட கொங்கிறீட் கம்பம்)

இ) ஒரு குறிப்பிட்ட இணைப்பின் மீட்டெடுக்கக்கூடிய பொருள் செலவில் 2% ஒரு மாதத்திற்கு வாடகைக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது (குறைந்தபட்ச கட்டணம் 2 வாரங்களுக்கு மற்றும் அதிகபட்ச கட்டணம் 50 மாதங்கள் வரை) இது மின்சாரம் துண்டிக்கப்படும் போது கணக்கிடப்படுகிறது.

ஈ) மீட்டெடுக்கக்கூடிய பொருட்களுக்கான வாடகைக் கட்டணங்களைக் கழித்தல் (இ. இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி) திரும்பப்பெறக்கூடிய பொருட்களின் விலையானது துண்டிக்கப்பட்டவுடன் வாடிக்கையாளர்களுக்குத் திருப்பியளிக்கப்படும்.

உ) 50 மீ வரையிலான தற்காலிக இணைப்புகளுக்கு, மீண்டும் பயன்படுத்தக்கூடிய பொருட்களின் விலை 03ஆம் இலக்க அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| தொ. இல. | சேவை இணைப்பு வகை | மீண்டும் பயன்படுத்தக்கூடிய பொருட்களுக்கான கட்டணம் (ரூபா) |
|---|---|---|
| 1.3.1 | 30 அம்பியர் சிங்கள் பேஸ் | 19,460.00 |
| 1.3.2 | 30 அம்பியர் திரீ பேஸ் | 55,180.00 |
| 1.3.3 | 63 அம்பியர் திரீ பேஸ் | 63,430.00 |

அட்டவணை இல. 03

ஊ) 50 மீட்டருக்கு அப்பால் உள்ள தற்காலிக இணைப்புகளுக்கு (உ) இல் உள்ள மீண்டும் பயன்படுத்தக்கூடிய பொருட்களின் விலை மற்றும் 04ஆம் இலக்க அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக நிலத் தூரத்தில் உள்ள மீண்டும் பயன்படுத்தக்கூடிய பொருட்களின் விலை கணக்கிடப்படும். இங்கே ''மேலதிக தரை தூரம்'' என்பது 50 மீட்டருக்கு அப்பால் உள்ள நிலத் தூரமாகும்.

| தொ. இல. | சேவை இணைப்பு வகை | மேலதிக தூரத்திற்கான மீண்டும் பயன்படுத்தக்கூடிய பொருட்களுக்கான கட்டணம் (ரூபா/மீற்றர்) |
|---|---|---|
| 1.3.4 | 30 அம்பியர் சிங்கள் பேஸ் | 860.00 |
| 1.3.5 | 30 அம்பியர் திரீ பேஸ் | 1,220.00 |
| 1.3.6 | 63 அம்பியர் திரீ பேஸ் | 1,460.00 |

அட்டவணை இல. 04

1.4 சில்லறை சேவை வழங்கல் - **(<42kVA)** (குறைந்த மின்னழுத்தம்) தற்போதுள்ள தரைக்கீழ் விநியோக வலையமைப்பு

| தொ. இல. | சேவை இணைப்பு வகை | பொதுவான கட்டணம் (ரூபா) |
|---|---|---|
| 1.4.1 | 30 அம்பியர் சிங்கள் பேஸ் | 25,060.00 |
| 1.4.2 | 30 அம்பியர் திரீ பேஸ் | 62,200.00 |
| 1.4.3 | 63 அம்பியர் திரீ பேஸ் | 65,180.00 |

அட்டவணை இல. 04

**குறிப்பு:**

1. மேற்கூறப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டண அமைப்பு புதிய சேவை இணைப்புகளுடன் தொடர்புடைய நிலையான கட்டணமாகும்.
2. அகழிகள் மற்றும் கேபிள் அமைக்கும் பணிகளுக்கு சந்தர்ப்பத்திற்கேற்ப கட்டணம் ஒவ்வொரு வழக்கிலும் பயன்படுத்தப்படும்.
3. நிலையான சேவை இணைப்புகளைத் தவிர வேறேதேனும் மேலதிக பொருட்கள் / வேலைகளுக்கு தனித்தனியாக கட்டணம் அறவிடப்படும்.

1.5 தற்போதுள்ள வலையமைப்பிலிருந்து 50 மீற்றர் தூரம் வரை 11 கி.வோற்றிற்கு குறைந்த மேல்நிலையிலுள்ள வெற்று வலையமைப்புகளிலிருந்தான மொத்த சேவை இணைப்புகள்

| தொ. இல. | சேவை இணைப்பு வகை | உபநிலையச் செலவு (மின்மாற்றி + துணைப் பாகங்கள்) (ரூபா) | ஏனைய செலவுகள்: உயர் மின்னழுத்த மேல்நிலை வழி, கம்பம் மற்றும் முடிவுறுத்தல் செலவு (ரூபா) | பொதுவான கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 1.5.1 | 50 kVA | 415,720.00 | 1,179,740.00 | 1,595,460.00 |
| 1.5.2 | 100 kVA | 413,590.00 | 1,179,740.00 | 1,593,330.00 |
| 1.5.3 | 160 kVA | 3,142,000.00 | 1,179,740.00 | 4,321,740.00 |
| 1.5.4 | 250 kVA | 3,993,480.00 | 1,179,740.00 | 5,173,220.00 |
| 1.5.5 | 400 kVA | 5,402,400.00 | 1,556,780.00 | 6,959,180.00 |
| 1.5.6 | 630 kVA | 7,794,420.00 | 1,556,780.00 | 9,351,200.00 |
| 1.5.7 | 1000 kVA - Plinth | 10,821,580.00 | 1,179,740.00 | 12,001,320.00 |

அட்டவணை இல. 06

1) 06ஆம் இலக்க அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கட்டணங்கள் 11 கி. வோற்றுக்குக் குறைந்த மேல்நிலை வெற்று வகை வலையமைப்புகளுக்குப் பயன்படுத்தப்படும்.
2) பொருந்தக்கூடிய பொதுவான கட்டணத்தில் துணை மின்நிலைய செலவு மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய செலவுகள் அடங்கும்.
3) பிற செலவுகளில் 11 கி.வோ் வரி நீட்டிப்புகள், கம்பங்கள் / துணைப்பாகங்கள் மற்றும் முடிவுகளுடன் தொடர்புடைய செலவுகள் அடங்கும்.
4) நிலையான மொத்த விநியோக சேவை இணைப்புகளைத் தவிர வேறு ஏதேனும் மேலதிக பொருட்கள் / வேலைகளுக்கு தனித்தனியாக அறவிடப்படும்.
5) துணை மின்நிலையம் வரை LV கேபிள்கள் மற்றும் அதன் பாகங்கள் (LV முடிவுறுத்தல்கள், லக்ஸ் போன்றவை) வாடிக்கையாளரின் பொறுப்பாகும்.
6) 1000 கி. வோற் துணை மின்நிலையத்திற்கான பீடம் உரிமதாரரின் விவரக்குறிப்புகளின்படி வாடிக்கையாளரால் கட்டப்பட வேண்டும்.
7) மேலே குறிப்பிடப்படாத பிற வகையான சேவை இணைப்புகளுக்கான கட்டணங்கள் ஒவ்வொரு வழக்கின் அடிப்படையில் கணக்கிடப்படும்.
8) 00 கி.வோ. மின்மாற்றி செலவு நிறுவத்தினால் (LECO) ஏற்றுக்கொள்ளப்படும்.

1.5 தற்போதுள்ள வலையமைப்பிலிருந்து 50 மீற்றருக்கு (தரையில்) அப்பால் உள்ள 11 கி.வோ. மேல்நிலை வலையமைப்புகளின் மொத்த சேவை இணைப்புகள் மற்றும் 1.4 பிரிவின் கீழ் வராத ஏனைய வகை இணைப்புகள்

ஒவ்வொரு விடயத்தின் பிரகாரம் அறவீட்டுக் கட்டணம் பின்வரும் வகையில் மதிப்பீடு செய்யப்படும்.

(i) 1.4ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள உபநிலைய செலவு நிலையான கட்டணமாக அறவிடப்படும்.

(ii) வேறு கட்டணங்களின் கீழ் கொண்டுவரப்படும் உயர் மின்னழுத்த வழிகள், கம்பங்கள் / துணைப்பாகங்கள் மற்றும் பொருத்தும் கட்டணங்கள் அந்தந்த சந்தர்ப்பங்களுக்கேற்ப மதிப்பீடு செய்யப்படும்.

1.6 தற்போதுள்ள மின் வழங்கல்களை மேம்படுத்துதல்

அந்தந்த சந்தர்ப்பங்களுக்கேற்ப மதிப்பீடுகள் தயாரிக்கப்படும்.

2. மின்சார வழிகள் மற்றும் விநியோக உபநிலையங்களுக்கான அனுமதிக்கப்பட்ட கட்டணங்கள்

நிலையான மேல்நிலை வழிகள் மற்றும் உப நிலைய நிர்மாணங்களுக்கு பின்வரும் கட்டணங்கள் விதிக்கப்படும்.

2.1 குறைந்த மின்னழுத்தம் மற்றும் 11 கி.வோற்றிற்குக் குறைந்த மேல்நிலை மின் வழிக்கான அனுமதிக்கப்பட்ட கட்டணங்கள்

| தொ. இல. | வழி வகை | கட்டணங்கள் (ரூபா / கி.மீ) வலுவேற்றப்பட்ட கொங்கிறீட் கம்பங்கள் | முன்வார்ப்பு கொங்கிறீட் கம்பங்கள் |
|---|---|---|---|
| 2.1.1 | திரீ பேஸ் குறைந்த மின்னழுத்த கொத்தணி கம்பியிணைப்பு - 50 | 3,185,200.00 | 5,164,820.00 |
| 2.1.2 | திரீ பேஸ் குறைந்த மின்னழுத்த கொத்தணி கம்பியிணைப்பு - 70 | 3,379,500.00 | 5,359,120.00 |
| 2.1.3 | மூடப்படாத 11 கி.வோ. அலுமினிய கம்பியிணைப்பு - 60 | - | 9,881,880.00 |
| 2.1.4 | 11 கி.வோ. கொத்தணி கம்பியிணைப்பு - 70 சகல அலுமினிய கடத்திகள் | - | 16,775,650.00 |

அட்டவணை இல. 07

**குறிப்பு:**

(i) கம்பியிணைப்பு வழியின் நீளம் 35 மீற்றருக்கு ஏற்புடையதான கட்டணத்திற்கு சமமான பெறுமதி குறைந்தபட்சக் கட்டணமாக அறவிடப்படும்.

(ii) நிலையான கம்பியிணைப்பு வழிக்கு புறம்பாக வேறு எந்தவொரு நிர்மாணத்திற்குமான கட்டண மதிப்பீடு வெவ்வேறாக சந்தர்ப்பத்திற்கேற்ப நிர்ணயிக்கப்படுதல் வேண்டும். (உதாரணம்: கம்பங்களை மாற்றுதல் மற்றும் புதிய மேலதிக கம்பங்களை இடுதல்)

2.2 உப நிலையங்களுக்கான அனுமதிக்கப்பட்ட கட்டணங்கள்

| தொ. இல. | வழி வகை | கட்டணங்கள் (ரூபா) விநியோக உப நிலையம் | மொத்த சேவை வழங்கல் உபநிலையம் |
|---|---|---|---|
| 2.2.1 | 100 kVA, ஒற்றைக் கம்பம் | 2,640,780.00 | 413,590.00 |
| 2.2.2 | 160 kVA, ஒற்றைக் கம்பம் | 3,268,370.00 | 3,142,000.00 |
| 2.2.3 | 250 kVA, ஒற்றைக் கம்பம் | 4,169,260.00 | 3,993,480.00 |
| 2.2.4 | 400 kVA, இரட்டைக் கம்பம் | 5,571,310.00 | 5,402,400.00 |
| 2.2.5 | 630 kVA, இரட்டைக் கம்பம் | 7,734,370.00 | 7,794,420.00 |
| 2.2.6 | 1000 kVA, பீடத்தில் ஏற்றப்பட்டது | | 10,821,580.00 |
| 2.2.7 | 1000 kVA, உள்ளக உபநிலையம் | | 11,167,040.00 |

அட்டவணை இல. 08

3. நிகர அளவீட்டு இணைப்பிற்கான (Net Metering Connections) அனுமதிக்கப்பட்ட அறவீடுகள்

| தொ. இல. | சேவை இணைப்பு வகை | இணைப்புச் செலவு (ரூபா) |
|---|---|---|
| 3.1.1 | ஆரம்ப பார்வையிடல் கட்டணம் | 13,860.00 |
| 3.1.2 | சிங்கள் பேஸ் இணைப்பு | 13,790.00 |
| 3.1.3 | திரீ பேஸ் இணைப்பு | 14,650.00 |
| 3.1.4 | மொத்த சேவை இணைப்பு | 19,400.00 |

அட்டவணை இல. 09

**குறிப்பு:**

1. எந்தவொரு நிகர அளவீட்டு விண்ணப்பத்தையும் சமர்ப்பிக்கும்போது ஆரம்ப மதிப்பீட்டுக் கட்டணம் அறவிடப்படும். விண்ணப்பமானது LECO தரநிலைகள் மற்றும் தேவைப்பாடுகளுக்கு இணங்கவில்லை என்றால் ஆரம்ப மதிப்பீட்டுக் கட்டணத்தின் 50% மீளளிக்கப்படும்.
2. தற்போதுள்ள சேவை இணைப்புகளுக்கு இந்தக் கட்டணம் பொருந்தும்.
3. பாவிக்கப்படும் பொருட்களுக்காக சந்தர்ப்பத்திற்கேற்ப கட்டணம் அறவிடப்படும்.

4. நட்ட உரிமைத்துவத்தின் மதிப்பீட்டு அறிக்கைக்காக அனுமதிக்கப்பட்ட தொழில்சார் கட்டண அறவீடு

| தொ. இல. | சேவை இணைப்பு வகை | இணைப்புச் செலவு (ரூபா) |
|---|---|---|
| 4.1 | மொத்தக் கட்டண வாடிக்கையாளர் | 26,300.00 |
| 4.2 | சில்லறைக் கட்டண வாடிக்கையாளர்– 3 பேஸ் | 13,200.00 |
| 4.3 | சில்லறைக் கட்டண வாடிக்கையாளா – 1 பேஸ் | 6,700.00 |

அட்டவணை இல. 10

5. நானாவித சேவைகளுக்கான அனுமதிக்கப்பட்ட அறவீடுகள்

| தொ. இல. | சேவை வகை | கட்டணம் (ரூபா) |
|---|---|---|
| 5.1.1 | சேவை இணைப்பு மதிப்பீடு - மீள் பரீட்சித்தல் (1) | 3,000.00 |
| 5.1.2 | வாடிக்கையாளரின் வேண்கோள் பேரில் மின் வழங்கலைத் துண்டித்தல் (2) | கட்டணம் அறவிடப்பட மாட்டாது |
| 5.1.3 | வாடிக்கையாளரின் வேண்கோள் பேரில் துண்டிக்கப்பட்ட மின் வழங்கலை மீண்டும் இணைத்தல் | 2,740.00 |
| 5.1.4 | நியதிச்சட்ட துண்டிப்பின் பின் மீண்டும் இணைத்தல் (3) | 2,740.00 |
| 5.1.5 | சில்லறை மானி பரீட்சித்தல் (சாதாரண/நிகர) மானி | 3,200.00 |
| 5.1.6 | வலுசக்தி மானி அல்லது மின் வலுசக்தி / உச்ச வேண்டுகோள் மானி பரீட்சித்தலுக்கு | 5,910.00 |
| 5.1.7 | கணக்கில் பெயர் அல்லது கட்டண வகுதியை மாற்றுதல் (2) | கட்டணம் அறவிடப்பட மாட்டாது |
| 5.1.8 | வலுசக்தி மானி அல்லது மின் வலுசக்தி / உச்ச வேண்டுகோளில் மாணி மாற்றுதல்(2) (LECO தீர்மானித்தால் ) | கட்டணம் அறவிடப்பட மாட்டாது |
| 5.1.9 | வாடிக்கையாளரின் வேண்டுகோளின் பேரில் புதிய சேவை இணைப்பொன்று / மேம்படுத்தலுக்காக பாதை அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் அல்லது கிளைகளை வெட்டி வீழ்த்துதல் | வாடிக்கையாளரின் வேண்டுகோளின் பேரில் மேற்கொள்ளப்படும் நிர்மாணங்களுக்காக நட்டஈட்டுத் தொகை கிராம சேவையாளரினால் சிபாரிசு செய்யப்பட்ட பற்றுச்சீட்டு மற்றும் பிரதேச செயலாளரினால் மேலொப்பம் இடப்பட்டதன் பின் அறவிடப்படும். |
| 5.1.10 | மின் கட்டணப் பற்றுச்சீட்டின் பிரதியொன்றை பெற்றுக்கொள்ளல் | 20.00 |
| 5.1.11 | நிலுவைத் தொகைக்கான கட்டணம் | துண்டித்தல் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்தத் தொகையையும் அறிவித்தல் செய்யப்பட்ட நாள் முதல் 10 நாட்களுக்குள் செலுத்தாவிட்டால் 16.86 வருடாந்த வட்டி விகிதாசாரத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட வட்டித் தொகை அறவிடப்படும். |
| 5.1.12 | தீர்வையாகாத காசோலைக்கான நிர்வாகக் கட்டணம் | • வங்கிக் கட்டணம் - ரூபா 100.00 + <br>• தபாற் கட்டணம் - ரூபா 50.00 + <br>• காசோலையில் குறிப்பிடப்பட்ட பெறுமதிக்கான மேலதிகக் கட்டணம் 2% |

அட்டவணை இல. 11

**குறிப்பு:**

1. சேவையை மேற்கொள்ளுமாறு கோரிய தரப்பினரின் குறைபாடுகள் காரணமாக அனுமதிப்பத்திரதாரரினால் வழக்கமான பரிசீலனையை விட மேலதிகமாக பணியிடத்திற்கு செல்ல வேண்டியிக்கும்போது.
2. இந்தச் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பிக்கும்போது கணக்கில் முழு நிலுவைத் தொகையையும் செலுத்தியிருத்தல் வேண்டும்.
3. சட்டரீதியான துண்டிப்பு என்பது இலங்கை மின்சாரச் சட்டத்தின் (2009 இலக்கம் 20) விதிகளின் கீழ் மின்சாரத்தைத் துண்டிப்பதாகும்.
4. 2022 செப்டெம்பர் மாதம் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட சராசரி எடையுள்ள சாதாரண கடன் வட்டி விகிதம்.

இந்த கட்டணங்கள் 2023 பெப்ரவரி 01ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படும் என்பதுடன் அடுத்த திருத்தம் வரும் வரை அமுலில் இருக்கும்.

**பொது முகாமையாளர்,**
**வ/ப இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்.**
**2023 பெப்ரவரி 14ஆம் திகதி**

## இலங்கை மருத்துவ சபை

**பிரிவு 12(1) (c), 12(1) (d), 12(1) (e), இன் கீழ் மருத்துவ சபைக்கு உறுப்பினர்கள் தேர்வு பிழைதிருத்தம்**

28.02.2023 தினகரன் பேப்பரில் வெளியான செய்தித்தாள் விளம்பரம் பக்கம் எண் 09ல் முகவரி **'எண் 10, நொரிஸ் கெனல் வீதி, கொழும்பு 10'** குறிப்பிடப்பட்டுள்ளது இது **எண் 31 நொரிஸ் கெனல் வீதி, கொழும்பு-10'** என திருத்தப்பட வேண்டும்.

**பேராசிரியர் வஜிர எச்.டபிள்யூ. திஸாநாயக்க**
**தலைவர்/ தெரிவத்தாட்சி அலுவலர்**
**இலங்கை மருத்துவ சபை**
**31, நொரிஸ் கெனல் வீதி, கொழும்பு -10.**
**01.03.2023**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

### உள்ளூராட்சித் திணைக்களம் - வடக்கு மாகாணம்

**2012ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் கீழான கூட்ட அறிவித்தல்**

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராகிய செல்லத்துரை பிரணவநாதன் ஆகிய என்னால் 2012ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் 66(எ) பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் வடக்கு மாகாணத்திற்குள் அமைந்துள்ள யாழ்ப்பாண மாநகர சபையின் வெற்றிடமாகவுள்ள முதல்வரை தேர்ந்தெடுப்பதற்கான கூட்டம் 2023.03.10ஆம் திகதி காலை 10.00 மணிக்கு யாழ்ப்பாண மாநகர சபையின் சபா மண்டபத்தில் கூட்டப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

**செல்லத்துரை பிரணவநாதன்,**
**உள்ளூராட்சி ஆணையாளர்,**
**வடக்கு மாகாணம்.**

**உள்ளூராட்சித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்,**
**முதியோர் இல்ல வளாகம்,**
**A9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம்.**
**2023.03.01**

## பகிரங்க ஏலவிற்பனை

மல்டி பினான்ஸ் பிஎல்சி நிறுவனத்தில் வைத்து தங்கக் கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பின்வரும் இடங்களில் கீழ்க்காணும் திகதிகளில் காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| ஏலவிற்பனைத் திகதி | | முகவரி |
|---|---|---|
| 1/3/10/17 | ஏப்ரல் 2023 | இல. 56, சந்தை இடம், அனுராதபுரம். |
| 1/3/10/17 | ஏப்ரல் 2023 | இல. 16, கோர்ட் ரோடு, கம்பஹா. |
| 1/3/10/17 | ஏப்ரல் 2023 | இல. 134, அனகாரிக தர்மபால மாவத்தை, மாத்தறை. |
| 4/11/18/24 | ஏப்ரல் 2023 | இல. 72, சிமன்ஸ் வீதி, மருதானை, கொழும்பு 10. |
| 6/12/19/25 | ஏப்ரல் 2023 | இல. 74/76, கண்டி வீதி, குருநாகல். |
| 8/15/20/26 | ஏப்ரல் 2023 | இல. 44, ஹில்ஸ் ஸ்ட்ரீட், கண்டி. |
| 21/22/27/28 | ஏப்ரல் 2023 | இல. 207, பிரதான வீதி, இரத்தினபுரி |

மல்டி பினான்ஸ் பிஎல்சி எந்த அறிவிப்பும் இல்லாமல் ஏலத்தை ரத்து செய்வதற்கும் ஒத்திவைப்பதற்கும் உரிமையை கொண்டுள்ளது.

MULTI FINANCE

இல.275/75, பேராசிரியர். ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

**இலங்கை பிக்குகள் பல்கலைக்கழகம் - அநுராதபுரம்**

## கேள்விக்கான அழைப்பு

### சுத்திகரிப்புச் சேவையை வழங்குதல் — 2023/2024

2023/2024ஆம் ஆண்டிற்காக இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்தின் சுத்திகரிப்புச் சேவையை நடத்திச் செல்வதற்காக பல்கலைக்கழகத்தின் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

1. தேசிய போட்டி கேள்விகோரல் முறைமையின் பிரகாரம் கேள்வி கோரல் இடம்பெறும்.
2. ஒப்பந்தகாலம் 01 வருடமாகும்
3. தகைமையுள்ள கேள்விதாரர்கள் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாது இருப்பதுடன் கீழ்க்காணும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

- **பதிவு செய்தல்**

  பதிவு செய்த வர்த்தக நிறுவனமாக இருத்தல்/ பதிவு செயற்பாடுள்ள சனசமூக சங்கமாக இருத்தல் (வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதி/ சனசமூக சங்கங்கள் பிரதேச செயலாளர் அல்லது குறித்த சனசமூக சங்கங்களைப் பதிவு செய்யும் அதிகாரியினால் விநியோகிக்கப்பட்ட தகைமைச் சான்றிதழ் கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.)

- **சேவை அனுபவம்**

  குறித்த துறையில் 03 வருட (2019/2020, 2020/2021, 2021/2022) சேவை அனுபவத்தை பூர்த்தி செய்திருப்பதுடன் அதில் 01 வருட சமமான வலுவுடனான சேவை அனுபவமாக இருத்தல் வேண்டும். (**சமமான வலு என்பது:-** குறைந்தபட்சம் 38 ஊழியர்கள் அல்லது வருடாந்த ஒப்பந்த பெறுமதி ரூ. 10 மில்லியனுடன் 01 வருட சேவை ஒப்பந்தமாகும்.)

4. இதனோடு சம்பந்தப்பட்ட கேள்வி ஆவணங்கள் 2023.03.02 முதல் 2023.03.23 பி.ப. 2.00 வரை இப் பல்கலைக்கழகத்தின் பொது நிர்வாகப் பிரிவினால் விநியோகிக்கப்படும் அதற்காக மீளளிக்கப்படாத ரூபா ஆயிரத்து ஐநூறு (ரூ. 1500/-) கட்டணத்தை பல்கலைக்கழகத்தின் காசாளரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை எழுத்துமூல வேண்டுதலுடன் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (பொது நிர்வாகம்) இடம் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்வி ஆவணங்கள் இப் பல்கலைக்கழகத்தின் இணைய தளத்தில் இருந்து (www.busl.ac.lk) பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் மற்றும் அதன் நகல் பிரதியை வேறுவேறாக உறைகளில் இட்டு அதில் 'மூலப்பிரதி' மற்றும் 'நகல் பிரதி' என்று தெளிவாக குறிப்பிட்டு அக் கடித உறைகள் இரண்டையும் ஒரு கடித உறையில் இட்டு 2023.03.24 பி.ப. 2.00 இற்கு முன் கிடைக்குமாறு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை பிக்குகள் பல்கலைக்கழகம், புத்தளம் வீதி, அநுராதபுரம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது மேலேயுள்ள முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
6. கேள்வி ஆவணங்கள் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'சுத்திகரிப்பு சேவையை வழங்குதல் 2023/2024' என்று குறிப்பிட்டு முத்திரையிட்டு இருத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். 2023.03.24 பி.ப. 2.00 இற்கு கேள்வி ஆவணங்கள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதிகளுக்கு அவர்களது செலவில் இதற்காக சமுகமளிக்கலாம்.
7. சகல கேள்விகளும் 2023.06.08 வரை செல்லுபடியாதல் வேண்டும்.
8. கேள்வி ஆவணங்களுடன் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்த வங்கியின் மூலம் பெற்றுக் கொண்ட ரூ. ஒரு இலட்சத்து இருபதினாயிரம் (ரூ. 120,000.00/-) பெறுமதியான நிபந்தனையற்ற கேள்விப் பிணையொன்றை சமர்ப்பிக்க வேண்டியதுடன் அது 2023.07.06 வரை செல்லுபடியாதல் வேண்டும். கேள்விப் பிணையை காசாகவும் பல்கலைக்கழகத்தில் வைப்புச் செய்ய முடியும் அத்துடன் அதனோடு சம்பந்தப்பட்ட பற்றுச்சீட்டை கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
9. கேள்விதாரர் உடனான கேள்விக்கு முன்னரான கூட்டம் (Pre-Bids Meeting) 2023.03.20 மு.ப. 10.00 இற்கு இப் பல்கலைக்கழத்தின் 'சனாதன' இல்லத்தில் நடைபெறவிருப்பதால் கேள்விதாரருக்கு அவர்களது செலவில் சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**இலங்கை பிக்குகள் பல்கலைக்கழகம்,**
**புத்தளம் வீதி, அநுராதபுரம்.**

2023.03.02

## பெறுகை அறிவித்தல்

### இரத்தினபுரி மாநகர சபை

**கழிக்கப்பட்ட வாகனங்களை ஏலத்தில் விற்பனை செய்தல்**

இரத்தினபுரி மாநகர சபையினால் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட கழிக்கப்பட்ட வாகனங்களை திறந்த கேள்வி மூலம் விற்பனை செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

- கேள்வி விண்ணப்பங்கள் விநியோகித்தல் ஆரம்பிக்கப்படும் திகதி - 2023.03.02
- கேள்வி விண்ணப்பங்கள் விநியோகித்தல் முடிவுறுத்தப்படும் திகதி மற்றும் நேரம் - 2023.03.23 பி.ப. 3.00
- கேள்வி விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளல் முடிவுறுத்தப்பட்டு, பொறியிடப்படும் திகதி மற்றும் நேரம் - 2023.03.24 மு.ப. 10.00
- கேள்வி விண்ணப்பங்கள் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் - 2023.03.24 மு.ப. 10.30

ஏல விற்பனைக்காக இணங்காணப்பட்ட வாகனங்கள்

| தொடர் இல. | வாகன இலக்கம் | வாகன வகை | உற்பத்தி ஆண்டு |
|---|---|---|---|
| 01 | LK 9825 | டிப்பர் | 2013 |
| 02 | LK 9823 | டிப்பர் | 2013 |
| 03 | KU 1557 | ஜீப் | 2012 |

2023.03.02 முதல் 2023.03.23 வரையான கால எல்லைக்குள் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 8.30 முதல் பிப. 3.00 வரை இரத்தினபுரி மாநகர சபையில் குறித்த கட்டணங்களைச் செலுத்தி கேள்வி விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ள முடிவதுடன் வாகனங்களைப் பரீட்சித்தல் மற்றும் வேறு விபரங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

02. கேள்வி விண்ணப்ப கட்டணங்கள் மற்றும் பிணை வைப்புத் தொகை

  I. மீளளிக்கப்படாத கேள்வி விண்ணப்பக் கட்டணம் ரூ. 2500.00
  II. மீளளிக்கப்படும் கேள்வி பிணை வைப்புத் தொகை ரூ. 25,000.00

03. மீளளிக்கப்படாத கேள்வி விண்ணப்பக் கட்டணம் மற்றும் சமர்ப்பிக்கப்படும் கேள்வித் தொகைக்காக அரச வரித்தொகையான VAT அறவிடப்படும்.

கேள்வி நிபந்தனைகள் மற்றும் வேறு விபரங்களை வாரத்தின் வேலை நாட்களில் கீழ்க்காணும் தொ.பே. இலக்கம் ஊடாக அல்லது அலுவலகத்திற்கு வருகை தந்து விசாரித்தறியலாம். தொ,பே. இலக்கம்: 045-2222275, 045-2225818, 045-2224336 மேற்படி சகல வாகனங்களும் இரத்தினபுரி சுற்றுவட்ட வீதியில் அமைந்துள்ள இரத்தினபுரி மாநகர சபை வாகன முற்றவெளியில் பரீட்சித்துப் பார்க்கலாம். அதற்காக மாநகர ஆணையாளரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி ஒருவரின் முன் அனுமதியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**இரத்தினபுரி.**

## அறிவித்தல்

**API டெக்னாலஜி (பிறைவெட்) லிமிட்டெட் (PV 6589)ஐ A P I டிரேட்ஸ் (பிரைவெட்) லிமிட்டெட் (PV 6215) உடன் கூட்டிணைத்தல்.**

2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்கம் கம்பனிகள் சட்டத்தின் 241(4)(b) இற்கு அமைவாக மேலே குறிப்பிட்ட கம்பெனிகள் கூட்டிணைக்கப்பட்டு ஒரே நிறுவனமாக எதிர்காலத்தில் A P I டிரேட்ஸ் (பிறைவெட்) லிமிட்டெட் எனும் பெயரின் கீழ் இயங்கும் என மேற்குறிப்பிட்ட கம்பெனிகளின் இயக்குநர்கள் சபைகளால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கூட்டிணைக்கப்பட்ட இக்கம்பனிகள் 2023 ஏப்ரல் 1ஆம் திகதி அல்லது கம்பனிகளை பதிவு செய்யும் பதிவாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்ட திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

மேற்கூறிய நிறுவனங்களின் எந்தவொரு பங்குதாரர் அல்லது கடன் வழங்குநராலும் அல்லது மேற்குறிய நிறுவனங்கள் ஏதேனும் விதத்தில் எந்தவொரு நபருக்கு கடமை அல்லது பொறுப்புடையவராக இருந்தால் அந் நபராலும், மேற்கூறிப்பிட்ட நிறுவனங்களின் பதிவு செய்யப்பட்ட அலுவலகங்களில் (இல. 39, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு 03 மற்றும் இல. 56, தர்மபால மாவத்தை, கொழும்பு 07), கூட்டிணைத்தல் பற்றிய மும்மொழிவின் நகல்களை, வழக்கமான அலுவலக நேரத்தில் ஆய்வு செய்ய முடியும், மேலும் அந் நபர் சம்பந்தப்பட்ட நிறுவனத்திடம் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில் கூட்டிணைத்தல் பற்றிய மும்மொழிவின் நகலை இலவசமாக பெற்றுக் கொள்ள முடியும்.

A P I டெக்னாலஜி (பிறைவெட்) லிமிட்டெட் மற்றும் A P I டிரேட்ஸ் (பிறைவெட்) லிமிட்டெட் இன் இயக்குனர்கள் சபைகளின் உத்தரவின் பேரில்

**CG கோர்பரேட் கன்சல்டன்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்**
**செயலாளர்.**

## சிறு விளம்பரம்

**மோட்டார் வாகனங்கள்**

**106 கார்கள் விற்பனைக்கு**

WP KE-0480 Proton 2006, Car கூடிய விலைக் கோ ரி க்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714542 958. 013381

**122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

SG AAL-4271 Bajaj 2013, NW YW-5874 Bajaj 2011, Threewheel கூடிய விலைக் கோ ரி க்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0711210 810. 013375

**128 டயர்கள், டியூப்புகள் விற்பனைக்கு**

டயர்டியூப் JCB பெகோ மோட்டர் கிரேட ர் கார், வேன், லொறி புதிய மற்றும் நிரப்பியவை இருக்கு ம் இடத்திற்கு போக்குவரத்து. கூடிய தொ கையை ஏன் செலு த்த வேண்டும் ஆர்பிடெக் நிரப்பும் போது. 700x16780x16 900x20 1000x20 அழையுங்கள் கூடிய வியாபாரம் குறைந்த இலாபம். 155, கிரவுன் டயர் கொழும்பு 14. 0773134060. 010369

**காணி/தோட்டம்**

**616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு**

படுக்கையறை, குளியலறை, அமரு ம் அறை, கிர னைட் தரையுடனான மேல் திறந்த மாடி (பல்கனி) ஆகியவற்றுடனான சிறிய வீடு லிபர்ட்டி பிளாசா மற்றும் நவம் மாவத்தைக்கு நடை தூரம். ெ க ா ழு ம் பி லு ள் ள முதன்மை பாடசாலைகளுக்கு அளவான தூரம். வீதிக்கு முகப்பாக இருபதனால் அலுவலகமொன்றிற்கு உகந்தது. (1 பேர்ச்சில் அடக்கப்பட்டுள்ளது) ஶ தர்மகீர்த்தியாராம வீதி, கொழும்பு3. 14.8 மில்லியன். பேசித் தீர்க்கலாம். 0772770847/ 071467645 9. 011407

Repeat Your Ad For Better Offers

Marriage Proposals in the Sunday Observer Is the best way to fulfil your Future Dreams

## பெறுகை கோரல்

### புத்தசாசனம், மத மற்றும் கலாசார விவகார அமைச்சு

## மத்திய கலாசார நிதியம்

மத்திய கலாசார நிதியத்தினால் கீழ்க்காணும் வேலைகளுக்காக ஆர்வம் காட்டுகின்ற நிறுவனங்களில் இருந்து பெறுகைகள் கோரப்படுகின்றன.

| இலக்கம் | கேள்வி இலக்கம் | விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூபா மில்லியன் | எதிர்பார்க்கும் தகைமைகள் | மாதிரிப் பத்திர கட்டணம் மற்றும் விநியோகித்தல் | கேள்விப் பிணைப் பெறுமதி மற்றும் செல்லுபடியாக வேண்டிய காலம் | கேள்வி ஆவணங்கள் விநியோகித்தல் | கேள்விகள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி மற்றும் நேரம் | கேள்விக்கு முன்னரான கலந்துரையாடல் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | CCF/Hot/ Service/03-2023 | சீகிரிய திட்டத்திற்கு துப்புரவேற்பாட்டு சேவை பெற்றுக் கொள்ளல் | 07 மில்லியன் (வருடாந்தம்) | வியாபார பதிவு மற்றும் 03 வருடத்திற்கு குறையாத தொடர் சேவை அனுபவம் | ரூ. 1500.00 (2023.03.02 - 2023.03.20) | ரூ. 82,000.00 | 2023.03.02 - 2023.03.20 | 2023.03.21 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு | 2023.05.17 சீகிரிய திட்ட வளாகத்தில் 066-2286945 |

1. கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்தல் மற்றும் காசு செலுத்திப் பெற்றுக்கொள்ளல் - இல. 212/1, பௌத்தாலோக்க மாவத்த, கொழும்பு 07, மத்திய கலாசார நிதியம் தலைமையகத்தில் காசாளர் பிரிவில் மற்றும் திட்ட முகாமையாளர் மத்திய கலாசார நிதியம், சீகிரிய திட்டம்' இடமிருந்து 2023.03.02 முதல் 2023.03.20 வரை வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை மேற்கொள்ளலாம்.
2. கேள்விப் பிணைக்காக மேற்கண்டவாறு இவ் அலுவலகங்களின் காசாளருக்கு காசாக செலுத்திய பத்திரத்தின் மூலம் இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியிலிருந்து சமர்ப்பிக்கப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக பெற்றுக் கொண்ட கேள்விப் பிணையொன்றை கேள்வி விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. அதனடிப்படையில் பூர்த்தி செய்யப்பட்ட உங்களது கேள்வி விலைமனுப் பத்திரங்களை 2023.03.21 பி.ப. 2.00 இற்கு முன் கிடைக்குமாறு, தலைவர், பெறுகைக்குழு, மத்திய கலாசார நிதியம், இல. 212/1, பௌத்தாலோக்க மாவதஸ்த, கொழும்பு 07 இற்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது பொறியிடப்பட்டு கையோடு கொண்டு வந்து அவ் அலுவலகத்தின் வழங்கல் பிரிவில் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.
4. கேள்விகளை திறத்தல் 2023.03.21 பி.ப. 2.00 இற்குப் பின் உடனடியாக தலைமையகத்தில் நடைபெறுவதுடன், அதற்காக கேள்விதாரருக்கு அல்லது பெயர் குறிப்பிடப்படும் அவரது பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
5. பூர்த்தியற்ற மற்றும் தாமதமாகக் கிடைக்கும் கேள்வி விலைமனுப் பத்திரங்கள் நிராகரிக்கப்படுவதுடன், பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.
6. இது பற்றிய மேலதிக விசாரணைகளுக்காக தொ.பே. இலக்கம் 011-2552671/ 066-2286945 மற்றும் மத்திய கலாசார நிதிய இணைய தளம் (www.ccf.gov.lk) ஐ பாவிக்கலாம்.

**பணிப்பாளர் நாயகம்**
**மத்திய கலாசார நிதியம்**




பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட வறிய குடும்பமொன்றுக்கு இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட வீடு கையளிக்கும் நிகழ்வு நேற்று புதன்கிழமை(01) முற்பகல் தும்பளை கிழக்கில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ்.படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் போதோட்ட 55 ஆம் டிவிஷன் படையணியின் தளபதி மேஜர் ஜெனரல் குணரத்ன, 551 ஆம் பிரிக்கெட்டின் பிரிகேடியர் காரிய கரவென, பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆழ்வாய்ப்பிள்ளை ஸ்ரீ உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

(படங்கள்: கரவெட்டி தினகரன், நாகர் கோவில் விசேட நிருபர்கள்)

# கம்பளையில் அதிபர், ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்

**கம்பளை நிருபர்**

கம்பளை நகரில் நேற்று பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் கலந்துகொண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கம்பளை புகையிரத நிலையத்திற்கு முன்பாக பதாதைகளை ஏந்தி கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தற்போது நாட்டில் பொருட்கள் விலை உயர்வு மற்றும் மின்சார கட்டணம் அதிகரிப்பு, வரி அதிகரிப்பு என்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதில் அதிகளவான பாடசாலை ஆசிரியர்கள் அதிபர்கள் கலந்துகொண்டனர்.

# கினிகத்தேனையில் போராட்டம் மக்கள் அசௌகரியம்

**கினிகத்தேனை தினகரன் நிருபர்**

கினிகத்தேனை, வட்டவளை ஆகிய பிரதேசங்களில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தொழிற்சங்கங்களால் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

வங்கி மற்றும் வைத்தியசாலை ஊழியர்கள் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து பணிபகிஷ்கரிப்பில் நேற்று ஈடுபட்டிருந்தனர்.

அதன்படி மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி ஆகியன மூடப்பட்டிருந்ததோடு அறிவுறுத்தலும் ஒட்டப்பட்டிருந்தது. இதனால் சேவை பெற வந்தவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றனர்.

மேலும் வட்டவளை வைத்தியசாலையில் வைத்தியர்கள் பணிபகிஷ்கரிப்பில் ஈடுபட்டதுடன் ஏனைய ஊழியர்கள் கடமைக்கு சமூகமளித்திருந்தனர். இதனால் கினிகத்தேனை வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவில் நோயாளர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்தனர்.

# நோர்வே நாட்டு சுற்றுலா பயணியிடம் திருட்டு

**அக்குறணை குறூப் நிருபர்**

கண்டியிலிருந்து பண்டாரவளை நோக்கிப் பயணித்த நோர்வே நாட்டு சுற்றுலா பயணியொருவரிடமிருந்து ஏழு இலட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் நேற்று திருடப்பட்டுள்ளதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

விலை உயர்ந்த 'ட்ரோன்' கேமரா உட்பட பல பெறுமதியான பொருட்களைக் கொண்ட பயணப்பொதியே இவ்வாறு இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. நாவலப்பிட்டி ரயில் நிலையத்தில் ரயில் தரித்து நின்ற சமயம் இத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என சுற்றுலாப்பயணி சந்தேகிக்கின்றார்.

பயணப்பொதியில் 25000 ரூபா பணம், ட்ரோன்கேமரா, கையடக்க தொலைபேசி உட்பட பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். சுற்றுலா பொலிஸார் மற்றும் நாவலப்பிட்டி பொலிஸார் இணைந்து விசாரணைகளை மேறகொண்டுள்ளனர்.


## களனிப் பல்கலைக்கழகம்

## விலைக்கோரலுக்கான அழைப்பு

| | | |
|---|---|---|
| திகதி | : | 2023 மார்ச் 02ஆம் திகதி |
| கடன் மற்றும் தலைப்பு | : | கடன் 3698/3699- விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வளம் அபிவிருத்தி செயற்றிட்டம் |
| ஒப்பந்த இல. மற்றும் தலைப்பு | : | MOE/STHRD/KE-E32: களனிப் பல்கலைக்கழகம், கணனி மற்றும் தொழில்நுட்பப் பீடத்திலுள்ள இயந்திரவியல் பொறியியல் வேலைத்தளத்திற்கான தேர்மோ (Thermo) மற்றும் பிற சாதனங்களுக்கான பெறுகை |
| விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி | : | 2023 மார்ச் 30ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு |

1. இலங்கை சோசலிச குடியரசானது 145 மில்லியன் ஐ.அ. டொலருக்குச் சமமான நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) கல்வி அமைச்சின் கீழ் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட (STHRD செயற்றிட்டம்) அமுல்நடாத்தலின் கிரயச் செலவினத்திற்காக பெற்றுக் கொண்டுள்ளதுடன் இந்த நிதியின் பெறுகைகளின் பகுதியொன்றை மேலே பெயரிடப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவழிப்பதற்கு உத்தேசித்துள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) வள நாடுகளின் தகுதியுள்ள விலைமனுதாரர்களும் இவ்விலைமனுவில் பங்கேற்கலாம்.
2. களனி பல்கலைக்கழக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட, செயற்றிட்ட பிரதி பணிப்பாளரின் (''கொள்வனவாளர்'') சார்பாக பல்கலைக்கழக பெறுகைக் குழுவின் தலைவர் MOE/STHRD/KE-E32: களனிப் பல்கலைக்கழகம், கணனி மற்றும் தொழில்நுட்பப் பீடத்திலுள்ள இயந்திரவியல் பொறியியல் வேலைத்தளத்திற்கான தேர்மோ (Thermo) மற்றும் பிற சாதனங்களுக்கான பெறுகைக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார். இந்த பெறுகையானது களனி பல்கலைக்கழகம், கணனி மற்றும் தொழில்நுட்பப் பீடத்திலுள்ள உத்தேச நூலகக் கட்டிடத்திற்கு இயந்திரவியல் பொறியியல் வேலைத்தளத்திற்கான உபகரணங்களை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் என்பதை அடக்குகின்றது.

   வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் என்பவை ஒப்பந்தம் கையொப்பமிடும் திகதியிலிருந்து பூர்த்தி செய்யும் காலப்பகுதியானது 120 நாட்களாகும்.
3. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) பண்டங்களின் பெறுகை ஒற்றைக்கட்ட-ஒரு கடித உறை நடைமுறையில் பகிரங்க போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடாத்தப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு தகுதியுள்ள நாடுகளின் அனைத்து விலைமனுதாரர்களும் பங்கேற்கலாம்.
4. இந்த விலைமனுக்கோரலில் பங்குபெறுவதற்காக பின்வரும் பிரதான தகைமைகளை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.

| லொட் இல. | விபரங்கள் | அலகுகளின் எண்ணிக்கை | கடந்த 5 வருடங்களில் ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் பின்வரும் நிகரான தன்மை மற்றும் சிக்கல்தன்மை ஆகியவற்றைக் கொண்ட ஆகக் குறைந்தது இரண்டு ஒப்பந்தங்களை 6ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டவாறான வழங்கலின் நோக்கத்திற்காக பிரதான வழங்குனராக வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல். (இல. ரூபா) | கடந்த மூன்று வருடங்களில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பூர்த்தி செய்யப்பட்ட அல்லது முடிவுறாத ஒப்பந்தங்களுக்காக விலைமனுதாரரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த பணக் கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்ட ஆகக் குறைந்த சராசரி வருடாந்த நிதிப்புரள்வு. (இல. ரூபா) |
|---|---|---|---|---|
| Lot 1 | TEMPERATURE MEASUREMENT & CALIBRATION UNITS | 01 | 3 மில்லியன் | 12 மில்லியன் |
| Lot 2 | FINNED TUBE HEAT EXCHANGER | 01 | 2.9 மில்லியன் | 11.6 மில்லியன் |
| Lot 3 | COMPRESSION REFRIGERATION CYCLE TRAINER | 01 | 4.4 மில்லியன் | 17.5 மில்லியன் |
| Lot 4 | HEAT CONVECTION & RADIATION APPARATUS | 01 | 3.5 மில்லியன் | 14.1 மில்லியன் |
| Lot 5 | RADIAL & HEAT CONDUCTION APPARATUS | 01 | 2.6 மில்லியன் | 10.5 மில்லியன் |
| Lot 6 | APPARATUS FOR PUMP CHARACTERISTICS | 01 | 4 மில்லியன் | 15.7 மில்லியன் |
| Lot 7 | UNIVERSAL VIBRATION APPARATUS | 01 | 3.7 மில்லியன் | 14.6 மில்லியன் |

அதிகமாக பதிலளிக்கக்கூடிய மதிப்பீடு செய்யப்பட்ட விலைக்கோரல்கள் மற்றும் இறுதிப் பொருட்களின் செயல்திறன் ஆகியவற்றின் அடிப்படையில் விலைமனு தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

5. மேலதிக தகவலைப் பெற்றுக் கொள்ளவும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கவும், விலைமனுதாரர் பின்வருபவருடன் தொடர்பு கொள்ளல் வேண்டும்.

**பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**செயற்றிட்ட அமுல்நடாத்தல் பணிமனை,**
**விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம்,**
**11ஆம் தளம் (அறை இல. L 11-5)**
**கணனி மற்றும் தொழில்நுட்பவியல் பீடம்,**
**களனி பல்கலைக்கழகம்,**
**பல்கலைக்கழக டிரைவ்,**
**புலுகஹ சந்தி, கண்டி வீதி,**
**களனி, இலங்கை.**

**தொலைபேசி : +94 (0)11 2984879 , 071-9607455, 071-4492382**
**தொலைநகல் : +94 11 2984879**
**மின்னஞ்சல் : dpd-sthrd@kln.ac.lk**

6. ஆங்கிலத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யவுள்ள தகுதியுள்ள விலைமனுதாரர்களால் "MOE/STHRD/KE-E32: களனிப் பல்கலைக்கழகம், கணனி மற்றும் தொழில்நுட்பப் பீடத்திலுள்ள இயந்திரவியல் பொறியியல் வேலைத்தளத்திற்கான தேர்மோ (Thermo) மற்றும் பிற சாதனங்களுக்கான பெறுகை" என்பதற்கான விலைமனுக்களை வேண்டி மேலேயுள்ள முகவரிக்கு வேண்டுகோள் ஒன்றையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 10,000.00 ரூபாவை செலுத்துதல் வேண்டும். ஆவணம்/ஆவணங்கள் 2023 மார்ச் 29ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை வழங்கப்படும். காணாமல் போன அல்லது தாமதமான ஒப்படைத்தலுக்கு பொறுப்பேற்கப்பட மாட்டாது.
7. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று மற்றும் வேலைத்தள விஜயம் 2023 மார்ச் 13ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு வேலைத்தள விஜயத்தைத் தொடர்ந்து மு.ப. 10.00 மணிக்கு களனி, கண்டி வீதி, பல்கலைக்கழக டிரைவ், களனி பல்கலைக்கழகத்தின் கணனி மற்றும் தொழில்நுட்பவியல் பீடத்தின் மாநாட்டு அறையில் இடம்பெறும்.
8. 2023 மார்ச் 30ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு விலைமனுப்பிணையுடன் உங்கள் விலைமனுக்களை ஒப்படைக்கவும்.

**பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**செயற்றிட்ட அமுல்நடாத்தல் பணிமனை,**
**விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம்,**
**11ஆம் தளம் (அறை இல. L 11-5)**
**களனி பல்கலைக்கழகம்,**
**பல்கலைக்கழக டிரைவ்,**
**புலுகஹ சந்தி, கண்டி வீதி, களனி.**

- பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி ஆகியன தனித்தனியாக உள்ளிட்டு ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என முறையே அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்படல் வேண்டும். அதன் பின்னர், இந்த இரு தபாலுறைகளும் இன்னொரு தபாலுறையில் உள்ளிட்டு, முத்திரையிடப்பட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் "MOE/STHRD/KE-E32: களனிப் பல்கலைக்கழகம், கணனி மற்றும் பீடத்திலுள்ள இயந்திரவியல் பொறியியல் வேலைத்தளத்திற்கான தேர்மோ (Thermo) மற்றும் பிற சாதனங்களுக்கான பெறுகை" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

9. விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலுக்கான இறுதி நேரம் முடிவடைந்ததும் தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**களனிப் பல்கலைக்கழகம்,**
**தலுகம, களனி, இலங்கை.**
**திகதி: 2023 மார்ச் 02.**



**Democratic Socialist Republic of Sri Lanka**

**Ministry of Agriculture**

## Agriculture Sector Modernization Project

**IDA Credit No: 5873 LK**

## PROCUREMENT NOTICE

## Construction of Farm and Market Access Road at Thalavai in Thalavai Pomegranate Cluster, Batticaloa District, Eastern Province

**LK-MOA-PMU-276409-CW-RFB**

## Construction of Collection Center for Pomegranate Cluster in Thalavai, Batticaloa District, Eastern Province

**LK-MOA-PMU-276405-CW-RFQ**

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a Credit from the International Development Association (IDA) in various currencies equivalent to US$ 58.630 Million towards the cost of the Agriculture Sector Modernization Project of the Ministry of Agriculture and it intends to apply portion of the proceeds of this credit to eligible payments under the Contract for the following works as described in the table below.
2. Chairman, Project Procurement Committee (Minor) - Eastern Province, Agriculture Sector Modernization Project invites sealed bids from eligible and qualified bidders for the following works as described in the table below.

| Contract No | Description of Works | Estimated Cost Excluding VAT Rs. (Mn) | Contract Period | Required Grade | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | Bid Security Amount Rs. | Validity Period |
| LK-MOA-PMU- 276409-CW-RFB | Construction of Farm and Market Access Road at Thalavai in Thalavai Pomegranate Cluster, Batticaloa District, Eastern Province | 13.5 | 03 months | C 6 or Above in Highways (Road) | 162,000.00 | 06.07.2023 |
| LK-MOA-PMU- 276405-CW-RFQ | Construction of Collection Center for Pomegranate Cluster in Thalavai, Batticaloa District, Eastern Province | 6.9 | 03 months | C 7 or Above in Building Construction | 82,000.00 | 06.07.2023 |

3. Bidders are allowed to quote for the above works with Bid Security amount and the validity period mentioned above. One bidder is allowed to quote only one bid for each contract. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the field of respective construction for the grade mentioned in the table above with the Construction Industry Development Authority **(CIDA).**
4. Bidding will be conducted through the National Competitive Bidding (NCB) procedure approved by the World Bank.
5. Qualification requirements are indicated in Section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section 5) of the bidding document.
6. Interested eligible Bidders may obtain further information from the Office of the Provincial Deputy Project Director, Agriculture Sector Modernization Project (T.P No: 0714435036 / Fax No: 065- 2059190) and inspect the bidding documents at the same place on any working day **from 9:00 Hrs. to 15:00 Hrs from 02nd March 2023 to 23rd March 2023.**
7. Pre-Bid meeting will be held **on 13th March 2023 at 10.30 a.m.** at the ASM Project Office, Agriculture Quarters Lane, Kallady, Batticaloa
8. Bids shall be valid up to 08th June 2023.
9. Bid shall be accompanied by a Bid Security as per the information given in the Table. Bid Security should be obtained from any commercial bank recognized by the Central Bank of Sri Lanka.
10. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the Provincial Deputy Project Director, Agriculture Sector Modernization Project, Agriculture Quarters Lane, Kallady, Batticaloa **from 02nd March 2023 to 23rd March 2023 from 9:00 hrs to 15:00 hrs** upon payment of a non-refundable fee of LKR. **5,000.00 for each package**. The method of payment should be by cash.
11. Bids must be delivered to the **Provincial Deputy Project Director, Agriculture Sector Modernization Project, Agriculture Quarters Lane, Kallady, Batticaloa** on or before **15:00 Hrs. on 23rd March 2023**. Electronic bidding will not be permitted. Late bids will not be accepted. Bids will be opened in the presence of the bidders' representatives who choose to attend in person at the mentioned address at **15:00 Hrs on 23.03.2023.**
12. Complete bids should be separately forwarded in two copies as the original and the duplicate. The original and the duplicate should be enclosed separately and marked as the 'original' and 'duplicate' respectively in sealed envelope. Both envelopes enclosed in a sealed single envelope and marked contract number and name of the contract on top left-hand corner of the envelope.

**Chairman,**
**Project Procurement Committee (Minor) Eastern Province**
**Agriculture Sector Modernization Project,**
**Agriculture Quarters Lane, Kallady,**
**Batticaloa**

Date: 02.03.2023

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**

## இபோச டிப்போக்கள், பிராந்திய வேலைத்தளங்கள்/ களஞ்சியசாலைகள் / பஸ் நிலையங்கள் ஆகியவற்றிற்கு தனியார் பாதுகாப்புச் சேவையை வழங்கல்

**பெறுகை இல: MT/04/09/MT/591**

01. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழாக, 2023.03.23ஆம் திகதி பி.ப. 02.00 மணி வரை, கீழே வழங்கப்பட்டுள்ள விபரங்களுக்கமைவாக, இபோச டிப்போக்கள், பிராந்திய வேலைத்தளங்கள் / களஞ்சியசாலைகள் / பஸ் நிலையங்கள் ஆகியவற்றிற்கு தனியார் பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதற்காக தகுதியுள்ள பாதுகாப்புச் சேவை வழங்குநர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுப் பெறுகைக்குழுத் தலைவர் பெற்றுக்கொள்வார். கொழும்பு - 05, கிருள வீதி, 200, இலங்கை போக்குவரத்துச் சபை, பெறுகைப் பிரிவின் பிரதான பெறுகை முகாமையாளரிடமுள்ள படிவங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். ஒரு மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணமான 35,000.00 ரூபாவை செலுத்துவதன் மூலம், 2023.03.02 ஆம் திகதி முதல் 2023.03.22 ஆம் திகதி வரையான வேலை நாட்களில், மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப.3.00 மணிக்கிடையே விலைமனுக்கோரும் ஆவணங்கள் வழங்கப்படும்.

| தொடர் இலக்கம் | இபோச பிராந்தியம் | குறித்த பிராந்தியத்திலுள்ள டிப்போக்கள்/வேலைத்தளங்கள்/ களஞ்சியசாலைகள்/ பஸ் நிலையங்கள் | தேவைப்படும் எண்ணிக்கையான பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் | | | பிராந்திய மொன்றிற்கான விலைமனுப் பிணை (ரூ) |
|---|---|---|---|---|---|---|
| | | | பகல் | இரவு | மொத்தம் | |
| 1.1 | கொழும்பு | அங்கொட, ஹோமாகம, மட்டக்குளிய, கெஸ்பேவ, மொறட்டுவ, உடகஹா முல்ல, மீதோட்டமுல்ல, கட்டுபெத்த டிப்போக்கள் | 31 | 31 | 62 | 250,000 |
| 1.2 | களுத்துறை | களுத்துறை, ஹொரண, மத்துகம, அளுத்கம டிப்போக்கள் | 22 | 19 | 41 | 200,000 |
| 1.3 | கம்பஹா | கம்பஹா, ஜா-எல, வெலிசர, திவுலப்பிட்டிய, கிரிந்திவெல, கடவத்த, நீர்கொழும்பு. களனி, நிட்டம்புவ டிப்போக்கள், கம்பஹா பிராந்திய களஞ்சியசாலை. | 43 | 40 | 83 | 300,000 |
| 1.4 | நுவரெலிய | நாவலப்பிட்டிய, நுவரெலிய, வலப்பன, ஹங்குராங்கெத்த, கொத்மலை, கம்பளை டிப்போக்கள் மற்றும் குறுந்துவத்த உப-டிப்போ | 34 | 31 | 65 | 250,000 |
| 1.5 | மஹாநுவர | யட்டிநுவர, கண்டி வடக்கு, கண்டி தெற்கு, வத்தேகம, உடுதும்பர, மாத்தளை, தெல்தெனிய டிப்போக்கள் | 29 | 27 | 56 | 250,000 |
| 1.6 | சபரகமுவ | இரத்தினபுரி, கலவான, பலங்கொட, எம்பிலிப்பிட்டிய, தெரணியகல, மாவனல்ல, இறம்புக்கன, கேகாலை டிப்போக்கள், வரக்காப்பொல மற்றும் கஹாவத்த உப-டிப்போக்கள் | 42 | 40 | 82 | 300,000 |
| 1.7 | இரஜட்ட | கெபெத்திகொல்லாவ, கந்தளாய், தம்புள்ள, ஹொரவப்பொத்தான, கெக்கிராவ டிப்போக்கள் மற்றும் மஹாசென்புர உபடிப்போ | 20 | 20 | 40 | 150,000 |
| 1.8 | ஊவா | தெஹியத்தகண்டிய, பிபில, தனமல்வில, கெப்பிட்டிபொல டிப்போக்கள் மற்றும் சியம்பலாண்டுவ உப-டிப்போ | 16 | 16 | 32 | 150,000 |
| 1.9 | வயம்ப | மஹவ, வாரியபொல, குளியாப்பிட்டிய, நிக்கவெரட்டிய, கல்கமுவ, அளவ்வ, கிரியுள்ள டிப்போக்கள், ஆனமடுவ மற்றும் நாரம்மல உபடிப்போக்கள் | 35 | 29 | 64 | 250,000 |
| 1.10 | ருஹுூண | அம்பலாங்கொட, எல்பிட்டிய, உடுகம, அக்குரஸ்ஸ, கொக்கல, ஹக்மண, தங்காலை, அம்பலாந்தொட்ட டிப்போக் கள் | 47 | 46 | 93 | 350,000 |
| 1.11 | கிழக்கு | ஏறாவூர், காத்தான்குடி, களுவாஞ்சிக்குடி, கிண்ணியா, மூதூர். சம்மாந்துறை, பொத்துவில், வாழைச்சேனை, ரிதீதென்ன, வாகரை டிப்போக்கள் | 31 | 31 | 62 | 250,000 |
| 1.12 | வடக்கு | யாழ்ப்பாணம், பருத்தித்துறை, காரைநகர், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா டிப்போக்கள் மற்றும் கோண்டாவில் மாகாண வேலைத்தளம் மற்றும் யாழ்ப்பாண பஸ் நிலையம் | 35 | 28 | 63 | 250,000 |

02. பாதுகாப்பு அமைச்சிலிருந்தான ஒரு செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுள்ள பதிவு செய்யப்பட்ட மற்றும் பாதுகாப்புச் சேவையை வழங்குவதில் 03 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டுள்ள மற்றும் ஆகக் குறைந்தது 100 ஊழியர்களைக் கொண்டுள்ள பாதுகாப்புச் சேவை வழங்குநர்கள் மாத்திரம் இந்த விலைமனுவை சமர்ப்பிப்பதற்கான தகுதியை பெறுகின்றனர்.

03. விலைமனுக்கள், 2023.06.23ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும், ஆனால் விலைமனு கூறிடப்பட்ட விலைகள் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளப்பட்ட திகதியிலிருந்து 2023.12.31ஆம் திகதி வரையும் நிலையாகவிருத்தல் வேண்டும்.

04. 2023.03.14ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு கொழும்பு-05, கிருள வீதி, 200 இலக்கத்திலுள்ள இபோச பெறுகைப் பிரிவில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.

05. விலைமனுதாரர்கள், பிராந்தியம் ஒன்றிற்கோ அல்லது பலவற்றிற்கோ விலைமனு கூறிடலாம் இலங்கை மத்திய வங்கியால் அனுமதிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் அல்லது இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுடன் பதிவுசெய்து கொண்டுள்ள ஒரு காப்புறுதி முகவரொருவரால் வழங்கப்பட்ட மற்றும் இபோச மூலம் முதலாம் எழுத்து மூல பத்திரத்தினால் வேண்டப்படும். மாற்றப்பட முடியாத மற்றும் நிபந்தனையற்றதாக பணமாக மாற்ற முடியுமான, 2023.07.23 வரை செல்லுபடியாகும், மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறான, விலைமனுக் கூறுகள் அழைக்கப்படும் பிராந்தியங்களுக்கான உரித்தான மொத்தப் பெறுமதிக்கான, விலைமனுப்பிணை/பிணைகளை விலைமனுக்கள் கொண்டிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் விலைமனுப்பிணையைக் கொண்டிராத எந்தவொரு விலைமனுவும் நிராகரிக்கப்படும்.

06. (அ) ஒரு முகவராக, உப முகவராக, பிரதிநிதியாக அல்லது விலைமனுதாரர் தொடர்பாக நியமனம் பெற்றவராக அல்லது அவர் சார்பாக செயற்பட விரும்பும் எந்தவொரு நபரும், விலைமனுவைச் சமர்ப்பிப்பதற்கு முன்னதாக 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்திற்கமைவாக கொழும்பு - 10, டீ.ஆர். விஜேவர்தன மாவத்தை, "சமாகம் மெதுர" பொது ஒப்பந்தப் பதிவாளரிடம் தம்மை பதிவு செய்து கொள்ள வேண்டும்.

(ஆ) குறித்த விலைமனுதாரர்கள், 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பெது ஒப்பந்தச் சட்டத்திற்கமைவாக, விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் மற்றும் பெறுகை கையளிக்கப்பட முன்னரும் தம்மை பதிவு செய்துகொள்ள வேண்டும். உரித்தான பெறுகைக் குழுவிற்கு பொது ஒப்பந்தங்கள் பிரகாரம் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழை சமர்ப்பிக்காத அவ்வாறான விலைமனுதாரர்களுக்கு குறித்த பெறுகை கையளிக்கப்பட மாட்டாது.

07. விலைமனு ஆவணத்தின் அனைத்துப் பக்கங்களும் விலைமனுதாரரால் சிற்றொப்பமிட்டு அவரின் முத்திரை பதியப்படல் வேண்டும்.

08. விலைமனுக்கள், 2023.03.23ஆம் திகதி பி.ப. 02.00 மணி அல்லது அதற்கு முன்னதாக, பத்தரமுல்ல, II ஆம் கட்டம், ''செத்சிரிபாய'', 7ஆம் மாடி, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு, கணக்கிடல் பிரிவில் இதற்காகப் பராமரிக்கப்படும் விலைமனுப் பெட்டியில் இரு பிரதிகளில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் / தூதஞ்சல் சேவையினூடாக அனுப்பப்படல் வேண்டும். விலைமனுக்கள் சேர்க்கப்படும் முத்திரை பொறிக்கப்பட்ட தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில், "Supply of Private Security Service to SLTB Depots, Regional Workshops/Stores/Bus Stands" என குறிக்கப்படல் வேண்டும்.

09. விலைமனுக்கள், பத்தரமுல்ல, IIஆம் கட்டம், ''செத்சிரிபாய'', 7 ஆம் மாடி, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு, கணக்குப் பிரிவில், அவை மூடப்பட்டதன் பின்னர் உடனடியாக திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் சட்டபூர்வமான அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுத்திறப்பில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு,**
**7 ஆம் மாடி, ''செத்சிரிபாய'', II ஆம் கட்டம்,**
**பத்தரமுல்ல.**

**விசாரணைகள்: பிரதான பெறுகை முகாமையாளர், பெறுகைப் பிரிவு.**
**தொலைபேசி: 011 7706110, 0771056204. தொலைபேசி/ தொலைநகல்: 011 2588457**

# கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனம்

## விலைமனுக்கோரல் (IFB)

கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனம் சார்பாக பிரதான பெறுகைக் குழுவின் தலைவரினால் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கு தகுதியான முத்திரையிடப்பட்ட மனுதாரர்கள் கோரப்படுகின்றனர்.

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தத்தின் பெயர் | தேவைப்படும் (CIDA) தரம் | மீளச்செலுத்தப் படாத கட்டணம் (ரூ). | காலம் | தேவைப்படும் மனுப் பாதுகாப்புத் தொகை (ரூ). | மனுக்கள் திறக்கப்படும் / மூடப்படும் திகதி |
|---|---|---|---|---|---|---|
| CLT/WK/ 018/2023 | கொழும்பு தாமரை கோபுரத்தில் பண்டகச்சாலை கட்டிடத்தை புதுப்பித்தல் மற்றும் வாகனத்தரிப்பிடத்தை மேம்படுத்தல் | C5 அல்லது மேல் | 5,000.00 | 60 நாட்கள் | 500,000.00 | 2023.03.13 14.00 மணி |

01. ஆர்வமுள்ள மனுதாரர்கள் மீளச்செலுத்தப்படாத கட்டணத்தை கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனத்தின் நிதிப் பிரிவில் செலுத்தி கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனம் முகாமையாளர் (பெறுகை) அலுவலகத்தில் ஆங்கில மொழியில் அச்சிடப்பட்ட மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.
02. மேலதிக விபரங்களை இல.320, டி.ஆர்.விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10 இல் அமைந்துள்ள கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனத்தின் முகாமையாளரிடம் (பெறுகை) பெற்றுக்கொள்ளலாம்.
(தொ.பே: **0112-421952** / மின்னஞ்சல் – **tender@colombolotustower.lk**).
03. மனுக்கள் செல்லபடியாகும் காலம் **60 நாட்கள்.**
04. முத்திரையிடப்பட்ட மனுக்கள் இல.320,டி.ஆர்.விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10 இல் அமைந்துள்ள கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனத்தின் முகாமையாளர் (பெறுகை) அலுவலகத்திற்கு கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும்.
05. அனைத்து மனுக்களும் கட்டாயமாக மேலே குறிப்பிட்டுள்ள மனுப் பாதுகாப்புத் தொகையுடன் இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். மனுப்பாதுகாப்புத் தொகை செல்லுபடியாகும் காலம் **90 நாட்கள்.**
06. மேலே குறிப்பிடப்பட்டுள்ள திகதி முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும். மனுக்கள் திறக்கப்படும் வேளையில் மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதி அவ்வேளையில் பிரசன்னமாயிருக்க முடியும்.

**பணிப்பாளர் / தலைமை நிர்வாக அதிகாரி,**
**கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனம்,**
**இல. 320, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10.**

# கொழும்பு மாநகர சபை

## விலைக்கோரல்களுக்கான அழைப்பு

கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரால் பின்வரும் சேவைகளை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வி இலக்கம் | விபரம் | மீளளிக்கப் படாத கட்டணம் ரூபா | விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி | விலைமனுதாரர்/ கேள்விதாரரின் தகுதிகள் | மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளும் நபர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | ME/ME/DR/ 32/2023 | கொழும்பு-15, விஸ்ட்வைக் வீதியில் நீர் வடிகாலமைப்பை நிர்மாணித்தல் (கட்டம் 01) | 5,750.00 | 600,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக் கொள்ள முடியுமான பிணை முறி | C04 மற்றும் C05 CIDA தரத்தைக் கொண்ட மழை நீரை அப்புறப்படுத்தும் நில வடிகாலமைப்பு ஒப்பந்தக் காரர்கள் | பொறியியல் பணிப்பாளர் (வடிகாலமைப்பு) தொலைபேசி: 011-2674809 |

விலைமனு ஆவணங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி) இரண்டு முறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

**முறை 01** - கொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து (www.colombo.mc.gov.lk) தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.

i. மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை பின்வரும் வகையில் செலுத்துதல் வேண்டும்.

அ) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் மக்கள் வங்கி நகர மண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கலாம்.

ஆ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.

➢ **வட்டார அலுவலகம் 04,**
**இல. 147, ஹைலெவல் வீதி, கிருலப்பனை,**
**கொழும்பு 06.**

➢ **வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு,**
**மாளிகாகந்த, கொழும்பு 10.**

ii. பற்றுச்சீட்டு / வங்கி வரவுத் துண்டை விலைமனு ஆவணங்களுடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும்.

iii. இணையதளத்திலிருந்து விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொண்ட விலைமனுதாரர்கள் பின்வரும் விபரங்களை dirproj@Colombo.mc.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அறிவித்தல் வேண்டும்.

1. நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி
2. தொடர்புகொள்ளும் தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி

**முறை 02** - நகர மண்டப வளவில் பெற்றுக்கொள்ளலாம்.

அ. ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவணக் கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும் 2023-03-22ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரையில் நகர மண்டப காசாளர் கருமபீடத்திற்கு செலுத்தி மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மாநகர பொறியியலாளர் திணைக்களத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

அ. கொடுப்பனவுகளை 2023-03-22ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் செலுத்துதல் வேண்டும்.

இ. நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான விலைமனு முறி/ பிணை விலைமனுக்கள் மூடப்படும் திகதியிலிருந்து 210 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைமனு முறி/ பிணை 2023.10.19ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைக்கோரல்கள் 2023.09.19ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். ரொக்கப் பணமாகச் செலுத்தப்படும் பிணை முறிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஈ. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளில் கொழும்பு-07, நகர மண்டபம், செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2023-03-23ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் உள்ளிடல் வேண்டும்.

உ. 2023-03-23ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும் என்பதுடன் இறுதி நேரத்திற்கு பின் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு அதன் பின்னர் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்து வரும் வேலை நாளில் 10.00 மணிக்கு விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர்.

ஊ. விலைமனுக்களின் விபரங்கள் விலைமனு ஆவணங்களுடன் வழங்கப்படும். 5.0 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட விலைமனுக்களுக்கு விலைமனுதாரர் பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவு செய்து கொண்ட பின் PCA 3 படிவத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**ஜே.எம். பத்ராணி ஜயவர்தன,**
**மாநகர ஆணையாளர்**
**கொழும்பு மாநகர சபை.**

வ/ப குருவிட்ட பலநோக்குக் கூட்டறவுச் சங்கம்
குருவிட்ட

## மீட்கப்படாத அடகுப் பொருட்களை பகிரங்க ஏலத்தில் விற்றல்

மக்கள் வங்கியின் அடகுப் பிரதிநிதிகளான பதிவு இல. ர/473 வரையறுக்கப்பட்ட குருவிட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் குருவிட்ட, எரந்த, தெப்பனாவ, பனுகுருபிட்டிய, கரபிஞ்சவத்த, பெரடைஸ்வத்த, தெவிபஹல, பாதகம கிராமிய வங்கிகளில் மற்றும் குருவிட்ட சமுரன் காப்பக அடகு நிலையம் மற்றும் பெரடைஸ் சமுரன் காப்பக அடகு நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு 2022.12.31ம் திகதிக்கு ஒரு வருடம் பூர்த்தியான இதுவரை மீட்கப்படாத அடகுப் பொருட்கள் கீழ்க் காணும் தினம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

| திகதி | இடம் | நேரம் |
|---|---|---|
| 2023.03.18 | குருவிட்ட கிராமிய வங்கி வளாகத்தில் | மு.ப. 8.30 முதல் பி.ப. 4.00 வரை |
| 2023.03.25 | குருவிட்ட கிராமிய வங்கி வளாகத்தில் | மு.ப. 8.30 முதல் பி.ப. 4.00 வரை |

**பொது முகாமையாளர்.**

**தலைமையகம்,**
**வ/ப குருவிட்ட ப.நோ.கூ. சங்கம்,**
**குருவிட்ட.**
**தொலைபேசி இல. 045-2262242, 045-2261685**


**Best way to fulfil your Future Dreams**

*Marriage Proposals*

in the

Sunday Observer


### சுகாதார சேவைத் திணைக்களம் – தென் மாகாணம்

## நாய்களை மலடாக்கும் நிகழ்ச்சித்திட்டம் – 2023

## கேள்வி அறிவித்தல்

2023 ஆம் அண்டிற்காக தென் மாகாணத்திறகுள் நாய்களை மலடாக்கும் நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்துமுகமாக தென் மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்தின் பெறுகைக்குழுவின் தலைவரால் கேள்விகள் கோரப்படுகின்றன.

01. கீழ்க்காணும் அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்யும் நிறுவனங்கள் மற்றும் தனி நபர்களிடமிருந்து இதற்காக விண்ணப்பிக்கலாம்.
    i. குறித்த விண்ணப்பதாரிகள் தகைமையுள்ள கால்நடை மருத்துவ அதிகாரிகளாக இருத்தல் வேண்டும் (கால்நடை மருத்துவ பட்டச்சான்றிதழ், கால்நடை மருத:துவ சபையின் பதிவுச் சான்றிதழ்)
    ii. விண்ணப்பதாரிகளால் ஒரு மாகாணத்ததை உள்ளடக்குமாறு குறைந்தபட்சம் ஒருவருட காலத்திற்குள் குறித்த நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்தியிருத்தல் வேண்டும் (குறித்த மாகாணத்தின் மாகாண சுகாதார சேவைப்பணிப்பாளரின் பரிந்துரையை சமர்ப்பித்தல் வேண்டும்)
02. கேள்வி விண்ணப்பங்களை 2023.03.02 ஆம் திகதி முதல் 2023.03.15ஆம் திகதிவரை வாரத்தின் வேலை நாட்களில் முற்பகல் 9.00 முதல் பி.ப.2.00 வரை கீழ்க்காணும் முகவரியில் அமைந்துள்ள தென் மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி விண்ணப்பங்களை பெற்றுக்கொள்வதற்காக மீளளிக்கப்படாத ரூபா 1000.00 மற்றும் மீளளிக்கப்படும் ரூபா 50,000.00 வைப்பை இத்திணைக்களத்தின் பிரதம கணக்காளரிடம் காசாக செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு மற்றும் மேற்படி ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.
03. அவ்வாறு குறிப்பிடப்படும் கேள்வி ஆவணங்களை முறையாக பூர்த்தி செய்து 2023.03.17 மு.ப.10.00 இற்கு முன்பு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கேள்விகள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் “நாய்களை மலடாக்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்கான விலைமனுக்கள் 2023” என்று குறிப்பிடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
04. 2023.03.17ம் திகதி மு.ப.10.00 இற்கு கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் அன்றே மு.ப.10.30 இற்கு கேள்விகள் திறக்கப்படுவதுடன், கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவருக்கு கேள்வி ஆவணங்கள் திறக்கப்படும் வேளையில் சமுகமளிக்கலாம். மேலதிக விபரங்களுக்கு மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்/பிரதம கணக்காளரிடம் விசாரித்து அறியலாம். (தொலைபேசி இல - 091-2234980/091-2224609/091-2231620)
05. தேர்ந்தெடுக்கப்படும் வழங்குநர்கள் தென் மாகாணத்திற்குள் நாய்களை மலடாக்குவதற்கு இணங்குதல் வேண்டும்.
06. குறித்த கேள்விகளை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை தென் மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்தின் பெறுகைக்குழுவிற்கு உரியது.

**தலைவர்,**
**மாகாண பெறுகைக்குழு,**
**சுகாதாரத் திணைக்களம்,**
**இல.15A, கீழ் டிக்சன் வீதி,**
**காலி**


* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want
Classified
Green Light for Online Transfer
For 15 Words Rs. 500/-
(Additional each word Rs. 20/-)
Call :- Ramani - 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067
E-mail - classified@lakehouse.lk
Lake House Branch Acc. No. 000000377


## விலைமனுக்கோரல்களுக்கான அழைத்தல்

### அப்பியாசப் புத்தகங்கள் மற்றும் காகிதாதி அம்சங்களை உள்ளடக்கியுள்ள பரிசுப் பொதிகளை வழங்கல்

### LPA/04/2023

அப்பியாசப் புத்தகங்கள் மற்றும் காகிதாதி அம்சங்களை உள்ளடக்கியுள்ள பரிசுப் பொதிகளை வழங்குவதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. விலைமனுக்கோரல் படிவங்களை வார நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் கூட்டாண்மை அலுவல்கள் மற்றும் நிருவாக திணைக்களத்தின் பிரதி பொது முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

2023 மார்ச் 14 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கோரல்கள் தபாலுறையொன்றில் சேர்க்கப்பட்டு முத்திரையிடப்பட்டு அத்தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **“Quotations for the Gift Parcels”** என குறிப்பிடப்பட்டு பதிவுத் தபாலில் பெறுகைக்கான தலைவர், த அஸோசியேட்டட் நியுஸ்பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டட், இல. 35, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு-10 என முகவரியிடப்பட்டு அனுப்பப்படல் வேண்டும் அல்லது பெறுகைத் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடப்படுதல் வேண்டும். விலைமனுக்கோரல்கள் அவைகளின் மூடும் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவரின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதியானவர் இவ்வேளையில் சமுகமளிக்கலாம்.

சித்திகரமான விலைமனுதாரர் விலைமனுக்கோரலின் பிரகாரம் தரமான அம்சங்களை வழங்கல் வேண்டுமென்பதுடன் அவைகளை பொதியிடல் செயற்பாட்டின் போது கம்பனியின் பிரதிநிதிகளினால் பரீட்சிக்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட பொதிகள் 2023 மார்ச் 14 ஆம் திகதிக்கு முன்னராக ஒப்படைக்கப்படல் வேண்டும்.

பெற்றுக் கொண்ட எந்தவொரு அல்லது அனைத்து முன்வைப்புக்களையும் எந்தவொரு காரணத்தையும் முன்வைக்காமல் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கான ஏகஉரிமையை த அஸோசியேட்டட் நியுஸ்பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டட், ஆனது கொண்டுள்ளது.

**பெறுகைத் தலைவர்,**
**த அஸோசியேட்டட் நியுஸ்பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டட்,**
**இல.: 35, லேக் ஹவுஸ், டி.ஆர். விஜேவர்தன மாவத்தை,**
**கொழும்பு-10.**

LAKE HOUSE

**விபரங்களுக்கு பின்வரும் தொலைபேசி இலக்கங்கள் வழியாக தொடர்பு கொள்ளவும்.**
**தொலைபேசி: 011-2429422, 2429451, 2429629.**

## விலைமனுக்களுக்கானஅழைத்தல்

## ஸ்ரீ ஜயவர்தனபுரபல்கலைக்கழகம்

| Loan No. and Title | 3699-SRI: Science and Technology Human Resource Development Project |
|---|---|
| Contract No. | Title |
| MOE/STHRD/SJ/E34 - | Procurement of supply, delivery and installation of Mechatronics and Robotic equipment for the Department of Mechanical Engineering, Faculty of Engineering , University of Sri Jayawardenepura (the ‘‘Goods”) |
| MOE/STHRD/SJ/E62 | Procurement of supply, delivery and installation of Server Racks, Higher Performance Servers and Backup Power Units for Department of Computer Engineering, Faculty of Engineering, University of Sri Jayawardenepura (the “Goods”) |
| MOE/STHRD/SJ/E69 | Procurement of supply, delivery and installation of Mechatronics items for the Department of Mechanical Engineering, Faculty of Engineering, University of Sri Jayawardenepura (the “Goods”) |
| MOE/STHRD/SJ/E77 | Procurement of supply, delivery and installation of Electrical, Electronic and Telecommunication Lab Equipment of the Department of Electrical and Electronic Engineering, Faculty of Engineering, University of Sri Jayawardenepura (the “Goods”) |
| MOE/STHRD/SJ/E79 | Procurement of supply, delivery and installation of procurement of Biomedical Lab Equipment 2 for the Department of Electrical and Electronic Engineering, Faculty of Engineering, University of Sri Jayawardenepura (the “Goods) |
| MOE/STHRD/SJ/E80 | Procurement of supply, delivery and installation of Equipment for the High Voltage Laboratory of the Department of Electrical and Electronic Engineering, Faculty of Engineering, University of Sri Jayawardenepura (the “Goods”) |
| MOE/STHRD/SJ/E57 | Procurement of supply, delivery and installation of equipment for the Traffic, Road Safety and Intelligent Transportation Systems Laboratory of the Department of Civil Engineering, Faculty of Engineering, University of Sri Jayawardenepura (the “Goods”) |
| Deadline for submission of Bids | 07.04.2023 – 10.00 hours (local time) |

1. இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து(ADB) 145 மில்லியனுக்கு சமமான நிதியை கல்வி அமைச்சின் கீழுள்ள விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனிதவள அபிவிருத்தி செயற்றிட்ட அமுல்நடாத்தலின் (STHRD Project) ஆகுசெலவிற்காக பெற்றிருப்பதுடன், இந்தநிதியிடல் பெறுகையின் பகுதியொன்றை மேலே பெயரிடப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் கீழுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. விலைமனுக்கோரலில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தகுதியுள்ள வளநாடுகளின் விலைமனுதாரர்கள் பங்குபெற்றலாம்.
2. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக (‘‘பண்டங்கள் எனஅழைக்கப்படுவது’’)பொறியியல் பீட, சிவில் பொறியியல் திணைக்களத்திற்காக மேலே குறிப்பிட்டுள்ள பெறுகைகளுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக (‘‘கொள்வனவுக்காரர் எனஅழைக்கப்படுவது’’) விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனிதவள அபிவிருத்தி செயற்றிட்ட, செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளரின் சார்பாக பல்கலைக்கழக பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். ஒப்பந்தத்தை வழங்கும் திகதியிலிருந்து பூர்த்தி செய்யப்பட வேண்டிய காலப்பகுதியானது 90 நாட்களாகும்.
3. இந்தவிலைமனுக்கோரலில் பங்குபெறுவதற்காகவிலைமனுதாரர் பின்வரும் முக்கியதகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.

| பெறுகைசெயற்பாட்டு இலக்கங்கள் மற்றும் விளக்கம் | கடந்த 5 வருடங்களில் பிரதான வழங்குனராக கீழே குறிப்பிட்டுள்ள பெறுமதியில் ஆகக் குறைந்தது 2 ஒப்பந்தங்களை 6 ஆம் பிரிவில் விபரிக்கப்பட்ட வாறான நிகரான தன்மை மற்றும் சிக்கல் தன்மையில் சித்திகரமாக பூர்த்தி செய்திருத்தல்- இ.ரூபாவில். (2018.01.01 ஆம் திகதியி லிருந்து 2022.12.31 ஆம் திகதி வரையிலான 5 வருடங்களுக்கானது) | கடந்த 5 வருடங்களில் பூர்த்தி செய்யப்பட்ட அல்லது நிறை வேற்றப்பட்டு கொண்டிருக்கும் ஒப்பந்தங்களுக்காக விலைமனுதாரரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த பணக் கொடுப்பனவுகளாக கணக்கீடு செய்யப்பட்டுள்ள பின்வருவன வற்றிக்கான ஆகக் குறைந்த வருடாந்த சராசரி நிதிப்புரள்வு. (2018.01.01 ஆம் திகதியிலிருந்து 2022.12.31 ஆம் திகதி வரை யிலான 5 வருடங்களுக்கானது) - இ.ரூபாவில். |
|---|---|---|
| MOE/STHRD/SJ/E34- Procurement of supply, delivery and installation of Mechatronics and Robotic equipment for the Department of Mechanical Engineering | 25 மில்லியன் | 35 மில்லியன் |
| MOE/STHRD/SJ/E62- Procurement of supply, delivery and installation of Server Racks, Higher Performance Servers and Backup Power Units for Department of Computer Engineering | 25 மில்லியன் | 35 மில்லியன் |
| MOE/STHRD/SJ/E69- Procurement of supply, delivery and installation of Mechatronics items for the Department of Mechanical Engineering | 25 மில்லியன் | 35 மில்லியன் |
| MOE/STHRD/SJ/E77- Procurement of supply, delivery and installation of Electrical, Electronic and Telecommunication Lab Equipment of the Department of Electrical and Electronic Engineering | 30 மில்லியன் | 50 மில்லியன் |
| MOE/STHRD/SJ/E79- Procurement of supply, delivery and installation of procurement of Biomedical Lab Equipment 2 for the Department of Electrical and Electronic Engineering | 50 மில்லியன் | 75 மில்லியன் |
| MOE/STHRD/SJ/E80- Procurement of supply, delivery and installation of Equipment for the High Voltage Laboratory of the Department of Electrical and Electronic Engineering | 38 மில்லியன் | 50 மில்லியன் |
| MOE/STHRD/SJ/E57- Procurement of supply, delivery and installation of equipment for the Traffic, Road Safety and Intelligent Transportation Systems Laboratory of the Department of Civil Engineering | 20 மில்லியன் | 30 மில்லியன் |

4. பகிரங்க போட்டிரீதியிலான விலைமனுக்கோரலானது ஆஅவ இன் பண்டங்களின் பெறுகை தனி-கட்ட–ஒரு-உறை நடைமுறைக்கமைவாக நடாத்தப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு தகுதியுள்ளநாடுகளின் அனைத்து விலைமனுதாரர்களும் பங்குபெற்றலாம்.
5. மேலதிக தகவலை பெறுவதற்காகவும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிப்பதற்காகவும்,விலைமனுதாரர் பின்வருபவருடன் தொடர்பு கொள்ளல் வேண்டும்.

**பெறுகைக்கான சிரேஷ்ட அலுவலர்,**
**செயற்றிட்ட அமுல்நடாத்தல் பணிமனை,**
**விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனிதவள அபிவிருத்தி செயற்றிட்டம்,**
**பொறியியல் பீடம்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்,**
**இல. 41,லும்பினி அவென்யு, இரத்மலான,**
**இலங்கை ZIP code: 10390.**
**தொலைபேசி: 071-4415052/077-2846811/011-2721271**
**மின்னஞ்சல்: spopiu_foe@sjp.ac.lk**

6. ஆங்கிலத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்வதற்காக, தகுதியுள்ள விலைமனுதாரர் ஒவ்வொரு ஆவணத்திற்கும் ரொக்கப் பணத்தில் ஐந்தாயிரம் இலங்கை ரூபாவை மாத்திரம் (5000 இ.ரூபா) செலுத்திய பின்னர், மேலே குறிப்பிட்டுள்ள பெறுகை இலக்கங்களை குறிப்பிட்டு விலைமனுக்கோரல் ஆவணங்களை கோரி மேலேயுள்ள முகவரிக்கு எழுதுதல் வேண்டும். ஆவணம்/ஆவணங்கள் 2023.03.30 ஆம் திகதியன்றுபி.ப. 3 மணி வரையுமே வேலைநாட்களில் வழங்கப்படும். இழப்பு அல்லது தாமதமான ஒப்படைத்தல் ஆகியவற்றிற்கான கடப்பாடானது ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
7. விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு விலைமனுப்பிணையின் மூலப்பிரதியுடன் 2023.04.07 ஆம் திகதியன்றுமு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக பின்வரும் முகவரிக்கு உங்கள் விலைமனுவை ஒப்படைக்கவும்.

**செயற்றிட்டபிரதிப் பணிப்பாளர்,**
**செயற்றிட்ட அமுல்நடாத்தல் பணிமனை,**
**STHRD செயற்றிட்டம்,**
**பொறியியல் பீடம்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்,**
**இரத்மலான.**

பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் ஒவ்வொரு பெறுகைக்கும் இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி ஆகியன தனித்தனியாக அடக்கப்பட்டு முறையே ‘மூலப்பிரதி’ மற்றும் ‘நகல்பிரதி’ என அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்படல் வேண்டும். அதன் பின்னர் இவ்விரண்டு தபாலுறைகளும் ஒரு உறையில் சேர்க்கப்பட்டு முத்திரையிடப்பட்டு அதனது இடது பக்க மேல் மூலையில் பின்வருமாறு அடையாளமிடப்படல் வேண்டும்.

| Contract Number | Title |
|---|---|
| MOE/STHRD/SJ/E34 - | Procurement of supply, delivery and installation of Mechatronics and Robotic equipment for the Department of Mechanical Engineering |
| MOE/STHRD/SJ/E62 | Procurement of supply, delivery and installation of Server Racks, Higher Performance Servers and Backup Power Units for Department of Computer Engineering |
| MOE/STHRD/SJ/E69 | Procurement of supply, delivery and installation of Mechatronics items for the Department of Mechanical Engineering |
| MOE/STHRD/SJ/E77 | Procurement of supply, delivery and installation of Electrical, Electronic and Telecommunication Lab Equipment of the Department of Electrical and Electronic Engineering |
| MOE/STHRD/SJ/E79 | Procurement of supply, delivery and installation of procurement of Biomedical Lab Equipment 2 for the Department of Electrical and Electronic Engineering |
| MOE/STHRD/SJ/E80 | Procurement of supply, delivery and installation of Equipment for the High Voltage Laboratory of the Department of Electrical and Electronic Engineering |
| MOE/STHRD/SJ/E57 | Procurement of supply, delivery and installation of equipment for the Traffic, Road Safety and Intelligent Transportation Systems Laboratory of the Department of Civil Engineering |

அனைத்து பெறுகைகளுக்கான விலைமனு முன்னோடிக் கூட்டமானது ஒன்லைனில் அல்லது இரத்மலான, லும்பினி அவென்யு 41 ஆம் இலக்கத்திலுள்ள பொறியியல் பீட சபை அறையில் பின்வருமாறு நடைபெறும்.

| Contract Number | Pre-bid meeting Date and Time |
|---|---|
| MOE/STHRD/SJ/E34 - | 13th March at 10.00 a.m. |
| MOE/STHRD/SJ/E62 | 16th March at 10.00 a.m |
| MOE/STHRD/SJ/E69 | 13th March at 10.00 a.m |
| MOE/STHRD/SJ/E77 | 16th March at 10.00 a.m |
| MOE/STHRD/SJ/E79 | 16th March at 10.00 a.m |
| MOE/STHRD/SJ/E80 | 16th March at 10.00 a.m |
| MOE/STHRD/SJ/E57 | 13th March at 10.00 a.m |

8. விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலுக்கான இறுதி நேரத்தின் பின்னர் உடனடியாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்களபெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுரபல்கலைக்கழகம்,**
**நுகேகொட.**

**திகதி: 02.03.2023.**

# இலங்கை கிரிக்கெட் சபை தேர்தலில் சம்மி தரப்பினர் மாத்திரம் வேட்புமனு

## மே 20இல் தேர்தலை நடத்தத் திட்டம்




2023–25ஆம் ஆண்டின் இலங்கை கிரிக்கெட் சபைக்கான புதிய நிர்வாகக் குழுவை தேர்வு செய்வதற்கான வேட்புமனுத் தாக்கல் இலங்கை கிரிக்கெட் சபையால் அமைக்கப்பட்ட குழுவால் கடந்த செவ்வாய்க்கிழமை (28) மாலை 3.30க்கு நிறுவடைந்த நிலையில், இந்தத் தேர்தலில் போட்டியிட ஒரு தரப்பினர் மாத்திரமே வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளனர்.

தற்போதைய தலைவர் ஷம்மி சில்வா தரப்பினரைச் சேர்ந்த 4 குழுக்கள் மாத்திரம் தேர்தலுக்காக வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர்.

இலங்கை கிரிக்கெட் சபையின் தேர்தல் வரும் மே 20ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதன்படி தலைவர் பதவிக்கு தற்போதைய தலைவர் ஷம்மி சில்வா மூன்றாவது தடவையாக வேட்புமனு தாக்கல் செய்திருப்பதோடு, தற்போதைய துணைத் தலைவர் ஜயந்த தர்மதாச மற்றும் கிரிக்கெட் போட்டிக் குழு பணிப்பாளர் சமந்த தொடன்வல ஆகியோரும் தலைமை பதவிக்காக வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர்.

தற்போதைய தலைவர் மொஹான் டி சில்வா தவிர செயலாளர் பதவிக்காக ரொஷான் இத்தமல்கொட, சமந்த தொடன்வல மற்றும் நலின் அபொன்சு ஆகியோரும் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளனர்.

இரு துணைத் தலைவர் பதவிக்காக ஐந்து வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருப்பதோடு தற்போதைய உப தலைவர்களான ஜயந்த தர்மதாச மற்றும் ரவீன் விக்ரமரத்ன ஆகியோர் தவிர வினோதன் ஜோன், குமார ஹலபுகே மற்றும் சமந்த தொடன்வல ஆகியோரும் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளனர்.

பொருளாளர் பதவிக்காக தற்போதைய பொருளாளர் லசந்த விக்ரமசிங்க தவிர சுஜீவ கொடலியத்தவும் போட்டியிடுகிறார். உப செயலாளர் பதவிக்காக கிறிசாந்த ஹப்புவத்த, டிலான் பொலன்னோவிட்ட, நிசித்த ரூபசிங்க மற்றும் ஷம்மி குணசேகர ஆகியோர் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளனர். இது தவிர உப பொருளாளர் பதவிக்காக நலீன் அபொன்சு, கித்சிறி டி சில்வா மற்றும் சுஜீவ கொடலியத்த ஆகியோர் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளனர்.

ஷம்மி சில்வா 2021 மே மாதம் இலங்கை கிரிக்கெட் சபை தலைவராக போட்டியின்றி தெரிவாகி இருந்தார். அப்போது எதிர்த்துப் போட்டியிட்ட கே. மதிவானன் தலைமையிலான குழு சரிசமமாக போட்டி இல்லை எனக் கூறி தேர்தலில் இருந்து விலகிக் கொண்டது.

இந்நிலையில் இலங்கை கிரிக்கெட் சபையின் முன்னாள் துணைத் தலைவரான மதிவானன் இம்முறை தேர்தலிலும் வேட்புமனுத் தாக்கல் செய்யவில்லை.

“முந்தைய விளையாட்டு ஒழுங்கு விதியின் கீழ் தேர்தலை நடத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து வேட்புமனுத் தாக்கல் செய்யவில்லை” என்று அவர் குறிப்பிட்டுள்ளார். கடந்த டிசம்பரில் விளையாட்டுத் துறை அமைச்சர் வெளியிட்ட திருத்தப்பட்ட ஒழுங்குவிதியின் கீழ் தேர்தலை நடத்த அவர் ஆதரவு வெளியிட்டுள்ளார்.

இந்த புதிய ஒழுங்கு விதியில் வேட்பாளரின் தவணைக்காலம் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதோடு 70 வயதுக்கு மேற்பட்டவர்கள் தேசிய விளையாட்டு சங்கங்களுக்கு போட்டியிடுவதும் தடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனினும் இந்த திருத்தப்பட்ட ஒழுங்குவிதிகளை ஜூன் மாதம் வரை செயற்படுத்த மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த திங்கட்கிழமை இடைக்காலத் தடை உத்தரவை பிறப்பித்தது. இந்தத் தடை உத்தரவுக்கு எதிரான அமைச்சர் உச்ச நீதிமன்றம் செல்லவிருப்பதாக தெரியவருகிறது.

# யாழ். புனித ஜோன்ஸ், சாஹிரா போட்டிகள் சமநிலையில் முடிவு



பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுக்கு உட்பட்ட இரண்டு நாள் கிரிக்கெட் போட்டிகளில் கொழும்பு சாஹிரா கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் புனித ஜோன்ஸ் கல்லூரிகள் ஆடிய போட்டிகள் சமநிலையில் முடிவுற்றன.

வென்னப்புவ புனித ஜோசப் வாஸ் கல்லூரிக்கு எதிராக கடந்த செவ்வாய்க்கிழமை (28) நிறைவடைந்த போட்டியில் சாஹிரா கல்லூரி முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்று திறமையை வெளிப்படுத்தியது.

கட்டுநாயக்கவில் நடைபெற்ற இந்தப் போட்டியில் புனித ஜோசப் வாஸ் கல்லூரி முதல் இன்னிங்ஸுக்கு 179 ஓட்டங்களை பெற்ற நிலையில் சாஹிரா தனது முதல் இன்னிங்ஸில் 194 ஓட்டங்களை குவித்தது. உமர் இம்ரான் 45 ஓட்டங்களை பெற்றார்.

இந்நிலையில் 120 ஓட்ட வெற்றி இலக்கை நோக்கி இரண்டாவது இன்னிங்ஸை ஆடிய சாஹிரா கல்லூரி 5 விக்கெட் இழப்புக்கு 100 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஆட்ட நேரம் முடிவுற்றது.

இதனிடையே தனது சொந்த மைதானத்தில் மாத்தறை, ராகுல கல்லூரியை எதிர்த்தாடிய புனித ஜோன்ஸ் கல்லூரி துடுப்பாட்டத்தில் சோபித்தது. ராகுல கல்லூரி முதல் இன்னிங்ஸுக்கு 260 ஓட்டங்களை பெற்ற நிலையில் யாழ். புனித ஜோன் முதல் இன்னிங்ஸில் 9 விக்கெட்டுகளை இழந்து 288 ஓட்டங்களை பெற்றது.

கமலபாலம் சபேசர் சதம் (127) பெற்றதோடு சங்கீத் ஸ்மித் 77 ஓட்டங்களை குவித்தார்.

ஆட்டத்தின் கடைசி நாளான செவ்வாயன்று தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆடிய ராகுல கல்லூரி ஆட்டநேர முடிவில் 8 விக்கெட் இழப்புக்கு 96 ஓட்டங்களை பெற்றிருந்தது.



கலாவெவ விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற கலாவெவ பவர் ஸ்டார் சம்பியன் கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் சம்பியனான கலாவெவ கெபிட்டல் அணியை காணலாம். (படம்: கல்நேவ தினகரன் விசேட நிருபர்)

# 'வீரர்களின் போர்' நாளை ஆரம்பம்



யாழ். விசேட நிருபர்

‘வீரர்களின் போர்’ என அழைக்கப்படும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மற்றும் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணிகள் இடையிலான 21ஆவது மாபெரும் கிரிக்கெட் போட்டி நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இரு கல்லூரிகளின் பழைய மாணவர்களின் அனுசரணையுடன் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இந்த இரு நாள் போட்டி நடைபெறவுள்ளது. இதுவரை நடைபெற்ற போட்டிகளில் பதினொரு தடவை சமநிலையில் முடிந்ததுடன் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி ஐந்து தடவையும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி நான்கு தடவையும் வெற்றி பெற்றுள்ளன. இம்முறை சசிகுமார் கஜித் தலைமையில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியும் ஜெயகாந்தன் கௌரி சங்கர் தலைமையில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் களமிறங்கவுள்ளன.

# பிரச்சினையை தீர்க்க இலங்கை கால்பந்து அணி தலைவர் சுஜான் பெரேரா அழைப்பு



இலங்கை கால்பந்து சம்மேளனத்தை சூழ ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும்படி இலங்கை கால்பந்து அணித் தலைவர் சுஜான பெரேரா வலியுறுத்தியுள்ளார். இது வீரர்களுக்கு பாதகமாக உள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

பேஸ்புக்கில் பதிவிட்டிருக்கும் அவர், 2023 சாஃப் சம்பியன்சிப் மற்றும் உலகக் கிண்ண பிளேஓப் போட்டிகள் அனைத்து இந்த ஆண்டில் அட்டவணைப்படுத்தப்பட்டிருக்கும் நிலையில் 2023 இலங்கை கால்பந்து வீரர்களுக்கு முக்கியமானது என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

முந்தைய நான்கு ஆண்டுகள் கால்பந்து ஆடாவிட்டால் கால்பந்து அணிக்கு எந்த போட்டியும் கிடைக்காது என்று சுஜான் பெரேரா கூறினார். “வீரர்களாகிய எம்மால் வேண்டுகோள் விடுக்க மாத்திரமே முடியும். அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு மாத்திரமே இதனை கூடிய விரைவில் தீர்க்க முடியும். மீண்டும் விளையாடுவதற்கு உதவி புரியுங்கள்” என்று அவர் தனது பதிவில் கேட்டுக்கொண்டுள்ளார்.

இலங்கை கால்பந்து சம்மேளத்தின் மீது சர்வதேச கால்பந்து சம்மேளனம் தடை விதித்ததற்கு கால்பந்து நிர்வாகத்தினர் மீது கால்பந்து அணித் தலைவர் குற்றம்சாட்டியுள்ளார். பிஃபா தடையினால் பல கால்பந்து வீரர்கள், பயிற்சியாளர் மற்றும் ஏனைய ஊழியர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மூன்றாம் தரப்பின் தலையீட்டை காரணம் காட்டி இலங்கை கால்பந்து சம்மேளனம் மீது கடந்த ஜனவரி 21 ஆம் திகதி பிஃபா தடை விதித்ததோடு இதனால் இலங்கை கால்பந்து அணிக்கு சர்வதேச போட்டிகளில் ஆட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

## சர்வதேச செய்திகள்

# கிரீஸில் இரு ரயில்கள் நேருக்கு நேர் மோதி பயங்கர விபத்து: 36 பேர் பலி



கிரீஸில் இரு ரயில் வண்டிகள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் குறைந்தது 36 பேர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

மத்திய நகரான லொரிஸாவுக்கு வெளியில் கடந்த செவ்வாய்க்கிழமை (28) பின்னேரம் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. ஏதென்ஸில் இருந்து வடக்கு நகரான தெசலோனிக்கியை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த பயணிகள் ரயில் ஒன்று தெசலோனிக்கியில் இருந்து வந்து கொண்டிருந்த சரக்கு ரயில் ஒன்றுடன் மோதியுள்ளது.

வேகமாக மோதியதால் பயணிகளை ஏற்றியிருந்த சில ரயில் பெட்டிகள் வெடித்து தீப்பிழம்பு ஏற்பட்டுள்ளது.

“10 விநாடிகளில் பயங்கரமான பாரிய வெடிப்பு ஒன்றை நாம் கேட்டோம்” என்று ரயில் பெட்டியில் இருந்து பாய்ந்து உயிரை காத்துக் கொண்ட 28 வயது பயணியான ஸ்டார் ஜியோஸ் மினேனிஸ் தெரிவித்துள்ளார்.

“வண்டி எமது பக்கமான விழுவதற்கு முன்னர் நாம் ஒரு பக்கமாக சாய்ந்திருந்தோம். கேபிள்கள் விரைவாக தீப்பிடித்து அச்சம் நிலவியது. இடது மற்றும் வலது பக்கமாக தீ பரவியது” என்று அவர் தனது பயங்கர அனுபவத்தை விபரித்துள்ளார்.

விபத்தினால் பயணிகள் ரயிலின் முதல் நான்கு பெட்டிகளும் தடம்புரண்டு முதல் இரு பெட்டிகளும் தீப்பற்றி கிட்டத்தட்ட முழுமையாக கருகிவிட்டதாக டெசாலி பிராந்திய ஆளுநர் கொன்சன்டினோஸ் அகொரஸ்டோஸ் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

ஒரே தண்டவாளத்தில் இரு ரயில்களும் ஒன்றுடன் ஒன்று மோதியதாக அவர் கூறினார். “ஒன்றுக்கு மற்றது வருவது தெரியாத அளவுக்கு அவை அதிக வேகமாக பயணித்துக்கொண்டிருந்தன” என்று ஆளுநர் குறிப்பிட்டார்.

ரயில் பெட்டிகள் தடம்புரண்டு இருப்பது, சரக்கு ரயிலில் இருந்த கொள்கலன்கள் அருகில் இருக்கும் வீதியில் வீசப்பட்டு பெரும் அழிவு ஏற்படுத்தி இருக்கும் காட்சிகள் அங்கிருந்து வெளியாகியுள்ளன.

ரயில் பெட்டிகளுக்குள் சிக்கி இருக்கும் பயணிகளை தேடும் மீட்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன. சுற்றியுள்ள திறந்தவெளி பகுதியிலும் இரவு நேரத்தில் தேடுதல் நடத்தப்பட்டது.

சிறுகாயங்களுடன் இருப்பவர்கள் உட்பட சுமார் 250 பயணிகள் விபத்து இடம்பெற்ற பகுதியில் இருந்து பஸ் வண்டி மூலம் வெளியேற்றப்பட்டனர்.

சம்பவ இடத்தில் பல டஜன் அம்புலன்ஸ் வண்டிகள் விரைந்ததோடு, தீக்காயத்திற்கு உள்ளானவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மீட்புப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில், பலி எண்ணிக்கை மேலும் உயர வாய்ப்புள்ளதாக கருதப்படுகிறது.

# 'கொவிட் ஆய்வுகூடத்தில் கசிவு'

## எப்.பி.ஐ தலைவர் தகவல்




சீன அரச கட்டுப்பாட்டு ஆய்வுகூடம் ஒன்றே கொவிட்–19 தொற்றின் தோற்றமாக இருக்கலாம் என அமெரிக்க உளவுப் பிரிவான எப்.பி.ஐ நம்புகிறது என்று அதன் பணிப்பாளர் கிறிஸ்டோபர் விராய் தெரிவித்துள்ளார்.

“ஆய்வுகூட சம்பவம் ஒன்றே பெருந்தொற்றின் மூலமாக இருக்க அதிக வாய்ப்பு உள்ளது என்று எப்.பி.ஐ சில காலத்திற்கு முன்னர் மதிப்பீடு செய்துள்ளது” என்று பொக்ஸ் நியூஸ் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா வைரஸ் எவ்வாறு தோன்றியது என்பது பற்றி எப்.பி.ஐயின் இரகசிய முடிவு பற்றி பொதுவெளியில் உறுதி செய்யப்படுவது இது முதல் முறையாகும்.

வூஹான் நகரில் ஆரம்பமான கொரோனா வைரஸ் ஆய்வுகூடத்தில் இருந்து கசிந்ததாகக் கூறப்படுவதை சீனா மறுப்பதோடு அதனை அவதூறான குற்றச்சாட்டு என்று கூறுகிறது. எனினும் வூஹான் நகரில் இருக்கும் கடல் உணவு மற்றும் விலங்குச் சந்தையில் இருந்து இந்த வைரஸ் மனிதனுக்கு பரவி இருக்கலாம் என்று சில ஆய்வுகள் கூறுகின்றன.

கொரோனா வைரஸ்கள் குறித்து ஆய்வு நடத்தி வந்த உலகின் முன்னணி வைரஸ் ஆய்வுகூடம் ஒன்றான வூஹான் வைரஸ் ஆய்வு நிறுவனம் இந்த சந்தையில் இருந்து 40 நிமிடங்கள் பயணிக்கும் தொலைவில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நைஜீரிய ஜனாதிபதியாக தெரிவானார் போலா டினுபு



நைஜீரியாவின் சர்ச்சைக்குரிய ஜனாதிபதி தேர்தலில் ஆளும் கட்சி வேட்பாளர் போலா டினுபு வெற்றியை அறிவித்துள்ளார்.

70 வயது அனுபவ அரசியல்வாதியான டினுபு 36 வீத வாக்குகளை வென்றிருப்பதாக உத்தியோகபூர்வ முடிவு தெரிவிக்கிறது. அவரது பிரதான போட்டியாளரான அடிகு அபூபக்கர் 29 வீத வாக்குகளையும் தொழில் கட்சியின் பீட்டர் ஒபி 25 வீத வாக்குகளையும் வென்றிருக்கும் நிலையில் அவர்களது கட்சிகள் இந்தத் தேர்தலை நிராகரித்துள்ளன. மீண்டும் தேர்தலை நடத்தவும் கோரியுள்ளன.

நைஜீரியாவின் செல்வந்த அரசியல்வாதிகளில் ஒருவரான டினுபு, தான் ஆளுநராக இருந்த லாகோஸ் நகரை கட்டியெழுப்பியதை மையமாக வைத்து தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 மார்ச் மாதம் 2ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.